உதயன்

Uthayan - A lively National Tamil Daily

காலநிலை
மேக மூட்டமான காலநிலை தாணப்படும். காற்று மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் வீசும்.

சுடர்: 30 கதிர்: 009 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 19, வெள்ளிக்கிழமை 05.12.2014

தமிழர் முழுவுக்கு அரசு அலரம்

நிமாலின் சகோதரிக்கு காணி வழங்கியது தவறு

யாழ்ப்பாணம், டிசெ. 05

கொழும்பு அரசின் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் சகோதரிக்கு, வெலிஓயா பிரதேசத்தில் காணி வழங்கியமை தவறு என்று சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினரும், எதிர்க்கட்சி உறுப்பினருமான ஜெயதிலக, வடக்கு மாகாணத்தைச் சாராத எவருக்கும் இந்த மாகாணத்தில் காணி வழங்கக் கூடாது என்று தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முன்வைத்த பிரேரணை மீது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பக்.25

அனல் மின் நிலையத்தை அனுமதிக்க கூடாது

யாழ்ப்பாணம், டிசெ.5

சுன்னாகம் அனல் மின் நிலையத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கோ அல்லது வடக்கில் புதிதாக வேறு அனல்மின்நிலையங்களை அமைப்பதற்கோ மத்திய சுற்றாடல் அதிகார சபை அனுமதி வழங்கக் கூடாது என்று வடக்கு மாகாண சபையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சுன்னாகம் கழிவு ஒயில் தொடர்பிலான பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றியிருந்தார். அந்தப் பிரேரணையில் , சுன்னாகம் பிரதேசத்து நிலத்தடி நீரில் மனித ஆரோக்கியத்துக்கும், விவசாயத்துக்கும் தீங்குகளை விளைவிக்கக்கூடிய விதத்தில் எண்ணெய் மாசாகக் கலந்துள்ளமைக்குச் சுன்னாகம் அனல் மின்நிலைய வளாகத்தில் இருந்து வெளியேறிய கழிவு டீசலே காரணம்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்

பக்.25

உடன் அறிவிக்குமாறு தமிழ்க் கூட்டமைப்பிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ.5

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று அரசு நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றாது. தமது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் ஜோன் செனவிரட்ன கோரிக்கை விடுத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளும், வாக்குறுதிகளும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

"எதிரணி பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகள் என்பன மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. அவர் அண்மையில் சக கட்சிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் சிக்கல் நிலவுகின்றது. ஐக்கிய தேசியக்கட்சியுடன்ஓர் ஒப்பந்தத்தையும், ஜாதிக ஹெல உறுமயவுடன் இன்னுமொரு ஒப்பந்தத்தையும் செய்துகொண்டுள்ளார். ஸ்திரமான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துகொள்ள முடியாத குழப்பநிலையிலேயே தற்போது எதிரணி இருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது தொடர்பிலும் எதிரணியின் கூட்டுக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றமையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. மைத்திரிபால, சந்திரிகா, ரணில் ஆகியோர் அதனை இல்லாது செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். எனினும், ஜாதிக ஹெல உறுமய, சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி ஆகிய கட்சிகள் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றன."– என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திரிகா இரகசியப்பேச்சுநடத்தியுள்ளார். இதன்போதும்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளார்

பக்.25



பாப்பரசரின் இலங்கைப் பயணம் குறித்து ஆராய்வதற்காக வத்திக்கான் அதிகாரிகள் நேற்று மடுவுக்குப் பயணம் மேற்கொண்டனர். பாப்பரசரின் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட முக்கிய அதிகாரிகள் சிலர் இதில் உள்ளடங்கியிருந்தனர். இவர்கள் நேற்று மடு தேவாலயத்துக்குப் பயணம் மேற்கொண்டு, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மற்றும் குருக்களுடன் பாப்பரசரின் பயண ஏற்பாடுகள் குறித்து நேரில் ஆராய்ந்தனர். இதன்போது இலங்கை இராணுவ அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் உடனிருந்தனர். (த-56)

ஏ.ரி.எம். மோசடி

வடமராட்சியில் மூவர் சிக்கினர்
69க்கும் மேற்பட்ட 'ஏ.ரி.எம்.' அட்டைகள் மீட்பு

நெல்லியடி, டிசெ.5

இலங்கை முழுவதிலும் வங்கிகளில் போலி 'ஏ.ரி.எம்' அட்டைகளைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிகண்டிப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து 69 'ஏ.ரி.எம்.' அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களின் இருவர் ஹற்றனைச் சேர்ந்தவர்கள். ஒருவர் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவர்.

வங்கிகள் பலவற்றின் 'ஏ.ரி.எம்' அட்டைகளைத் தயாரித்து இவர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். இவ்வாறான கும்பல் ஒன்று வடமராட்சியில் நடமாடுகின்றது என்று தமக்கு ஏற்கனவே தகவல் கிடைத்திருந்தது என்றுகூறும்பொலிஸார், குறித்த கும்பல் ஓட்டோ ஒன்றில் பொலிகண்டிப் பகுதியில் பயணிக்கின்றது என்று தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் வீதிச்

பக்.25

தமிழருக்கு எதையும் முன்வைக்காத தேர்தல்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுமக்களின் பணத்தில்.....

பக்.08

வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்போம்

மிரட்டுகின்றனர் வட மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 5

வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க நேரிடும் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நேற்றுப் பகிரங்கமாகவே எச்சரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாணசபையின் அமைச்சரவைத் தீர்மானங்கள் இதுவரையில் உறுப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பில் நேற்றைய அமர்வில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோதே, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர்

பக்.26

மைத்திரி கூட்டத்துக்கு பொலிஸாரால் இடையூறு

கொழும்பு, டிசெ.5

மாத்தறை உயன்வத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்குப் பொலிஸாரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டது

பக்.26

செய்திகள்

ஐஸ்கிறீமில் அரசியல் இல்லை

நல்நோக்கத்துடனேயே செயற்பட்டோம்
வடக்கு சுகாதார அமைச்சர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் பின்னணியில் எந்த அரசியலும் இல்லை. அதில் உள்நோக்கமும் இல்லை. நல்நோக்கமே இருக்கின்றது. நாம் சுகாதார நடவடிக்கையிலிருந்து ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை. தொடர்ந்தும் இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

வடக்கு மாகாண சபையில் கடந்த மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற 19 ஆவது கூட்டத்தில், யாழ். மாவட்டத்தில் ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் மீதான திடீர் சோதனை நடவடிக்கையின் பின்னணியில் அரசியல் இருக்கின்றது. இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராஜாவும், ஆளுங்கட்சி உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் சுகாதார அமைச்சர் இருக்கவில்லை. அதனால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நேற்று அவர் நீண்ட விளக்கம் வழங்கினார்.

"சபையில் நான் இல்லாதவேளையில், தனிநபர் கவனவீர்ப்பு அவசர பிரேரணையை எனது அமைச்சு சார்ந்த ஒரு விடயத்தை சபையில் எடுத்துக் கொண்டது பொருத்தமானதுதானா என்று கேள்வியெழுப்புகின்றேன். ஐஸ்கிறீமில் மலத்தொற்று என்று பத்திரிகையில் வந்த செய்தி தொடர்பில் நான் பொறுப்புக்கூற முடியாது. மேலும் கடந்த அமர்வில் பல தரவுகள் எதிர்க்கட்சித் தலைவரால் சொல்லப்பட்டுள்ளன. அந்தத் தரவுகள் உண்மையானவைதானா ? மேலும் அந்தத் தரவுகள் அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்பதையும் அறிய விரும்புகின்றேன்."– என்று அவர் தெரிவித்தார்.

பொறுப்புக்களை விளங்கிக் கொள்ள வேண்டும்

"உணவுகளைக் கையாளும் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் உரிமை அந்தந்தப் பகுதிப் பிரதேச சபைகளுக்கே உரியது. அவர்கள் பணம் செலுத்தியே அந்த அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு வருடாந்தம் பணம் செலுத்த வேண்டும். அதில் சுகாதாரத் துறையின் பங்கு என்ன என்பது தொடர்பில் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

நாம் வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்கின்றோம். அதனைப் பெற்ற பின்னர் நாம் தவறாகச் செலுத்த முடியாது. அது போலத்தான் சுகாதார அனுமதிப் பத்திரமும். ஆரம்பத்தில்உணவுகையாளும்நிலையத்தின் சுகாதார நிலைப்பாடுகளை வைத்து, அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். அதன் பின்னர் அதனைப் பரிசோதிக்க வேண்டியது, சுகாதாரப் பிரிவினரின் பொறுப்பு."– என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஆவணங்கள் எப்படிச் சென்றன ?

"அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் முன்அனுமதியின்றி, உணவு கையாளும் நிலையத்தைச் சோதனை செய்ய முடியும். எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்திய விடயம் ஒன்று உள்ளது. உணவு கையாளும் நிலையங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் தன்னிடம் உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். அது அவரது கைக்கு எவ்வாறு சென்றது. நாங்கள் அழைத்தாலும் வராத எனது அமைச்சு அதிகாரிகளிடம் நான் நேரில் சென்று இது தொடர்பில் பேசியிருக்கின்றேன். இது எவ்வாறு வெளியில் சென்றது?"– என்றும் சுகாதார அமைச்சர் கேள்வியெழுப்பினார்.

"குறித்த பிரேரணையின் பின்னணியில் மறைமுகமான நோக்கங்கள் இருக்கின்றன. சுகாதாரம் தொடர்பில் பல விடயங்கள், பல கேள்விகள் இதுவரையில் எழுப்பியிருந்தார். நான் குடும்ப ஆட்சி நடத்துவதாகத் தெரிவித்தார்கள். யார் குடும்ப ஆட்சி நடத்துவதென்று எல்லோருக்கும் தெரியும். அடுத்து உலர் உணவு விநியோகத்தில் மோசடி என்றார்கள். ஆனால் அதுவும் பொய்யாகிப் போனது. தற்போது இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கின்றார்கள்."– என்றும் அவர் தெரிவித்தார்.

கடமையைச் செய்தார்கள்

"9 பேர் கொண்ட விசேட அதிரடிப்படை இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றார்கள். எங்களிடம் எந்த விசேட அதிரடிப் படையும் இல்லை. அதிகாரிகள் குழு தமக்குரிய கடமைகளைச் செய்தார்கள்.மேலும்சோதனைக்குச் சென்ற அதிகாரிகள் ஒயில் ஊற்றியதாகவும், மண் போட்டதாகவும்குற்றம்சுமத்தியுள்ளனர். கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி வர்த்தக சங்கத்தில் பாதிக்கப்பட்ட 59 வர்த்தகர்களையும் அழைத்து நடத்திய கூட்டத்தில், மேற்படி விடயம் தொடர்பில் கேட்டேன். அவ்வாறு ஏதாவது நடந்தது என்றால் நான் அதிகாரிகள் மீது நட வடிக்கை எடுப்பேன். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள்."– என்றும் அமைச்சர் விளக்கமளித்தார்.

சுகாதாரப் பாதிப்புக்கு அனுமதிக்க முடியாது

"வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது என்பது உண்மைதான். அதற்காக அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது என்பதற்காக, எல்லோரது சுகாதாரமும் பாதிக்கப்பட அனுமதிக்க முடியாது. இனிமேலும் அனுமதிக்க மாட்டோம். அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்தார்கள். அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கடமைகளைச் செய்ய அனுமதிக்க வேண்டாம் என்று சொல்கின்றீர்களா ?

யாழில் ஒரு உணவகமும் சீராக இல்லை என்று எதிர்க்கட்சித்தலைவர் குறிப்பிடுகின்றார். ஆனால் ஏனைய மாகாணங்களை விட இங்கு ஓரளவு சுகாதாரமான உணவைச் சாப்பிடலாம். அதற்கு எங்கள் அதிகாரிகளின் தொடர்ச்சியான கண்காணிப்புத்தான் காரணம்.

போராட்டம் நடத்தப்படுகின்றது என்றவுடன், அனுமதிப் பத்திரம் வழங்கியதாக உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். அதை முடிந்தால் நிரூபித்துக் காட்டட்டும்"– என்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சவால் விடுத்தார். (ற–5)

செங்கோலை வீசி எறிந்தார் சிவாஜி

- பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படாததால் கடும் கோபம்
- வட மாகாண சபை அமர்வில் நேற்று களேபரம்

யாழ்ப்பாணம், டிசெ. 5

சபை அமர்வில் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதால் கடும் கோபமடைந்த ஆளும்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாணசபையின் செங்கோலைத்தூக்கி எறிந்தார். அதில் செங்கோலின் தலைப் பகுதியில் சிறிய சேதம் ஏற்பட்டது. வடக்கு மாகாணசபையில் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர், மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் திடீரென, தனது பிரேரணை அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி பிரேரணை அனுப்பப்பட்டது என்றும், ஆனால் சபையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.இன்போது அவைத் தலைவர் குறித்த பிரேரணை தொடர்பில் ஏற்கனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். எனவே நான் இதைப் பற்றிக் கதைக்கவில்லை.உறுப்பினர்களே முடிவு செய்யட்டும் என்ற அறிவித்தார். இதனையடுத்து ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், இனப்படுகொலையிலிருந்து தமிழ் மக்களைச் சர்வதேச சமூகம் பாதுகாக்க வேண்டும் என்ற பிரேரணையை முன்மொழிந்தார். உடனேயே ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான து.ரவிகரன் வழிமொழிந்தார்.

அதையடுத்து வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரேரணையை எதிர்ப்பதாகத் தெரிவித்தார். இனப்படுகொலைக்கான ஆதாரங்களை முன்வைத்து பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும். நாம் நம்புகின்றோம் என்று குறிப்பிட வேண்டாம். அதற்குரிய ஆதாரங்களை ஒழுங்குபடுத்தி சமர்ப்பிக்க வேண்டும் என்றார். இதனையடுத்து ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான திருமதி அனந்தி சசிதரன் நீண்ட உரையை வாசித்தார்.

முதலமைச்சர், இதனை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம் என்று குறிப்பிட்டார். அத்துடன், இதனை ஆதாரங்களுடன் சமர்ப்பியுங்கள். நாங்கள் இதனை எதிர்க்கவில்லை. இதனையடுத்து கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப்பினர் த.சித்தார்த்தன், 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து இந்தியப் பிரதமர் நாடாளுமன்றத்தில் இலங்கையில் நடப்பது இனப்படுகொலை என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன் ஐ.நாவிலும், இலங்கையில் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலைதான் என்று சொல்ல வைத்தார் என்று குறிப்பிட்டார். இதனையடுத்து ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், தனது பிரேரணையில் மேற்படி விடயத்தை ஆதாரமாக்கி சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார். இதனையடுத்து ஆளுங்கட்சி உறுப்பினர் அஸ்மின், மேற்படி பிரேரணை இப்போது எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்ற சாரப்பட உரையாற்றினார். தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர், சகல விடயங்களையும் உள்ளடக்கி பிரேரணையை மாற்றி ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சமர்ப்பிப்போம். ஏனெனில் இப்போது இதனைச் சமர்ப்பித்தால், ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த தனக்கு சாதகமாக்கி விடுவார் என்று குறிப்பிட்டார்.

இதற்கமைய அவைத் தலைவர், சபையை அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். இன்று (நேற்று) எடுக்கப்படாத விடயங்கள் அன்றைய தினம் எடுக்கப்படும் என்றார். இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தனது பிரேரணை எடுக்கப்படுமா என்று கேட்க, அவைத் தலைவர் இல்லை என்று தெரிவித்தார். இதனையடுத்து சிவாஜிலிங்கம், தான் சமர்ப்பித்த பிரேரணை மீது வாக்கெடுப்பைக் கோரினார். இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா, மாகாணசபை உறுப்பினர் தனது பிரேரணை மீது வாக்கெடுப்பை கோரும் உரிமை உள்ளது என்று குறிப்பிட்டார்.

சபையை ஒத்தி வைத்த பின்னர் அதனைச் செய்ய முடியாது என்று அவைத் தலைவர் தெரிவித்து விட்டு ஆசனத்தை விட்டு எழும்பியதும்,சபாபீடத்தைநோக்கிச் சென்ற ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், செங்கோலை தூக்கி வீசினார். இதனால் சபையில் பரபரப்பு ஏற்பட்டது. கீழே விழுந்த செங்கோலை படைக்கல சேவிதர் பின்னர் எடுத்துச் சென்றார். (ற–5)

இளைஞர்களின் வாழ்வில் விளையாடுகின்றது 'ஒயில்'

வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கவலை

பக்.20

எதிர்வரும் ஆண்டுக்கான நிதிக்கூற்றை ஏற்றது சபை

வடமாகாணசபையின் அடுத்த ஆண்டுக்கான நிதிக் கூற்று முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பக்.20

ஜனரஞ்சகம்

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தகவல்: வித்யா

மேடம்: குடும்பத்தில் நடைபெறும் சில விடயங்கள் உங்கள் கோபத்தைத் தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாகப் பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும்.

இடபம்: எந்தவொரு காரியத்தை செய்யும் முன்பும் அதை எப்படிச் செய்வது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நன்மை தரும். அடுத்தவர் யோசனைகளைக் கேட்டு தடுமாற்றம் அடையாமல் இருப்பது நல்லது.

மிதுனம்: எதிர்ப்புகள் அகலும். எதிலும் சாமர்த்தியமாகச் செயற்பட்டு சாதகமான பயன் பெறுவீர்கள். செயற்றிறன் அதிகரிக்கும். ஆனால் உங்களுக்கு எதிராக சிலர் செயற்படும் சூழ்நிலை இருப்பதால் கவனம் தேவை.

கடகம்: சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயற்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டுகிடைக்கப் பெறுவார்கள்.

சிங்கம்: உறவினர்கள் வருகை இருக்கும். அவர்களிடம் நிதானமாகப் பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கோபம் காட்டாமல் அன்பாகப் பேசுவது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

கன்னி: எதிலும் சாமர்த்தியமாகச் செயற்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். வாக்குவன்மையால் ஆதாயம் உண்டாகும். எதிர்பாலினத்தாருடன் பழகும்போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும்.

துலாம்: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் ஆணிச்சல் உண்டாகும்.

விருச்சிகம்: குடும்ப விடயங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத தடுமாற்றம் ஏற்படலாம். உறவினர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும் பயணங்களின்போதும் கவனம் தேவை.

தனுசு: திறமையான பேச்சின்மூலம் எதையும் வெற்றிகரமாகச் செய்து முடித்து ஆதாயம் அடைவீர்கள். எதிர்ப்புகள் குறையும். தடை நீங்கி காரியங்கள் வெற்றிகரமாக நடந்து முடியும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள்.

மகரம்: பேச்சால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புதிய தெம்பும் உற்சாகமும் தோன்றும். எதிர்பாராத உதவியால் நன்மை ஏற்படும்.

கும்பம்: தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். புதிய பொறுப்புகள் ஏற்படலாம்.

மீனம்: குடும்பத்தில் அமைதி ஏற்படும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்துக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். அவர்களது நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பாகப் போவது இதுதானா?

பொண்ணு பார்க்கும் ஆணின் பரிணாம தளர்ச்சி...

26 வயதில் பார்க்க லட்சணமா அழகா வசதியான நல்லா படிச்ச வேலைக்குப்போற பொண்ணு வேணும்

27 வயதில் பார்க்க லட்சணமா அழகா நல்லா படிச்ச வேலைக்குப் போற பொண்ணு வேணும்

28 வயதில் பார்க்க லட்சணமா நல்லா படிச்ச வேலைக்குப்போற பொண்ணு வேணும்

29 வயதில் பார்க்க லட்சணமா நல்லா படிச்ச பொண்ணு வேணும்

30 வயதில் பார்க்க லட்சணமா படிச்ச பொண்ணு வேணும்

31 வயதில் பார்க்க லட்சணமா பொண்ணு வேணும்

32 வயதில் பொண்ணு வேணும்

33 க்கு மேல் வேணும்

சரியும் 'ஸ்மார்ட் போன்'

'ஸ்மார்ட்' போனுக்கான சந்தை வாய்ப்புக்கள் ஏட்டிக்குப் போட்டியாக வளர்ச்சியடைந்துள்ளன. இதனால், கடுமையான போட்டி நிலைமை காரணமாக 'ஸ்மார்ட்' போன் விலை குறைவடையும். இவ்வாறு 'ஸ்மார்ட்' போன் சந்தை தொடர்பில் ஆராயும் ஐ.டி.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.
2015 ஆம் ஆண்டில் சுமார் 1.5 பில்லியன்

'ஸ்மார்ட்' போன்கள் விற்பனையாகும். தற்போது சர்வதேச சந்தையில் 80 சதவீதம் அண்ட்ரொய்ட் தொலைபேசிகளே ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அப்பிளின் ஐ.ஓ.எஸ். 13 சதவீதத்தை மட்டுமே ஆக்கிரமித்துள்ளது. எனினும், டைசன், பயர்பொக்ஸ் போன்ற புதிய ஓ.எஸ்களும் வாடிக்கையாளர்களிடம் வரவேற்பை பெற்று வருகிறது.

எங்க இருந்துடா வாரீங்க...?

ரிலாக்ஸா வாசியுங்க...

கவிஞர் கண்ணதாசன் ஒரு கல்லூரிக் கவியரங்கத்தில் கலந்து கொண்டு கவிதையை வாசிக்க ஆரம்பித்தார். அரங்கத்தில் உற்சாக ஆரவாரம் எழுந்தது. அவர் கவிதை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் பலத்த கைதட்டல் எழுந்தது. வாசித்து முடிந்ததும் கரவொலி அடங்குவதற்கு நீண்ட நேரம் பிடித்தது.
இதன்பின்னர் கண்ணதாசன் உரையாற்றினார். 'இன்று வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. உங்கள் கல்லூரி மாணவர் ஒருவர் நேற்று ஒரு கவிதை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் காண்பித்தார். அது மிக நன்றாக இருந்தது. எனவே நான் எழுதிய கவிதையை அவரை வாசிக்கச் சொல்லிவிட்டு அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தேன்.
என் கவிதையை அவர் வாசிக்கும்போது எந்தவித ஆரவாரமும் இல்லை. அவர் எழுதிய கவிதையை நான் வாசித்தபோது பலத்த வரவேற்பு. ஆக சொல்பவன் யார் என்பதைத்தான் உலகம் பார்க்கிறதே ஒழிய, சொல்லும் பொருளைப் பற்றிக் கவலைப் படுவதில்லை என்பதுதான் உண்மை என்று புரிகிறது' – என்றார்.

அக்காவை வெல்ல முடியாது

மீண்டும் சின்னத் திரைக்கு வந்திருக்கின்றார் நிரோஷா. சின்னத் திரையில் கலக்கிக் கொண்டிருக்கும் நடிகை ராதிகாவின் தங்கை இவர்.
1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சினிமாவில் கலக்கியவர் நிரோஷா. சினிமாவில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் போதே, ராம்கியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அதன் பின்னர் சினிமாவுக்கு முழுக்கு கொடுத்தார். நீண்ட காலத்தின் பின்னர் சின்ன பாப்பா பெரிய பாப்பா என்ற சின்னத்திரை நலைச்சுவைத் தொடரில் நடித்தார். இந்தத் தொடர் முடிந்ததும் நிரோஷா காணாமற் போயிருந்தார். இப்போது மீண்டும் 'ரீ என்ரி' கொடுத்துள்ளார். சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சின்ன பாப்பா பெரிய பாப்பா என்ற தொடரில் மீளவும் நடித்து வருகின்றார். 'எனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆரம்பமாகியிருக்கின்றது. அக்கா சின்னத்திரையின் உச்சியில் இருக்கின்றார். அவரை யாராலும் வெல்ல முடியாது. நான் இனித் தொடர்ந்து நடிப்பேன்' என்கின்றார் நிரோஷா.

செய்திகள்

யாழ். திராட்சையின் விளைச்சல் வீழ்ச்சி

ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு விவசாயத் திணைக்களம் முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ்.குடாநாட்டில் விவசாயிகளால் செய்கை பண்ணப்படும் திராட்சை தற்போது காய்க்கும் தன்மை மிகமிகக் குறைவடைந்துள்ளது. இதற்கான காரணத்தைக் கண்டறிவதற்காக ஆய்வொன்றை விவசாய திணைக்களம் மேற் கொள்ளவுள்ளது.

இதற்கெனக் கொழும்பு விவசாய ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இந்த ஆராச்சியாளர் இங்கு சில தினங்கள் தங்கியிருந்து இது தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

குடாநாட்டில் 110 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் திராட்சைச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இளவாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், சிறுப்பிட்டி உட்பட மற்றும் சில பிரதேசங்களில் திராட்சைச் செய்கையில் அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆயினும் கடந்த சில மாதங்களாக்க் குடாநாட்டுத் திராட்சைக் கொடியின் விளைச்சல் மிகமிக வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. அத்துடன் திராட்சைக் கொடி அடிக்கடி நோய்த் தொற்றுக்கும் உள்ளாகின்றது.

இதனால் குடாநாட்டுத் திராட்சைச் செய்கையாளர்கள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.பெரும் பணச் செலவில் மேற்கொள்ளப்படும் இந்தச் செய்கை மூலம் செலவு செய்த பணத்தைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தற் போது ஏற்பட்டுள்ளதாக அவர் கள் கூறுகின்றனர்.

திராட்சைக்கானமாட்டெரு, கிருமி நாசினிகள்,உர வகைகளுக்காக பெரும் செலவு ஏற்படுவதாகவும்,ஆயினும் அதற்கு ஏற்ப திராட்சைக்கொடிகள் பலனளிக் காமையால் அதனைக் கைவிடத் தீர்மானித்துள்ளதாக அளவெட்டி, பெரிய விளான் பகுதிகளில் உள்ள செய்கையாளர்கள் பலர் தெரிவித்துள்ளனர். இதனால் தமது திராட்சைத் தோட்டங்கள் பலவற்றை வெட்டி அழிக்கும் நடவடிக்கையில் சில விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கள் கூறினர்.

கொடியின் விளைச்சல் குறைவடைந்துள்ளதுடன் அது அடிக்கடி நோய்த் தாக்கத்துக்கும் உள்ளாகின்றது. இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளதாக அவர்கள் மேலும் கூறினர்.

குடாநாட்டில் நிலவிய கடும் வெப்பம், வறட்சித் தாக்கத்தினால் திராட்சை காய்க்கும் தன்மை மிக மிகக்,குவடைந்து காணப்படுவதாகத் திராட்சைச் செய்கையாளர்கள் கூறுகின்றனர்.

விவசாயிகளின் இந்த முறைப்பாட்டை அடுத்தே விவசாயத் திணைக்களம் இந்த ஆய்வை மேற்கொள்வதற்குமுடிவுசெய்துள்ளதாகக் கூறப்பட்டது.

(த–17)

யா.மாநகர சபைக்கு உட்பட்ட பொம்மைவெளி மகப்பேற்று விடுதியின் கூரைகள் சேதமடைந்துள்ளதால் மழை நேரத்தில் அங்கு ஒழுக்கு ஏற்பட்டு விடுதிக்குள் வெள்ளம் தேங்குகின்றது. இதனால் அங்கு கிளினிக்குக்காகச் சென்ற கர்ப்பிணிப் பெண்கள், மருத்து வர்கள், தாதியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். (த–17)

வட்டக்கச்சி மருத்துவமனையை வளங்கள் நிறைந்ததாக மாற்றுக

கிளிநொச்சி, டிசெ. 5

வட்டக்கச்சி மருத்துவமனையை வளங்கள் நிறைந்ததாக உருவாக்குமாறு மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வட்டக்கச்சி மருத்துவமனையும் மத்திய மருந்தகமும் மகப்பேற்று விடுதியும் என்ற தரத்துடன் இடம் பெயர்வுகளுக்கு முன்னர் சிறப்பாக இயங்கிவந்தது. மீள்குடியேற்றத்தின் பின்னர் இம்மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படவில்லை. இதன் காரணமாக வட்டக்கச்சி மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நெருக்கடி நிலையை எதிர் கொண்டிருந்தன.

இந்தநிலையில் கடந்த ஒருமாதத்துக்கு முன்னர் இந்த மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நாள் தோறும் சிகிச்சைகள் நடைபெற்றாலும் மருத்துவமனைக்கு மகப்பேற்றுவிடுதி அமைக்கப்படாதமையால் 10 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கே கர்ப்பிணிகள் மற்றும் விபத்துகள், பாம்புக்கடி ஆகியவற்றுக்கான சிகிச்சைகள்பெறமக்கள்செல்லவேண்டியுள்ளது. இந்நிலையில் வட்டக்கச்சி மருத்துவமனையில்மகப்பேற்றுவிடுதியை உருவாக்குமாறு மக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த–18)

வடக்கு பாடசாலைகளில் அதிகளவான மாணவர்கள் புலமைப் பரிசிலில் சித்தி

யாழ்ப்பாணம், டிசெ. 5

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் வடமாகாண பாடசாலைகளில் பெரும் எண்ணிக்கையானமாணவர்கள்சித்தி பெற்றுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக தென்மராட்சிக் கல்வி வலயம் பெரும் சாதனை படைத்துள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாகாண கல்வி அமைச்சினால் உலக வங்கி குழுவினருக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருட (2013) புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் விகிதத்துடன் இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றுப் பிரிவுகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

இதில் யாழ்ப்பாண கல்வி வலயம் கடந்த வருடம் 15.58 ஆக இருந்த வீதம் இந்த வருடம் 23.39 வீதமாக முதலிடத்தையும், தென்மராட்சி கல்வி வலயம் 8.87 ஆக இருந்த வீதம் இந்த வருடம் 21.0 வீதமாக இரண்டாம் இடத்தையும், வடமராட்சிக் கல்வி வலயம் 10.54 ஆக இருந்த வீதம் இந்த வருடம் 20.07 வீதமாக மூன்றாவதுஇடத்தையும்பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பரீட்சையில் 100 இற்கும் மேற்பட்ட புள்ளிகள் பெற்ற மாணவர்களின் வீதம் தென்மராட்சிக் கல்வி வலயம் 51.13 இருந்து 63.74 வீதமாக அதிகரித்துமுதலிடத்தையும்,வடமராட்சி கல்வி வலயம் 59.03ஆக இருந்து 63.5 ஆக அதிகரித்து இரண்டாவது இடத்தையும், யாழ்ப்பாணம் கல்வி வலயம் 59.21 ஆக இருந்து 63.5 ஆக அதிகரித்து மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த காலங்களை விட இந்தவருடம்பெருமளவுமாணவர்கள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுச் சாதனை படைத்துள்ளனர் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். (த–9)

கஞ்சாப் பாவனை வட மாகாணத்தில் அதிகரிப்பு

வவுனியா மாவட்டத்தில் கஞ்சா வைத்திருந்த 4 பேர் கடந்த நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டதாக வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.ரகுநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அண்மைக்காலமாகவடபகுதியில் கஞ்சாப் பாவனைஅதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த எமது மதுவரித் திணைக்களம் துரித நடவடிக்கை எடுத்து வரு கின்றது.

அதன் ஒரு கட்டமாக எமக்குக் கிடைத்த தகவல்களையடுத்து வவுனியா மாவட்டத்தில் மேற் கொண்ட திடீர்த் தேடுதல்களின் போது கடந்த நவம்பர் மாதம் கஞ்சா வைத்திருந்த 4 பேர் கைது செய்யப்பட்டுநீதிமன்றில்முன்னிலைப்படுத்தப்பட்டனர். கடந்த மாதம்25ஆம்திகதி40கிராம்கஞ்சாவுடன் புளியங்குளத்தில் ஒருவரும், கடந்த27 ஆம் திகதி 100கிராம் கஞ்சாவுடன்செட்டிகுளத்தில் ஒருவரும், 50 கிராம் கஞ்சாவுடன் கனகராயன்குளம் மற்றும் 10 கிராம் கஞ்சாவுடன் புளியங்குளம் ஆகியபகுதிகளில் இருவரும்மைது செய்யப்பட்டனர்–என்றார்.(த–402)

இன, மத நல்லுறவு ஆராதனை

புதன் காலை சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில்

இசை ஆராதனை இடம்பெற்ற வேளை...

யாழ்ப்பாணம்.டிசெ.5

இலங்கையில் இன,மத நல்லிணக்கம் ஏற்படவும், தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கவும்வேண்டிமாபெரும் ஆராதனை நிகழ்வு நேற்றுமுன்தினம் சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்அதன் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் இந்த ஆராதனை இடம் பெற்றது.

இந்தநிகழ்வில்வேதபாராயணம் இடம்பெற்றதைத் தொடர்ந்து திருமுறைப்பாராயணம்,நாதஸ்வர தவில் இசை, சங்கீதம், மிருதங்க தாள வாத்தியம், நாட்டியாஞ்சலி ஓம்நமசிவாய மந்திர பாராயணம், தியானம் என்பன இடம்பெற்றன.

கடந்த வருடம் நடைபெற்ற ஓம் நமசிவாயப் பிரார்த்தனை மூலமாக ஏறக்குறைய மூன்று கோடிக்கு மேற்பட்ட ஓம் நமசிவாய மந்திரங்கள் எழுதப்பட்டு நமசிவாய ஆன்மிக வங்கியில் சேர்க்கப்பட்டன. இதன் மூலம் மக்கள் பல நன்மைகளையும் உயர்வுகளையும் மன அமைதியையும் ஆன்மிக ஈடேற்றத்தையும் பெற்றுக் கொண்டனர் என்றும், இதனடிப்படையில் இந்த வருடம் 5 கோடி ஓம் நமசிவாய மந்திரங்களைச் சேர்ப்பதற்காக ஓம் நமசிவாய மந்திர லிகிதஜப லிங்கதிருவுருவப்பத்திரம்வெளியீட்டு வைக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் 5 கோடி மந்திரங்கள் சேகரிக்கப்பட்டு அதனை சமர்ப்பிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (த-14)

கார்த்திகை தீபத் திருநாளையொட்டி தத்தமது இல்லங்களில் தீபம் ஏற்றுவதற்கான ஏற்பாடுகளில் இந்துக்கள் நேற்று ஈடுபட்டுள்ளனர். தீபம் ஏற்றும் சுட்டிகளின் விற்பனை யாழ்ப்பாணச் சந்தைகளில் நேற்றுச் சூடு பிடித்தது. திருநெல்வேலிச் சந்தையில் சிறிய சுட்டி ஒன்று மூன்று ரூபாவுக்கும், பெரிய சுட்டி ஒன்று 5 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது. (கு-7-21)

தொழில்நுட்ப ஆய்வு கூடத்தின் கட்டடப் பணி அரைகுறையில்

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கான ஆய்வுகூடக் கருவிகள் மீளப் பெறப்பட்டன

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடக் கட்டடப் பணிகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை.இதனால்கல்விஅமைச்சினால் வழங்கப்பட்ட ஆய்வு கூடக் கருவிகள் மீளப் பெறப்பட்டு வேறு பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

கட்டட வேலை கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டுநான்கு மாதங்களில்வேலைகள்பூர்த்தி செய்யவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுஏப்ரல்மாதத்தில்ஆய்வு கூடக்கருவிகளும் வழங்கப்பட்டிருந்தன.

இதுவரை வேலைகள்பூர்த்தியாகாததால் இங்கு வழங்கப்பட்டிருந்த கருவிகள் மீளப் பெறப்பட்டு வேறு பாடசாலை ஆய்வு கூடத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகப் பெற்றோரால் தெரிவிக்கப்பட்டது. (த-9)

வெள்ளம் அகற்ற கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ்.கரையோரப் பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ளத்தை அகற்றும் நடவடிக்கை அரச செலவிலேயே முன்னெடுக்கப்பட்டது. அதற்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

யாழ்.கரையோரப் பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ளத்தை, சிரமதானம் மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது. இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள விளக்கத்திலேயே பிரதேச செயலர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில், கடந்த 19 ஆம் திகதி பெய்த மழையின்போது எம்மால் களத் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன்பின் அங்கு வெள்ளத்தைத்தணிப்பதற்கான முன்மொழிவு எம்மால் அரச அதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் வழங்கப்பட்ட நிதியை கொண்டு ஐந்து வடிகால்களை வெட்டுவதற்கு, அண்ணா சன சமூக நிலையத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அண்ணா சனசமூக நிலையத்துக்கு நாள் கூலி அடிப்படையில் பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வேலையாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (த-5)

யாழ். மக்களுக்கு வணிகர் கழகம் பல வழிகளில் உதவி

யாழ்ப்பாணம். டிசெ. 5

போட்டியான வியாபாரச் சூழல் தற்போது நிலவி வரும் நிலையில் யாழ்ப்பாண வணிகர் கழகம் குடாநாட்டு மக்களுக்காகப் பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. போர்க் காலச் சூழலின்போதும் அரச திணைக்களங்களுடன் இணைந்து பல்வேறு சேவைகளை வழங்கியுள்ளது என்று பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு யாழ். வணிகர் கழகத்தில் நடை பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். வணிகர் கழகத்தின் பணிகள் கடந்த போர்க் காலத்தில் இருந்து குடாநாட்டு மக்களுக்குக் கிடைக்கின்றன. ஒரு பிரதேசம் என மட்டுப்படுத்தாமல் குடாநாடு முழுவதும் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. வர்த்தகர்களுக்கு தற்போது போட்டியான வியாபாரச் சூழலால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்புற்றபோதும் சமூக நலனுக்காக அவர்கள் முன்வந்து செய்யும் இத்தகைய உதவிகள் மக்களுக்குப் பயன் தரும் வகையில் அமைந்துள்ளன. ஏனைய வர்த்தக சங்கங்களையும் இணைத்து இன்னும் சமூக உதவிகளை வழங்கவேண்டும்-- என்றார்.

வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பருத்தித்துறை, வேலணை பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 30பேருக்கு10ஆயிரம்ரூபாவீதம் வாழ்வாதார் உதவித் தொகையும், தாதியர் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான உதவித் தொகையும் வழங்கப்பட்டன. (த-14)

இலவச கண் சிகிச்சை முகாம்

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில்உள்ள ஞானாலயத்தில்நாளை சனிக்கிழமைகாலை 9 மணிக்கு இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது. இந்தச் சிகிச்சை முகாம் கண் வைத்திய நிபுணர் மருத்துவர் எஸ்.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (த-173)

செய்திகள்

வலி. கிழக்குப் பிரதேச சபை நிர்வாகத்தை சீராக்க முயற்சி

வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில்

அச்சுவேலி, டிசெ.5

வலி.கிழக்குப் பிரதேச சபையின் நிர்வாகத்தைச் சீராக்கும் முயற்சிகளை வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச் சுக்குப் பொறுப்பான முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் வலி. கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் க.துரைசிங்கம், பிரதேச சபைச் செயலாளர் என்.குணாளன், முதலமைச்சரின் செயலாளர் எஸ்.திருவாகரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அ.பரஞ்சோதி, பி.அரியரத்தினம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் நெல்சிப் வேலைத் திட்டத்தில் திருத்தி அமைக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கும் அச்சுவேலி பயிர்சோலை வீதி, உரும்பிராய் மயான வீதி ஆகியவற்றை உரியமுறையில் நிறைவு செய்தல்.

கடந்த வருடம் இறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாகச் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் 2 லட்சத்து 54 ஆயிரம் ரூபாவை முன்னர் தவிசாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளல், பிக்கப் வாகனத்தின் இயந்திரத்தை மாற்றியமை தொடர்பாகச் செய்யப்பட்டமுறைப்பாட்டை அடுத்து பயன்படுத்தக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டிருந்தும் அதனைப் பாவித்தமை, சபை யின் தவிசாளர் என்ற பதவி நிலையில் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கு, உரிய முறையில் அனுமதி பெறாமல் வழங்கப்பட்ட நியமனங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்ட தோடு முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு தவிசாளர், செயலாளர் ஆகியோருக்கு முதலமைச்சரால் காலஅவகாசம் வழங்கப்பட்டது. (த–11)

நாவலர் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார் தமிழருவி

மன்னார், டிசெ.5

தேசிய, சர்வதேச ரீதியில் சைவத்துக்கும் தமிழுக்கும் கல்விக்கும் ஆற்றிவரும் தொண்டுக்காக தமிழருவி த. சிவகுமாரன் நாவலர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் இணையம் நடத்திய நாவலர் விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழருவி சிவகுமாரனுக்கு இவ்விருதை இணையத்தின் தலைவர் சிவஸ்ரீ.மகாதர்மகுமாரக் குருக்கள், ஜனாதிபதியின் இந்துமத விவகாரத்துக்கான இணைப்பாளர் இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா, மன்னார் பிரதேசச் செயலாளர் சு.வசந்தகுமார், மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் வி.பாலகரன், மன்னார் மாவட்ட இந்து மகாசபையின் தலைவர் செ.சி. இராமகிருஷ்ணன், திருக்கேதீஸ்வர சிவனருள் இல்லத்தின் முன்னாள்பணிப்பாளர் வே.பொ. மாணிக்கவாசகர் ஆகியோர் இணைந்து வழங்கிக் கௌரவித்தனர்.

இந்த விழாவில் அதிக எண்ணிக்கையில் மக்களும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். (வ)

பொலிஸாரின் முன்மாதிரி நடவடிக்கை

தென்மராட்சி, டிசெ.5

நாவற்குழி ஐயனார் கோயிலடிப் பகுதியில் காணப்பட்ட மழை வெள்ளம் நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸாரால் வாய்க்கால் வெட்டப்பட்டு அருகில் உள்ள கடலேரிக்குத் திருப்பி விடப்பட்டது.

இந்தப்பணியில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் 50 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாகப் பெய்த மழையால் அந்தப் பகுதியில் உள்ள 50 இற்கும் மேற்பட்ட குடியிருப்புக்களைச் சுற்றி வெள்ளம் தேங்கிக் காணப்பட்டது.

அந்தப் பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து பொலிஸார் வெள்ளத்தை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இதேவேளை நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதியில் காணப்பட்ட மழை வெள்ளம் பொலிஸாரால் திங்கட்கிழமை வாய்க்கால் வெட்டி அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

கவனிக்கப்படுமா நீண்டியம்பற்றை வீதி?

யாழ்ப்பாணம், டிசெ.5

பருத்தித்துறை, புலோலி வடகிழக்கு நீண்டியம் பற்றை வீதி மிகவும் மோசமான நிலையில் குண்டும் குழியுமாகவும், சேறும் சகதியுமாகவும் பொது மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வீதி பருத்தித்துறை கிராமக்கோட்டுச் சந்திக்கும், ஓராம்கட்டைச் சந்திக்கும் இடையே பிரதான வீதியில் இருந்து கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

அந்த வீதியை அண்மித்த தாக சுமார் 70 குடும்பங்கள் வரை வாழ்ந்து வருகின்றன. தற்போது குடாநாட்டில் பெய்து வரும் மழையை அடுத்து குறித்த வீதியைப் பயன்படுத்துவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் செல்வோர் சறுக்கி வீழ்ந்து விபத்துக் குள்ளாகும் சம்பவங்களும் ஏற்பட்டு வருகின்றன. 1960ஆம் ஆண்டு குறித்த வீதி தார் போட்டு செப்பனிடப்பட்டதாகவும் அதன் பின்னர் இற்றை வரை எந்தவிதமான புனரமைப்பு வேலைகள்கூட செய்யப்படவில்லை என்றும் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (வ–78)



புலோலி வட கிழக்கு நீண்டியம்பற்றை வீதி

காரைநகரில் காணி சுவீகரிப்புக்கான நட்டஈட்டில் 90 வீதம் பெற்றுக்கொடுப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.5

காரைநகரில் கடற்படைத் தளத்துக்கெனசுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈடுகள் அதற்கு உரித்துடையவர்களில் 90 வீதத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காரைநகர் பாலக்காடு கிராமம் கடந்த 1985 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்படைத் தளத்துக் கெனமுற்றாகசுவீகரிக்கப்பட்டது. சுமார் 45 ஏக்கர் காணியைக் கொண்ட இந்தக் கிராமத்தில் 137 பேருடைய காணிகள் சுவீகரிக்கப்பட்டன.

காணிக்கான நட்டஈட்டை பெற்றுக் கொடுப்ப தற்கான நடவடிக்கையை கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மேற்கொண்டு வந்தது.

137 பேருடைய காணிகளில் 6 பேருக் குரிய நட்ட ஈடுகளே இன்னமும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, காணிக்கான உரிமம், காணிக்குரியவர்கள் இங்கு இல்லாத நிலை போன்ற காரணங்களால் சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது. எனினும் காணியில் இருந்த வீடுகள் மற்றும் ஏனையகட்டடங்கள் தொடர்பான விவரங்களை காணி உரிமையாளர்கள் வைத்திருந்ததன் காரணமாக விரைவான முறையில் நட்டஈட்டைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது.

காணியின் பெறுமதி மற்றும் காணியில் இருந்த அசையாச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட நட்டங்களுக்கு ஏற்ப இந்த நட்ட ஈடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ–14)

அனுமதி பெற்று நிறுவப்பட்ட விளம்பரப் பலகை அகற்றல்

வவுனியா குருமன்காட்டு வர்த்தகர்கள் விசனம்

வவுனியா, டிசெ.5

வவுனியா நகரசபைக்கு பணம் செலுத்தி அனுமதி பெற்று தமது வர்த்தக நிலையங்களின் முன் நிறுவப்பட்டிருந்த தமது நிறுவன வர்த்தகவிளம்பரப்பலகைகளை முன் அறிவித்தலின்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கழற்றிச் சென்றுள்ளனர் என்று வவுனியா குருமன்காட்டு வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை காலை வவுனியா குருமன்காடு மன்னார் வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் முன்னால் நிறுவப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தம்மிடம் பணம் செலுத்தி அனுமதி பெறவில்லை என்று கூறி கழற்றிச் சென்றுள்ளனர்.

ஏற்கனவே குறித்த விளம்பரப் பலகைகளை நிறுவுவதற்கு நகர சபையினர் தமது பகுதி என்று கூறி பணம் பெற்று வருகின்றனர்.

நாம் அவர்களிடம் பணம் செலுத்தியுள்ளோம். தொடர்ந்தும் பணம் அறவிட்டு வருகின்றனர். உரிய வகையில் இவ்விடயத்தில் நகர சபையினர் தலையிட்டு விளம்பரப்பலகைகளை மீளவும் நிறுவ நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கைவிடுத்துள்ளனர். (வ–402)

தமிழ் வளர்ப்போம்! தமிழால் வளர்வோம்!

அகவையில் உதயன்

பரிசு மழையில் நனைய மாணவர்களே!

தயாராகிவிட்டீர்களா?

பொன்னான வாய்ப்பு

உங்கள் தேடல் முயற்சியை முன்னெடுக்கவும், ஆக்கத்திறனை மேம்படுத்தவும், தனது 30 ஆவது அகவையில் கால்பதிக்கும் உதயன் முன் வந்திருக்கின்றான். உங்கள் திறமையை வெளிக் காட்டுவதுடன் சான்றிதழ்களையும், பரிசில்களையும் பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பு.

ஓவியப் போட்டி	கட்டுரைப் போட்டி	கவிதைப் போட்டி	சிறுகதைப் போட்டி
தரம் 03 - 05	தரம் 06 - 08	தரம் 09 - 11	தரம் 09 - 11
தரம் 06 - 08	தரம் 09 - 11	தரம் 12 - 13	தரம் 12 - 13
தரம் 09 - 11	தரம் 12 - 13	பிரிவுகள்	பிரிவுகள்
தரம் 12 - 13 பிரிவுகள்	பிரிவுகள்		

முழுமையான விவரங்களுக்கு தவறாது உதயன் பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்.

கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

கூட்டமைப்பின் ஆதரவை அறிய முன் அரசியல் தீர்வை முன்வையுங்கள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது நிலைப்பாட்டை இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று அரசு நேற்று வலியுறுத்தியுள்ளது.

பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்திருந்த பின்னணியில் கூட்டமைப்பின் முடிவை விரைவில் அறிவிக்க வேண்டும் என்ற அரசின் இந்த வலியுறுத்தல் வந்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவைத் தமிழர்கள் ஒரு போதும் ஆதரிக்க மாட்டார்கள் என்கிற துணிவில், பொது எதிரணி வேட்பாளரை கூட்டமைப்பு ஆதரிப்பதாகத் தெரிவித்தால், அதனைப் பயன்படுத்தியே மைத்திரிபாலவை புலி ஆதரவாளர் என்று சிங்கள மக்களிடம் போட்டுக்கொடுத்து வாக்குகளைக் கவர்ந்துகொள்ள முடியும் என்ற எண்ணத்துடன் அரசின் இந்த வலியுறுத்தல் வந்திருக்கக்கூடும் என ஊகிப்பதிலும் தவறில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத்பொன்சேகாவை ஆதரிப்பதாகக் கூட்டமைப்பு அறிவித்ததால்தான் மஹிந்த வெற்றிபெற்றார் என்ற வலுவான அரசியல் விமர்சனம் ஒன்று முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்பதைப் பொறுத்து சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கு அரசு திட்டமிடக்கூடும்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்பாக, மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவானால் மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு என்ன செய்யப் போகிறார், எத்தகைய தீர்வைத் தரப்போகிறார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

மூன்றாவது மஹிந்த சிந்தனையில் இலங்கை அரசமைப்புக்கான மாற்றம் உள்ளிட்ட சில விடயங்கள் அதிரடியாக அறிவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு கொழும்பில் உள்ளது. அத்தற்குள் என்ன இருக்கின்றது என்பது தெரிவதற்கு முன்பாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று கோருவது அரசியல் உள்நோக்கங்களை மட்டுமே கொண்டது.

மஹிந்தவும் சரி, மைத்திரிபாலவும் சரி தமிழர்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தாத வரையில் - பகிரங்கமாக வெளிப்படுத்தாத வரையில் யாரை ஆதரிப்பது என்பதைக் கூட்டமைப்பும் முடிவு செய்ய முடியாது. தனது மௌனத்தை நீடிப்பதைத் தவிர அதற்கு வேறு வழியும் இல்லை.

ஒருவேளை, மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்று, நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சியை ஒழித்த பின்னர் நாடாளுமன்றம் ஊடாகத் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பது என்பதும் மிகமிகச் சிரமமானதே. எனவே நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஒருவர் அதனை ஒழிப்பதற்கு முன்பதாக தமிழர்களுக்கு வழங்கப்போகும் உச்சபட்ச அதிகாரப் பகிர்வு குறித்து நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்திய பின்னரே கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்பதைக் கோர வேண்டும்.

தமிழருக்கு எதனையும் முன் வைக்காத தேர்தல்

■ ராஜ்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொது மக்களின் பணத்திலிருந்து கோடி கோடியாக வருடா வருடம், சர்வதேச பிரசாரஅமைப்புகளுக்கு வழங்கி, தன்னைப் பற்றி சர்வதேச அளவில் உருவாகியுள்ள களங்கத்தைத்துடைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றார். அதன் மூலமாக தான் போர்க்குற்றங்களுக்காக விசாரணை செய்யப்படவுள்ளார் என்பதை மக்களை மறக்கச் செய்கின்றார்.

எனினும், ஊழல், மற்றும் ஈவிரக்கமற்ற தன்மை ஆகியவற்றின் துர்நாற்றம் அவரிலிருந்து அகலுவதில்லை. அது அவரது ஆன்மாவில் ஆழமாகப் பதிந்துள்ளமை அவரது ஒவ்வொரு அசைவிலும் புலப்படுகின்றது. தனது பதவிக் காலம் பூர்த்தியாவதற்கு இன்னமும் இரண்டு வருடங்கள் இருக்கையில் தேர்தலை நடத்தும் அவரது முடிவும் அவ்வாறானதே. வீழ்ச்சியடைந்துகொண்டிருக்கின்ற தனது ஆதரவைக் காப்பாற்றும் இறுதி முயற்சியாக அவர் இதனைச் செய்துள்ளார்.

ஆனால், இந்தத் தேர்தல் சட்டவிரோதமானது என பல சுயாதீன வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. அரசமைப்புக்கு இது முரணானது என்பது அவர்களின் வாதம்.

2005இல் ஆட்சிக்குவந்த காலம் முதல் ஜனநாயகத்தையும், சட்டத்தின் ஆட்சியையும் படுகுழிக்குள் தள்ளுவதை நோக்கமாகக்கொண்டு செயற்பட்டுகொண்டிருக்கும் மனிதர் ஒருவர் இது குறித்து சிறிதும் கவலைகொள்ளப் போவதில்லை. இவை அவருக்குச் சிறிதளவும் முக்கியத்துவம் இல்லாத விடயங்கள்.

கடந்த வருடம் இலங்கையின் பிரதம நீதியரசரைப் பதவிநீக்கம் செய்து தனது ஆதரவாளர் ஒருவரை நியமித்த ராஜபக்ஷவுக்கு, இந்த நியமனத்துக்குப் பெருமளவு பிரதிபயன் இருக்கும் என்பது தெரிந்திருந்தது.

அவர் எதிர்பார்த்ததே நடந்தது. தான் மூன்றாவது தடவையாகப் போட்டியிடுவதில் ஏதாவது சட்டச் சிக் கல்கள் உள்ளனவா என அவர் உச்ச நீதி மன்றத்திடம் விளக்கம்கோரிய வேளை, இல்லை என்ற பதிலே அங்கிருந்து வந்தது. உச்ச நீதிமன்றம் தனது விசாரணையை இரகசியமான முறையில் நடத்தி மஹிந்தவுக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கியிருந்தது. இலங்கையின் வரலாற்றில் இவ்வாறு இரகசியமான முறையில் நீதிமன்ற விசாரணை நடைபெற்றுள்ளமை இதுவே முதற்தடவை.

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல் சட்டவிரோதமானது என்பதற்கப்பால், தேர்தல், நடைபெறுகின்ற சூழலும், தமிழ் மக்கள் முன் உள்ள வேட்பாளர் தெரிவும் நேர்மையான எண்ணம் கொண்ட அரசியல் அவதானிகள் அனைவருக்கும் கவலையளிக் கக்கூடிய விடயங்களாக உள்ளன.

ஜனவரி 8ஆம் திகதி இலங்கை மக்கள் வாக்களிக்கச் செல்லும்போது நாட்டின் பெரும் பகுதி முற்றுகைக்குள் கொண்டுவரப்பட்டிருக்கும்; வெளியுலகுக்கு மூடப்பட்டிருக்கும். கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக வடபகுதி வெளிநாட்டு கடவுச்சீட்டை வைத்திருப்பவர்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதியாகக் காணப்படுகின்றது. கடந்த 5 வருட காலத்திற்கும் மேலாக வடக்கு, கிழக்கில் காணப்படும் இராணுவ ஆக்கிரமிப்பு தமிழ்மக்களின் நாளாந்த வாழ்க்கையை அச்சத்தின் பிடியில் வைத்திருக்கின்றது. அரசு சட்டவிரோதமானது எனக் கருதும் மாவீரர் தின நிகழ்வுகளைத் தடுப்பதற்காக கடந்தவாரம், பெருமளவு படையினர் வீதிகளில் குவிக்கப்பட்டமை மீண்டும் இதனைப் புலப்படுத்தியது. அவர்கள் பல்கலைக்கழகங்களை மூடினர்; அரசியல் கட்சி அலுவலகங்களைச்சுற்றி வளைத்தனர்; வீடுகளைச் சோதனையிட்டனர். நீதியான – சுதந்திரமான தேர்தலுக்கான சூழல் என எவரும் இதனைக் குறிப்பிட முடியாது, ஆதலால், இலங்கையில் நேர்மையான – ஒழுங்கான விடயங்கள் இடம்பெறவில்லை என்றே தோன்றுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு முக்கிய வேட்பாளர்களைக் கருத்திலெடுக்கும் போது இது புலப்படும்.

தற்போதைய ஜனாதிபதிக்கான போட்டி அவரது கட்சிக்குள்ளிருந்தே உருவாகியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேன அரசி லிருந்து விலகி பின்னர் பொது வேட்பாளரானார், ஆகவே தமிழ் மக்கள், தற்போது யுத்தக்குற்ற விசாரணைகளை எதிர்கொண்டுள்ள ஒருவரா அல்லது அவரை கடந்த 5 வருடங்களாக நியாயப்படுத்திவரும் ஒருவரா எனத் தெரிவு செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர். இது தமிழ்மக்களுக்கான தெரிவல்ல. எப்படிப் பார்த்தாலும் அவர்கள் தாங்கள் அழிக்கப்படுவதற்குத் தங்களையே வாக்களிக்குமாறு கேட்கப்படுகின்றனர். ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ்மக்களைப் பாதுகாப்பு வலயத் திற்குள் வருமாறு அழைத்தபின்னர் அவர்களை ஈவிரக்கமற்ற விதத்தில் படுகொலை செய்த போர்க் கட்டமைப் பின் தீவிர ஆதரவாளரே ராஜபக்ஷவை மாற்றுவதற்காகப் போட்டியிடுகின்றார். இது நடைபெற்றுமுடிந்து 5 வருடங்களான பின்னரும் அந்த வேட்பாளர், போர்க்குற்றங்களை மறைப்பதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றார். கொலை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை மற்றும் காணமற்போகச் செய்யப்படுதலை தமிழர் பகுதிகளில் நாளாந்த விடயங்களாகியுள்ள இராணுவ ஆக்கிரமிப்பை இந்தப் பொதுவேட்பாளர் தொடர்ந்து நியாயப்படுத்தி வருகின்றார். நான் ஜனாதிபதியானால் தமிழ்மக்களின் வாழ்வை சிதைத்துவரும் இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றுவேன் என வாக்குறுதியளிக்கும் வேட்பாளருக்கு மாத்திரமே தமிழ் மக்கள் வாக்களிக்க முடியும்.

2005 இல் தமிழ்மக்கள் தேர்தலைப் புறக்கணித்தமை ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவதற்குக் காரணமாக அமைந்தது, இதன் காரணமாக ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் உயிர்களை நாங்கள் விலையாகக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இலங்கையின் ஈவிரக்கமற்ற சிங்களத் தலைவர்களின் வரிசையில் மிகவும் ஈவிரக்கமற்ற ஒருவர் பதவிக்கு வருவதற்கு உதவியதால் இந்தப் பகிஷ்கரிப்பு முடிவு தவறானது என்ற கருத்து நிலவுகின்றது. ஆனால், யதார்த்தத்தில் தமிழ்மக்களுக்கு வேறு தெரிவுகள் எதுவும் அவ்வேளை இருந்ததில்லை என்பதே உண்மை. தற் போதும் இந்த நிலை மாற்றமடையவில்லை, தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பதை அவர் களது போராட்டங்களே தீர்மானிக்கப்போகின்றன. தமிழ்மக்களின் இருப் பையே சிதைத்து அழித்துவிட கங்கணம்கட்டிக்கொண்டு நிற்கும் இருவேட்பாளர்கள் – அவர்களது ஆதரவுச் சக்திகள் மத்தியில் இடம்பெறும் தேர்தல் மோதல் இதனைத் தீர்மானித்துவிடாது.

கட்டுரை

தடைக்கற்களாக இருக்க வேண்டாம்!

காசி ஆனந்தன்

அண்மையில் சென்னைக்கு வருகை தந்த இலங்கையின் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கும் மூன்று கருத்துகள் பாராட்டுக்குரிய வகையில் அமைந்துள்ளன.

இலங்கையில் ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும்.

தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்.

13–ஆவது அரசியல் சட்டத் திருத்தம் பயனற்றது ஆகிய முதலமைச்சரின் மூன்று கருத்துகளையும் மனமார வரவேற்கலாம்.

வடக்கு மாகாண சபை முதலமைச்சரின் இந்தக் கருத்துகளை அல்லது கோரிக்கைகளைச் சிங்கள இனவெறி அரசு புறம் தள்ளி விடும் என்பதை நாம் அறிவோம்.

ஆனால், அத்தகைய மறுப்பும் – புறம் தள்ளுதலும் தமிழீழம் ஒன்றே தீர்வு' என்னும் தந்தை செல்வாவின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நோக்கிய – தமிழீழத்துக்காக உலக ஈழத் தமிழரிடையேயான வாக்கெடுப்பு (Referen'dum) என்னும் தமிழ் நாடு சட்டப் பேரவைத் தீர்மானத்தை நோக்கிய தமிழீழ மக்களின் விடுதலைப் பயணத் துக்குத் துணையாக அமையும் என்பது உறுதி.

முதலமைச்சர் தெரிவித்திருக்கும் வேறு சில கருத்துகள் முற்றிலும் தவறானவையாக உள்ளன.

தமிழீழத்தில் சிங்களவர்கள் திட்டமிட்டு முழுவீச்சில் குடியேற்றப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால் தமிழர் தாயகம் தனது அடையாளத்தை இழந்துவிடும் என்று முதலமைச்சர் கூறி இருக்கிறார். இதில் எவருக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை.

ஆனால், சிங்களவர் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்குத் தமிழ்நாட்டில் ஏதிலிகளாக (அகதிகள்) வந்து தங்கியிருக்கும் ஓர் இலட்சம் ஈழத் தமிழர்களை இந்திய அரசு இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்னும் கோரிக்கையை, அவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முன் வைத்திருக்கிறார்களே, இந்தக் கொடுமையைத்தான் எம்மால் ஏற்க முடியவில்லை.

தமிழர்கள் வெளியே போய் விட்டார்கள் என்பதால்தான் தமிழீழ மண்ணில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகிறார்கள் என்பதும், தமிழர்கள் திரும்பினால் அந்த மண் பாதுகாக்கப்படும் என்பதும் தவறான, பொருளற்ற கருத்து முன் வைப்பாகும்.

சிங்கள இனவெறி அரசின், கொடிய கொலை வெறியாட்டத்தால், தமிழீழ மண்ணில் வாழ முடியாமல் வெளிநாடுகளை நோக்கி ஏதிலிகளாகத் தமிழர்கள் ஓடுவதற்கு முன்பு, தமிழீழ மக்கள் தங்கள் தாய் மண்ணில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில்தான் 1949–இல் சிங்களக் குடியேற்றம் தொடங்கப்பட்டது, தொடர்ந்து இடம்பெற்றது.

உலகில் பரந்து வாழும் 15 இலட்சம் தமிழீழ மக்களும் தாயகம் திரும்பினாலும் சிங்களக் குடியேற்றம் தொடர்ந்து நடைபெறவே செய்யும். சிங்களக் குடியேற்றம் சிங்கள இனவெறி அரசின் தமிழின அழிப்புக் கொள்கையின் ஆணிவேர் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏன் மறந்து போனார்களோ தெரியவில்லை.

தமிழீழம் தவிர்ந்த சிங்களவர்களின் தாயகமான சிங்கள சிறீலங்காவில், வெறுமையான மிகப்பெரிய நிலப்பரப்பு உண்டு. சிங்களவர்களுக்குக் குடியிருப்பு வாய்ப்புத் தேவையெனில், அந்த நிலப்பரப்பில் சிங்களவர்களைக் குடியமர்த்தலாம். ஆனால், திட்டமிட்டுத் தமிழீழ மண்ணில் சிங்களவர்களைக் குடியேற்றுவது அப்பட்டமான இன அழிப்பு' நடவடிக்கையாகும்.

1949 முதல் 1976 வரை 27 ஆண்டுகள் தந்தை செல்வா சிங்களவர் குடியேற்றத்தை எதிர்த்து அற வழியில் போராடினார். அந்த 27 ஆண்டுகளில் தமிழர்களின் 7,500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட தமிழீழ நிலப் பகுதியைச் சிங்களவர் குடியேற்றத்தால் தமிழர்கள் பறிகொடுக்க நேர்ந்தது.

1833–இல் கோல்புறூக்ஆணைக் குழு அறிக்கையின்படி, தமிழீழத் தாயகம் 26,500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டிருந்தது. 1901–இல் மாகாணப் பிரிவினை நிகழ்ந்தபோது, தமிழீழ நிலப்பரப்பில் 7,500 சதுர கிலோ மீற்றர் நிலம் சிங்கள சிறீலங்காவின் மாகாணங்களோடு இணைக்கப்பட்டது. அப்போதே தமிழர்கள் தங்கள் தாயகத்தில் 7,500 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை இழந்து விட்டார்கள்.

வெள்ளைக்காரன் வெளியேறிய பின்பு, தந்தை செல்வாவின் அறப்போராட்ட காலத்தில் மேலும் 7,500 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பைச் சிங்களவர் குடியேற்றத்தால் இழந்தோம். மொத்தமாக 15,000 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை இழந்து, 1833–இல் 26,500 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைத் தங்கள் நிலப் பரப்பாகக் கொண்டிருந்த தமிழர்கள் 1976–இல் 11,500 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பை மட்டுமே தங்கள் தாயக மாகக் கொண்டு சிதைந்து தேய்ந்து சீரழிந்து நின்றார்கள்.

தந்தை செல்வாவின் அறப் போராட்டத்துக்கு சிங்கள இனவெறி அரசு பணியவில்லை. ஆனால், வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்துக்குப் பணிந்தது. பிரபாகரன் களத்தில் நின்ற 33 ஆண்டு (1976–2009) காலத்தில் தமிழீழத்தின் ஓர் அங்குல நிலத்தைக் கூடச் சிங்களக் குடியேற்றத்துக் காகப் பறித்தெடுக்க இயலாமல் போயிற்று.

இந்திய அரசும், உலக நாடுகளின் அரசுகளும், ஐ.நா. சபையும் புரிந்து கொள்ள வேண்டிய ஓர் உண்மை உண்டு. சிங்கள இனவெறி அரசு பேச்சுரைகளுக்கோ, உடன்படிக்கைகளுக்கோ என்றும் பணிவதில்லை.

நோர்வேயுடன் இலங்கை அரசு செய்து கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கை என்ன ஆனது? ஜெயவர்த்தன – ராஜீவ் காந்தி உடன்படிக்கை என்ன ஆனது? புத்தன் சொன்னதையே கேட்காதவர்கள் மோடி சொல்வதைக் கேட்பார்கள், ஒபாமா சொல்வதைக் கேட்பார்கள் என்று எதிர் பார்ப்பது ஏமாற்றத்தையே தரும்.

தமிழ்நாட்டில் ஈழத்தின் உண்மையான நிலைமை பற்றிப் பேசிவிட்டு இலங்கை போகிறேன். அங்கே எனக்கு என்ன நேருமோ தெரியாது' என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது அச்சத்தைச் சென்னையில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

> தமிழீழத்தில் சிங்களவர்கள் திட்டமிட்டு முழு வீச்சில் குடியேற்றப் படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிட்டால் தமிழர் தாயகம் தனது அடையாளத்தை இழந்து விடும் என்று முதலமைச்சர் கூறி இருக்கிறார். இதில் யாருக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை.

ஒரு முதலமைச்சரே இலங்கை செல்லத் தயங்கும் நிலையில், சிங்கள இனவெறி அரசுக்கு எதிரான போரில் ஈடுபட்டவர்களாகவோ, ஈடுபட்டவர்களுக்கு உதவியவர்களாகவோ, அவர்களின் உறவினர்களாகவோ உள்ளவர்கள் சிங்களப் படையினரால் தேடப்பட்ட நிலையில், ஏதிலிகளாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தமிழ் நாட்டில் வந்து தங்கியிருக்கிறார்கள். இவர்களை ஈழத்துக்குத் திருப்பி அனுப்புங்கள் என்று முதலமைச்சர் எப்படிக் கூறுகிறார் என்று தெரியவில்லை.

தமிழீழ மண்ணில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை'. சிங்களப் படைகளின் ஒடுக்கு முறைக்கு நடுவில் வாழ்கிறோம்'. எதையும் அந்த மண்ணில் நாங்கள் செய்ய முடியவில்லை' என்றெல்லாம் சென்னையில் உரையாற்றிய முதலமைச்சர், இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் வாழும் ஏதிலிகளை எதற்காகத் தமிழீழ மண்ணுக்கு அழைக்கிறார்?

இன்றும், தமிழீழத்தில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கும் கனடாவுக்கும் ஏதிலிகளாகத் தமிழர்கள் கப்பலேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலுமா தமிழ்நாட்டில் வாழும் ஈழ ஏதிலிகளைத் தமிழீழத்துக்கு அழைக்கிறீர்கள்?

அமைதியான சூழ்நிலை உருவாகும்வரை அந்நாட்டில் இருந்து வெளியேறிய ஏதிலிகளைத் திருப்பி அனுப்புவது நெருப்பில் இருந்து தப்பியவனை மீண்டும் நெருப்பில் தள்ளும் செயல் போன்றதேயாகும்.

இந்தியாவில் தங்கி இருக்கும் திபெத்திய ஏதிலிகளை திபெத்துக்குத் திருப்பி அனுப்பி விட்டீர்களா? இல்லையே.

குர்திஸ்தானில் இருந்து வெளியேறி உலகெங்கும் ஏதிலிகளாக வரழும் குர்திஸ் ஏதிலிகள் அவர்கள் மண்ணுக்குத் திருப்பி அனுப்பப் பட்டார்களா? இல்லையே.

வட மாகாண சபை முதலமைச்சரின் இன்னொரு கருத்து, தமிழ்நாட்டு ஈழ உணர்வாளர்கள் முடிவு எதையும் எடுக்கத் தகுதியற்றவர்கள் என்பது போல் அமைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ளவர்கள் தமிழீழம் குறித்து உணர்ச்சி வசப்படக் கூடாது என்று கூறி இருக்கிறார் அவர்.

அன்றாடம் தமிழீழ மக்கள் கொல்லப்படும்போது, தமிழீழப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு இரையாகும்போது, தமிழீழ நிலம் சிங்களக் குடியேற்றத்தால் பறிக்கப்படும் போது, தமிழீழத் தேசிய இனம் சிங்கள இனவெறி அரசின் இன அழிப்பு' வெறிப் பாய்ச்சலைச் சந்திக்கும் போது தமிழ்நாட்டு மக்கள் உணர்ச்சி வசப்படக் கூடாது என்று கூறுவது சரியா?.

அமெரிக்காவில் வாழ்ந்த அயர்லாந்து மக்கள் உணர்ச்சி வசப்பட்டுக் கொந்தளித்ததன் விளைவாகத்தான் பிரிட்டன் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும், அயர்லாந்து தனி நாடாக விடுதலை பெறவும் நேர்ந்தது என்பதை முதலமைச்சர் அறிவாரா?

தமிழ்நாட்டு மக்களின் தமிழீழத்துக்காக உலகம் தழுவிய தமிழீழ மக்களிடையேயான வாக்கெடுப்பு என்னும் கருத்து சிங்கள அரசுக்குச் சினத்தை உண்டாக்கும் என்பதற்காக, தமிழ்நாட்டு மக்களின் இந்த உறுதிமிக்க முடிவையும், கருத்தையும் அவர்களின் உணர்ச்சி கூடிய நடவடிக்கை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், முதலமைச்சரும் கருதுவார்களானால் அவர்கள் தவறி முழைக்கிறார்கள்.

தமிழீழ மக்களும், தமிழ்நாட்டு மக்களும், உலகத் தமிழர்களும் இலங்கைக்கு வெளியே தமிழீழ விடுதலைக்காக மேற் கொள்ளும் முயற்சிகளுக்குத் தடைக் கற்களாக இருக்காதீர்கள் எனப் பணிவுடன் வேண்டுகிறேன்.

கருத்து

வாசகர் திருமுகம்

தமிழர்களின் வாக்குகள் தேவையில்லை

"நிராகரிக்கவும் தயாராக வேண்டும்" என்ற தங்களின் 30.11.2014 ஆம் திகதிய ஆசிரியர்தலையங்கம் பொருத்தமான நேரத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எவ்வாறாயினும் அந்த தலையங்கத்தின் கடைசிப் பந்தியில் தமிழர்கள் உள்ளடங்கலான சிறுபான்மையினரின் ஆதரவு அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிப்பதற்கு மிக முக்கியம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. 2006 இல்விடுதலைப்புலிகள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்தபோது ஒரு சில முஸ்லிம் வாக்குகளுடன் சிங்கள மக்களின் வாக்குகளை மட்டுமே பெற்று ஜனாதிபதி தெரிவானார்.

2010 இல் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார்.

எனவே தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறாமலே ஒரு ஜனாதிபதி தெரிவு செய்யப்படலாம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் வாக்குகள் அவருக்கு மேலதிகமான வாக்குகள் மட்டுமே. தமிழர்கள் தங்களின் வாக்குகள் தான் ஜனாதிபதியைத் தீர்மானிக்கின்றன என்று தொடர்ந்தும் மனப்பால் குடித்து கற்பனையில் மகிழ்ந்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் பின்னர் சிங்கள மக்களின் பேரினவாதத்தை அந்த மக்கள் மத்தியில் கட்டியெழுப்புவது மிகவும் இலகுவாகிவிட்டது.

அத்துடன் பழைய சிங்கள மன்னர்களான மகா பராக்கிரமபாகு, சோழர்களை எதிர்த்த முதலாம் **விஜய**பாகு போன்றவர்களைப் **போல** இலங்கை முழுவதையும் **ஒரு** குடையின் கீழ் ஆள வேண்டும் என்பதே அவர் களின் நோக்கம்.

சிங்களத் தலைமைகள் தமிழர்களுக்குப் பிரச் சினை உள்ளது என்பதை ஏற்கப் போவதில்லை. அவ்வாறான ஒரு நிலையில் சர்வதேச நாடுகளின் பிரசன்னத்தின் கீழ் சிங்களத் தலைமைகளுடன் ஒப்பந்தம் செய்தால் மட்டுமே, அதைச் செயற்படுத்த அந்த நாடுகள் அழுத்தம் கொடுத்தால் மட்டுமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படக் கூடும்.

இலங்கை –இந்திய ஒப்பந்தத்தையே உரிய முறையில் செயற்படுத்தாத அரசுகள் இந்திய அழுத்தம் காரணமாக எதையும் எமக்குத் தரப் போவதில்லை. அத்துடன் உள்நாட்டு விட யங்களில் ஏனைய நாடுகள் தலையிட அனுமதிக்கப் போவதில்லை எனவும், தானும் இலங்கையின் உள்நாட்டு விட யங்களில் தலையிடப் போவதில்லை எனவும் 18ஆவது "சார்க்" மாநாட்டில் நரேந்திரமோடி தெட்டத்தெளிவாகத் தெரிவித்து விட்டார்.

எனவே இந்தியாவின் அழுத்தத்துக்குப் பணிந்து ஏதாவது ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்கும்படி த.தே. கூட்டமைப்பு தமிழ் மக்களைக் கோரலாம் என்ற சந்தேகமும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.

க.குருநாதன்.

இருக்கை வசதி கிடைக்குமா?

தனியார் மினி பஸ்களில் யாழ்ப்பாணத்திலிருந்து குப்பிளான் செல்லும் பயணிகள் இருக்கை வசதி இல்லாததால் நின்று கொண்டே பயணிக்கும் அவலம் தொடர்கின்றது. குறுகிய தூரம் பயணிக்கும் பயணிகள் இருக்கை களை ஆக்கிரமித்துக் கொள்வதால் இந்த நிலை நிலவிவருகின்றது.

அரச பஸ் சேவை இடம்பெறாததால் குப்பிளான் செல்லும் பயணிகள் தனியார் மினி பஸ்களிலேயே பயணிக்கின்றனர்.

ஆகவே அவர்களுக்கான இருக்கை வசதிகளை பஸ் நடத்துநர்கள் ஏற்படுத்திக் கொடுத்தால் அந்தப் பயணிகளின் சிரமம் குறைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மு.சுப்பிரமணியம், குப்பிளான்.

கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

வாளேந்தியவரா? வாளைத் தீட்டியவரா? ஒரே குழப்பம்..!

என்னதான் முடிவெடுக்கப் போகினம்?, இந்தக் கேள்விதான் திரும்பும் பக்கமெல்லாம் கேட்கிறது. அதாவது தமிழர் தரப்பைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று முடிவுசெய்வார்கள் என்பதற்கான கேள்வியும், எதிர்பார்ப்பும் பரவலாக உணரப்படுகின்றது. ஒவ்வொருநாள் காலையிலும் பத்திரிகைகளைப் புரட்டும் ஒவ்வொரு தமிழ் வாசகனும் இந்தக் கேள்விக்கான பதிலைத்தான் தலைப்புச் செய்தியாக எதிர்பார்க்கிறான். இந்தத் தேர்தல்களும், ஆட்சிக் கட்டில் ஏறுபவரும் எங்களுக்கு எதுவும் தரப்போவதில்லை என்பது தெரிந்திருந்தும், அது தொடர்பிலான ஒரு சுவாரஸ்யத்தைத் தமிழர்கள் அன்றுதொட்டு இன்றுவரை கொண்டிருக் கின்றனர்.

ஆனால் கூட்டமைப்பினர் இன்னமும் சரியான முடிவை அறிவிக்கவில்லை. விடுதலைப் புலிகள் இருக்கும் வரையில் அதாவது 2009 வரையில் தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவை அறிவிப்பவர்களாக அவர்களே இருந்தனர். புலிகளின் தீர்மானத்தையே கூட்டமைப்பு அரசியல் இயக்கமாக நின்று மக்களிடம் எடுத்துச் சென்றது. புலிகளின் மறைவுக்குப் பின்னர், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை மேலும் எடுத்துச் செல்லவேண்டிய தார்மீகப் பொறுப்பைக் கூட்டமைப்பு எடுத்துக் கொண்டது. வேறு பலமான சக்திகள் தமிழ் அரசியல் அரங்கில் இல்லாமையும் இதற்கு ஒரு காரணம். எனவேதான் தமிழ் மக்களின் அனைத்துவிதமான அரசியல் தீர்மானங்களையும் மேற்கொள்பவர்களாக கூட்டமைப்பினர் இருக்கின்றனர், இருக்க வேண்டும் என மக்கள் நம்பிக்கை கொண்டனர். அதனால்தான் கூட்டமைப்பு சொல்லும்செய்தி தமிழர்களுக்கு வேதவாக்காகமாறியது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலும் நடந்தது. இப்போது இருக்கின்ற அரசியல் கொதிநிலை சிறிதளவு வித்தியாசத்தில் அப்போதும் உணரப்பட்டது. ஆனால் அப்போது அரசியல் ஆட்டம் இருவருக்கிடையில்தான். களத்தில் நின்று வாளேந்தி வெட்டிக் கொன்றவனுக்கும், அவ்வாறு கொலை புரிவதற்கு வாள்களைத் தீட்டிக் கொடுத்த வனுக்கிடையிலும்தான் அந்தப் போட்டி நடந்தது. அந்தப் போட்டியில் வாள் தீட்டிக் கொடுத்தவரைப் பழிவாங்குவதற்காக, வாளேந்திக் கொலைத்தாண்டவம் ஆடியவரை ஆதரிக்கக் கேட்டது கூட்டமைப்பு. தமிழர்களும், வாளேந்தி வேட்டையாடியவனின் ஆடையில் தமிழர்களின் இரத்தம் காயும் முன்னரே அவரை ஆதரித்தனர். வாக்குப் போட்டனர். வெற்றி வாளேந்தியவனின் பக்கம்தான் நெருங்கியது ஆனபோதும்அவரால்அரியாசனம்ஏறமுடியவில்லை. சிறைக்குச் செல்ல வைத்தது இந்த நாட்டின் ஜனநாயகம். ஆகவே, கூட்டமைப்பின் முதல் தெரிவான ஜனாதிபதி வேட்பாளர் மண்ணைக் கவ்வினார். இன்னும் அசுர பலத்தோடு பதவியேறியது ராஜபக்ஷ குடும்பம். இப்போது புலிகளற்ற காலத்தின் இரண்டாவது ஜனாதிபதி தேர்தற் சுற்று வந்திருக்கிறது. இதிலும் தமிழர்கள் எந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் வேண்டும் என்ற முடிவை கூட்டமைப்பினரே அறிவிக்க வேண்டும். அதற்கான காத்திருப்பில்தான் தமிழர்கள் இப்போது இருக்கின்றனர்.

ஆனால் இந்தத் தருணத்தில் கூட்டமைப்பின் தெரிவு யாரென்பதில்தான் சிக்கலே இருக்கின்றது. கடந்த முறை தேர்தலில் வாளேந்தியவரும், வாளைத் தீட்டிக் கொடுத்தவரும்தான் களமிறங்கினர்.

இந்தத் தடவை வாளேந்தியவர், வாளைத் தீட்டிக் கொடுத்தவர், வாளை உற்பத்தி செய்த குடும்பம், அதனைக் காலம் காலமாக வளர்த்துப் பேணிப் பாதுகாத்த உறவுகள், வாளின் உறைகள் என அனைவருமே ஓரணிக்கு வந்திருக்கின்றனர். இந்தக் குழம்பிய, குழம்பப்போகின்ற குட்டையிலிருந்து ஒரு குடும்பம் மட்டும் தனித்து விடப்பட்டிருக்கிறது. அதுவே ராஜபக்ஷ குடும்பம்.

இந்த இடத்தில்தான் யாரை ஆதரிப்பது என்று கூட்டமைப்பும் குழம்புகின்றதோ?

பத்தி எழுத்து

சிறுவர்

வேடம் போட்டு ஏமாற்றலாமா?

ஒரு புறாக் கூட்டில் புறாக்கள் ஆனந்தமாய் உண்டு களித்திருப்பதை ஒரு காகம் பார்த்தது. தானும் அந்தப் புறாக்களோடு சேர்ந்து வாழ விரும்பியது. எப்படி அந்தப் புறாக்களுடன் சேரலாம் என்று யோசனை செய்தது. முடிவாகத் தன் சிறகுகளுக்கு வெள்ளை நிற வர்ணம் பூசியது.

ஒரு நாள் இரவில் புறாக்களுக்குத் தெரியாமல் புறாக்கூண்டின் உள்ளே நுழைந் தது.அது வாயைத் திறக்காமல் இருந்த வரையில் அதை யாரும் கவனிக்கவில்லை. நன்றாக உண்டு களித்தது. வரவர அதற்குத் தைரியம் அதிகமாயிற்று. தைரியமும் களிப்பும் சேர்ந்து கொள்ளவே தன் அதிர்ஷ்டத்தை நினைத்து ஒருநாள் பலமாய்ச் சிரித்தது. அதனால் அதன் குரல் வெளிப்பட்டது.

அது யார் என்பதை ஏனைய புறாக்கள் தெரிந்து கொண்டு அதை வெளியே அடித்துத் துரத்தின. காகம் அடிபட்டுத் தன் இனத்தினர் வசித்த பகுதிக்குத் திரும்பியது. அதன் வெள்ளை நிறத்தையும் அடி பட்ட கோலத்தையும் மற்றக் காகங்கள் பார்த்தன. அதன் தந்திரச் செயலை உணர்ந்து தங்களோடு சேர்த்துக் கொள்ள அவை மறுத்துவிட்டன.கடைசியில் அந்தக் காகம் தனித்து விடப்பட்டது.

பி.கிதுர்சிகன்,
தரம்–3



சி.டிசாந்தன்,
கனகரத்தினம் ம.ம.வி.

இரு கொள்ளையர்கள்

ஒரு முதலாளியும்,கொள்ளைக்காரன் ஒருவனும் சந்தித்துக் கொள்கின்றனர். முதலாளி கொள்ளைக் காரனைப் பார்த்து, "தாங்கள் யார்?" என்று கேட்டார். கொள்ளைக்காரன்,"நான் ஒரு கொள் ளைக்காரன், நான் பணக்காரர்களிடம் கொள்ளை யடித்து வாழ்கிறேன். ஆமாம், தாங்கள் யாரென்று அறிந்து கொள்ளலாமா?" என்றான். அதற்கு முதலாளி, "நான் ஒரு முதலாளி. ஏழை களைக் கொள்ளையடித்து பணக்காரனாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

பெர்னாட்ஷாவின் நாடகத்தில் வரும் காட்சி இது



வீடு கட்டும் பல்லிகள்

மணலுக்கு அடியில் வீடுகட்டி வாழும் பல்லிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? பாலைவனத்தில் வாழும் ராட்சதப் பல்லிகள் மணலுக்கு அடியில் வீடுகட்டி வாழ்க்கை நடத்துகின்றன என்ற அதிசயத் தகவலை ஆஸ்திரேலியா அறிவியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். ஆஸ்திரேலியா வின் பாலைவனத்தில் பல்லிக் குடும்பங்கள் வசிக்கின்றன. இவைகள் திட்டமிட்டுகுடும்ப வாழ்க்கை நடத்துகின்றன.அதிக வெப்பத்தில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காகத் தரைக்கு அடியில் தங்கள் வீடுகளை அமைத்துக் கொள்கின்றன. இவைகள் கட்டும் வீடுகளில் நிறைய வாசல் கள் இருக்கின் றன. ஒரு வீட்டில் இருந்து இன்னொரு வீட்டுக்குச் செல் வதற்கு வழிகளும் காணப் படுகின்றன. இந்த வீடு சுமார் 40 அடி நீளத்துக்கு அமைக்கப்படு கிறது. ஒரு வீட்டில் சராசரியாக 20 வாசல்கள் காணப்படுகின் றன. வீடு கட்டுவதற்கு குடும்பத் தில் உள்ள அத்தனை பல்லிகளும் வேலை செய்கின்றன. குட்டிப் பல்லி களுக்காகத் தனி இடம் ஒதுக்கப்படு கிறது. மனிதர்களைப் ளபோலவே தங் கள் வீட்டைதங்களுக்குப் பிறகுதமது வாரிசுப் பல்லிகளே பயன் படுத்த வேண்டும் என்பதிலும் இந்தப் பல்லி கள் உறுதியாக இருப்பதாக அறிஞர் கள் தெரிவித்துள்ளனர். பல்லிகள் அமைத்த வீட்டில் அவை ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் குடும்பத்தோடு வாழ்கின்றன. உலகம் முழுவதும் ஐந்தாயிரம் வகையான பல்லி இனங் கள் உள்ளன.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2014 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

நந்தகுமார் அபிசா

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டுவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.
(34608) (4.3.6)

செல்வி வை. சாவித்திரி அவர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலிகாமம் கல்வி வலயத்தினால் மாண்புறு ஆசிரியர் சேவைக்காக சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எமது பாடசாலை உபஅதிபர்

செல்வி வை. சாவித்திரி அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர்:
யா/ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலைச் சமூகம்
கந்தரோடை, சுன்னாகம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

ச.கனிமொழி- 156, அ.யேசுகேனுஜன்- 153 றி.முகிலன் 151-
2014 தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மன்னார் இலுப்பைக் கடவை
அ.த.க.பாடசாலை மாணவர்களான ச.கனிமொழி- 156,
அ.யேசுகேனுஜன்- 153, றி.முகிலன்- 151 மற்றும்
70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவ
மாணவிகளையும் அவர்களைப்
பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும்
மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகம்.
(சி/18056) (4.3.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இயற்றாலை அ.மி.த.க பாடசாலையில் 2014 தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

படத்தில் இ.வ: பா.டயானன்- 171,
சூ.வேணுஷன்- 178, தி.கிரிதரன்- 163, சி.வசிஹா- 181,
உ. தரணிகா- 168, வே.ஜிந்துசா- 164

இவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் குழாம்
இ.வ: திருமதி நி.தேவவிநோதன் (ஆசிரியர்),
திருமதி சி.பாலச்சந்திரன் (ஆசிரியர்),
சி.ஸ்ரீபாலகிருஷ்ணபிள்ளை (ஆசிரியர்),
ஐ.தேவராஜன் (அதிபர்),
திருமதி ம.இராசரத்தினம் (ஆசிரியர்),
திருமதி ஜெ.நந்தகுமார் (ஆசிரியர்)

இவர்களுடன் 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்து சான்றிதழ் பெற்ற 24 மாணவர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(54633)(4.3.6) சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்.

ஆக்கம்

இடைநிலை வகுப்புக்களில் புதிய பாடத்திட்டம்

ஆசிரியர்
கந்தப்பு பரமேஸ்வரன்



விஞ்ஞான பாடத்தின் பிரதான நோக்கம் மாணவர்களினது தனிப்பட்டவிருத்தியைவிஞ்ஞான ரீதியான வாழ்க்கை முறையினூடாக ஏற்படுத்துவதன்மூலம் தேசிய விருத்தியை ஏற்படுத்தி தனித்துவம் கொண்ட வளமான நாடாக இலங்கையை மாற்றியமைத்தல் ஆகும்.

இந்த நோக்கத்தை அடைவதற்கான ஓர் அத்திபாரமாக விஞ்ஞான பாடத்துக்கு உரித்தானவொரு குறிக்கோள் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குறிக்கோளை அடையும் பொருட்டு, இடை நிலைக் கல்விக்கு காலடி எடுத்து வைக்கும் தரம்–6 மாணவர் தொடங்கி உயர்தரம் கற்கும் மாணவர் வரை முயற்சியுடனும் ஊக்கத்துடனும் கற்க வேண்டும் என்பதற்காக இந்த மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான உத்தி, அதன் பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்த விதத்தில் கல்வி அபிவிருத்தியும் இடம் பெற்று வருவதை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இந்தத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு மானிட மூலவள அபிவிருத்தி எனப்படும் புதிய கருதுகோள் வளர்த்தெடுக்கப்பட்டது. இந்த உத்தியானது, பொருத்தமான கல்வி முறை யொன்றின் அபிவிருத்தியிலும், தொழில் வாய்ப்புக்களின் தேவைகளுடன் பொருந்திச் செல்லக்கூடிய விதத்தில் கல்வியை வழங்குவதிலும், கவனம் செலுத்துவதாக அமைகிறது. இலங்கையைப் பொறுத்தமட்டில் முறைசார்ந்த கல்வியமைப்பு ஒரு நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ள போதிலும் இடைநிலை வகுப்புக்களிலும், உயர் தரத்திலும் பயிலும் மாணவர்களில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெறும் வீதமானது ஏனைய பாடங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைந்தமட்டத்திலேயே காணப்படுகின்றது. இந்தக் குறைபாட்டை நீக்கும் பொருட்டு அண்மைக் காலங்களில் பல்வேறுபட்ட திட்டங்களை முன்னெடுத்து மாணவர்கள் இந்தப் பாடங்களில் சித்தியடையும் வீதத்தை உயர்த்துவதற்கும், மாறிவரும் உலகுக்குஏற்பஅறிவியல்தொழில் நுட்ப செயற்றிறன்களை விருத்தி செய்வதற்குமான திட்டங்கள் கல்வி அமைச்சினால்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பொருட்டு இலங்கையின் இடை நிலை கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொரு முறை மேற்கொள்ளப்படும் திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்தத் தேர்ச்சி மையக் கலைத் திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015 ஆம் ஆண்டிலிருந்து தரம் 6,10 ஆகிய வகுப்புகளுக்கும், அடுத்த ஆண்டுகளில் தரம் 7,8,9,11 வகுப்புக்களிலும் மறுசீரமைக்கப்பட இருக்கின்றது.

இலங்கையின் கல்வித்துறை அபிவிருத்தியில் முதன்மை நிறுவனமாக செயற்பட்டுவரும் தேசிய கல்வி நிறுவனமானது பாடசாலைகளில் இந்த மறுசீரமைக்கப்பட்ட விஞ்ஞான பாடத்தை கற்பிப்பதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு இலங்கையிலுள்ள அனைத்து கல்வி வலயங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவுகத்தில் ஆரம்பகட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு இவர்களினூடாக அந்தந்த வலயங்களில் விஞ்ஞான பாடத்தைக் கற்பித்த ஆசிரியர்களுக்கான செய்முறை போதனைகள் வலயக் கல்விப் பணிப்பாளர்மற் றும் விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களின்வழிகாட்டலின்பிரகாரம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்த மறுசீரமைக்கப்பட்ட கல்வி முறைமையின் அறிமுகமானது ஒவ்வொரு மாணவனும் விஞ்ஞான பாடகற்றல் கற்பித்தல் செயன்முறைகளினூடாக அவர்களுக்குரிய ஆற்றல்களுக்காக தேர்ச்சி மட்டங்களை அடைய வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

பாடசாலைகளின் வளங்களை வினைத் திறனாகவும் பயனுள்ள வகையிலும் கையாளுவதன் மூலம் இந்தச் செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுக்கலாம். தற்போது நாடெங்கிலும் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் மஹிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடங்கள் சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு பாடசாலைகளுக்கென கல்வி அமைச்சினால் வருடாந்தம் ஒதுக்கப்படும் தர உள்ளீட்டு நிதியையும் கொண்டு முற்கூட்டியே திட்டமிட்டு தேவையான உள்ளீடுகளையும் வளங்களையும் பயன்படுத்தி விஞ்ஞான பாட கற்றல், கற்பித்தல் செயற்பாடு முன்னெடுக்கப்படுமாயின் எதிர் காலத்தில் விஞ்ஞான பாட அடைவு மட்டம் உயர்வடைவதுடன் மாணவர்கள் அறிவியல் தொழில் நுட்ப துறைகளில் ஆழ்ந்த புலமையையும் பெற்றுக்கொள்ள வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

வணிகம்

பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு தொடர்பில் விசேட கருத்தரங்கு

இயந்திர சாதனங்களின் பராமரிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 'யுனைட்டட் டிராக்டர்ஸ் அன்ட் எக்கியுப்மன்ட்' (யு.ரி.ஈ.) நிறுவனம் பிராந்திய மட்டத்தில் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்திருந்தது. அண்மையில் கருத்தரங்கொன்று இரத்தினபுரி, பெல்மடுல்ல பகுதியில் இடம்பெற்றது.

வியாபாரங்கள் இயற்கையாகவே போட்டித்தன்மை வாய்ந்தனவாக அமைந்திருப்பது என்பது எந்தவொரு நிறுவனமும் துரிதமாக செயலாற்றி பொறுப்பு வாய்ந்த சேவையை வழங்கும் திறனை கொண்டிருப்பது என்பதும் மிகவும் கட்டாயமானதாக அமைந்துள்ளது.

இதை கருத்தில் கொண்டு, கட்டர்பில்லர் சாதனங்களின் நீடித்த பாவனையை உறுதி செய்து, அதன் மூலம் நீண்ட கால் அடிப்படையில் பெறுமதிகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பில், யு.ரி.ஈ இனால் தொடர் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

யு.ரி.ஈ. இன் பொருள்கள் உதவி சேவைகள் பிரிவின் பொது முகாமையாளர் எச். ஆர். ரணசிங்க கருத்துத் தெரிவிக்கையில், 'எந்தவொரு திட்டத்துக்கும், நேர காலத்தில் வேலைகளை பூர்த்தி செய்வது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. ஒப்பந்தக்காரருக்கு பெருமளவு சேமிப்பை வழங்கும் வகையில் அமைந்திருப்பதுடன், சாதனம் செயலிழந்து காணப்படும் வேளையை குறைக்கும் வகையில் அமைந்திருப்பதுடன், வினைத்திறன் வாய்ந்த நேர முகாமைத்துவத்தை வழங்கும் வகையில் பராமரிப்பு செயற்பாடு ஏன்பது அமைந்திருக்கும். தவிர்க்க முடியாத நிலைகளின் காரணமாக, ஒப்பந்தக் காரரினால் திட்டமொன்று தாமதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டால், அது பொதுமக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும் என்பதுடன், பொருளாதாரத்தை பாதிக்கும் வகையிலும் அமைந்திருக்கும்' என குறிப்பிட்டார். (த)

250 மரக் கன்றுகளை நடும் வேலைத் திட்டம்

திருகோணமலை மாவட்டத்தில் 'தேசத்திற்கு நிழல்' என்ற தொனிப்பொருளில் 250 மரக் கன்றுகளை நடும் வேலைத்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் குச்சவெளி பிரதேசசெயலாளர் தயாபரன், இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண உப நிறைவேற்று அதிகாரி தர்மகீர்த்தி மற்றும் இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் எஸ்.அனந்தநடேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திருகோணமலை – புல்மோட்டை வீதியில் நிலாவெளி பொலிஸ் நிலையத்திலிருந்து 1கிலோ மீற்றர் தூரத்துக்கு வீதியின் இருமருங்கிலும் 5 வகையான நிழல் தரும் மரங்கள் நட்டு வைக்கப்பட்டன. (த)

செய்திகள்

நீதிவான் முன்பாகக் கஞ்சா பரிமாறியவர்களுக்கு சிறை

யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ்.நீதிமன்றில் நீதிவான் முன்னிலையிலேயே எதிரிக் கூண்டில் வைத்துக் கஞ்சாப் பொதியைச் சகாக்கு வழங்கியவர்மற்றும்அதனைப்பெற்ற வரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 6 மாத சிறைத் தண்டனையும் தலா ரூபா 10 ஆயிரம் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது யாழ். நீதிமன்று.

கடந்த 19 ஆம் திகதி யாழ். திறந்த நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் எதிரிக் கூண்டில் நின்ற வாறு இந்தச் சம்பவத்தில் இவர்கள் ஈடுபட்டனர்.இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

பல்வேறு இடங்களில் இடம் பெற்ற திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் யாழ்.ஐந்து சந்தியைச் சேர்ந்த கஜேந்திரன் என்பவர் விளக்கமறியலில் உள்ளார். அவருக்கு எதிரான பிறிதொரு வழக்கில் யாழ். மேல் நீதிமன்றினால் 2 வருட சிறைத் தண்டனை முன்னர் விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவர் உட்பட யாழ். ஐந்து சந்தியைச் சேர்ந்த வசந்த குமார் என்பவரும் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனாலும் அவர்களுக்கு எதிரான வழக்குத் தொடர்ந்தது. கஜேந்திரனுக்கு மன்னார் மற்றும் வவுனியா நீதிமன்றங்களிலும்வழக்குகள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவதினமன்று விளக்கமறியலில் உள்ள கஜேந்திரன் நீதிமன்றில் எதிரிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். அவருடன் சேர்ந்து வழக்குடன் தொடர்புடைய வசந்தகுமாரும் எதிரிக் கூண்டில் ஏறினார். எதிரிக் கூண்டில் நின்றவாறு வசந்தகுமார் என்பவர் தனது கையில் மறைத்து வைத்திருந்த சுருள் பொதியொன்றைகஜேந்திரனின்கைக்குள் வைத்துள்ளார். அதனை அங்கு நின்றிருந்த சிறைச் சாலை உத்தியோகத்தர் எ.அறிசன் பார்த்துவிட்டார். உடனே பொதி வைத்திருக்கும்கையைப் பற்றிக்கொண்டு,ஏதோபொருள் வைத்துள்ளார் என்று அவர் நீதிவானிடம் கூறினார். நீதிவான் அதனைவெளியேஎடுக்குமாறு கூறினார். அது எடுக்கப்பட்டுநீதிவான்முன்னிலையில் வைத்துப் பிரித்துப் பார்க்கப்பட்ட போதே அந்தச் சுருள் பொதியில் இருந்தது கஞ்சா என்பது தெரியவந்தது.

குறித்த நபரிடம் கொடுக்குமாறு கூறித் தந்திருந்தார் என்றும் வாய் மூலமாகக் கூறியுள்ளார். அது தொடர்பில் குறித்த சிறைச் சாலை உத்தியோகத் தரும் நீதிமன்றில் வாய்மூறைப் பாடு வழங்கியிருந்தார். கஞ்சா வழங்கிய சந்தேகநபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டு விசாரணை மேற்கொள்ளப் பட்டது.நேற்றுஅதுதொடர்பான வழக்கின் தீர்ப்பை அறிவித்த நீதிமன்று அவர்களுக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்தது.

(த-4)

சிவில் உடையில் பொலிஸார் சோதனை

கொழும்பு, வவுனியா மாவட்டங்களில் சிவில் உடையில் பொலிஸார் கடும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு, வவுனியா மாவட்டங்களில் உள்ள பஸ் தரிப்பு நிலையங்களில் பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் கடந்த ஒரு வாரமாகத் திடீரென அதிகரித்துள்ளன.

பஸ்ஸில் இருந்து பயணிகள் இறங்கியதும் சிவில் உடையில் நிற்கும் பொலிஸார் ஒரு சில இளைஞரை மட்டும்குறிப்பிட்டு அழைத்துத் தனியாக கொண்டு சென்று தமிழா ?, எங்கேபோறாய்?,எங்கிருந்து வருகிறாய்? எந்த ஊர்? போன்ற குறுக்கு விசாரணைகளிலும், உடற்சோதனை மற்றும் பொதிச் சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

(த-ரி)

லண்டன் யசிந்தனுக்குப் பிணை

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் றெக் ஷயன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதாகிவிளக்கமறியலில்இருந்த லண்டன் யசிந்தன் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த வருடம்நவம்பர்மாதம் 26 ஆம் திகதி றெக் ஷயன் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைதான ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்டமுன்னாள்அமைப்பாளரான கமலுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றச் சாட்டுப் பத்திரம் இதுவரை தாக்கல் செய்யப்படாதமையால் அவரது வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு வருகின்றது. அதே குற்றச் சாட்டில் கைதான றெக்ஷயனின் மனைவியான அனித்தாவும் கைதாகி விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப் பட்டார்.

இந்நிலையில் வேலணையில் வசித்து வந்த யசிந்தனும் அதே குற்றச்சாட்டில் கடந்த வருடம் இதே மாதம் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி கடந்த ஓகஸ்ட் மாதம் யாழ்.மேல் நீதிமன்றில்பிணைவிண்ணப்பம் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்று நேற்றுமுன்தினம் பிணை அனுமதி வழங்கியது.

அதன்படி ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் விடுவிக்கப் பட்டார்.

அவர் ஊர்காவற்றுறைப் பகுதிக்கு வெளியே வசிக்க வேண்டும் என்றும் ஊர் காவற்றுறைநீதிமன்றில்இடம்பெறும் வழக்குக்கு மாத்திரமே செல்ல வேண்டும்என்றும்மாதத்தில்இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவேண்டும் என்றும் வழக்கு நிறைவடையும் வரை வெளிநாடு செல்ல முடியாது என்றும் மேல் நீதிமன்று நிபந்தனை விதித்தது.

(த-4)

சேவை

தாவடியில் மிருகவைத்திய சேவைக்கு

தொடர்பு: 077 973 8802 (54630) (45.6.3)

கார் விற்பனைக்கு

NP KX - X X X X தொடரிலக்கமுடைய ZOTYE EXTREME விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 670 1233, 077 513 5315 (54628) (45.6.3)

ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்

கல்வியாண்டு - 2015

* தரம் 03 முதல் தரம் 13 வரையான ஆங்கில வகுப்புக்கள் மற்றும் தரம் 09 முதல் ஆங்கில இலக்கிய வகுப்புகள்.
* விசேட இலக்கண மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சிக்கான ஆங்கில வகுப்புகள்.

பார்க்க தொடர்புகளுக்கு: 076 703 2047 (54629) (45.3)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா நடிப்பில்

கத்தி

(தினசரி 4 காட்சிகள்)

10.30,2.30,6.30, 9.30

எமது செல்லா சினி தியேட்டரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்

077 326 6949

பாலர் கல்விக் கழகம்

10 பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும்

49 ஆவது வருடாந்த கலைவிழாவும் பட்டமளிப்பும் - 2014

இடம்: சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்) இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

நாள்: இன்று (05.12.2014) வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணி

தலைமை: எஸ்.பி. காசிநாதன் M.A.,J.P அவர்கள் (அகில இலங்கை சமாதான நீதிவான்)

(கழகத் தலைவர், ஆசிரியர் - சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்)

பிரதம விருந்தினர்: கௌரவ ஈ.சரவணபவன் அவர்கள் (நாடாளுமன்ற உறுப்பினர்- யாழ். மாவட்டம், முகாமைத்துவப் பணிப்பாளர் - உதயன் குழுமம்)

திருமதி யசோதை சரவணபவன் அவர்கள்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

பாலர் கல்விக் கழகம், இல.43, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

ஆட்சிக்குழு உறுப்பினரும், ஆசிரியர்களும், மாணவர்களும்.

BIT Semester 5, 3, 1 மற்றும் Project வகுப்புகள்

- 2007 இல் இருந்து Supervisor(60Projects)
- யாழில் 25 இற்கு மேற்பட்ட Software
- Windows and Web based Projects
- BIT மற்றும் ஏனைய IT Group classes
- 2014 ல் VIVA சென்ற 13 பேர் Pass ஏனையோர் திருத்திய project

BIT vb.net, php Java, C++ languages...

இல:28/23, மணல்தரை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS) 0779785796

BIT Semester 5 starts on coming Saturday at 8.30am 06.12.2014

இதுவரை BIT Complete செய்தோர் (under my Supervision, Subject and Project classes)

P.Asoktha, J.Satheechan, P.Kobikrishna, N.Vipushany, R.Naresh, M.Kohulan, T.Logini, N.Sarathadevi, A.Thirumaxal, Liyoni xavier, S.Vinotha, S.Gobikrishna, B.Suhirtha, V.jacitha, T.Sinthuja, K.Kalaivani, N.Aingaresan, R.Thiruchchenthooran, S.Mathusoothan, S.Balananthini, N.Kajan, T.Subaharan, T.Kowshika, S.Vasuthevan, P.Senthuja, S.Priyanka, ...(more than 25 students till 2013)

2014 இல் VIVA இல் சித்தி பெற்ற 13 பேரில் BIT படம் பெறும் மாணவர்களுடன் இதுவரை BIT படம் பெறுவோர் எண்ணிக்கை 30 தொடக்கம் 35 ***Semester 5 Suject classes start on Saturday 9.30 am to 12.30pm ****BIT Project Classes:Batch 1- Sun 1.00pm, Batch 2- Sat 8.30am(new batch)

ஆள்தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கவுள்ள வெளிநாட்டு பயணமுகவர் நிலையத்துக்கு பதிவு அலுவலர் தேவை.12.12.2014 இற்கு முன் சுயவிவரக்கோவையுடன் தொடர்புகொள்ளவும்

விளம்பர இல.5033, C/o உதயன், (54629) (45.3)

இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிரத்தியேக வகுப்பு

தரம்: 06.07.08 விஞ்ஞானம், கணிதம் (ஆங்கிலமொழி மூலம்)

ஆரம்பம்: 06.12.2014

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்.

தொடர்பு: 077 899 3561 (54629) (45.3)

பேற்பதி வீதி, கோண்டாவில்

பெயர் அறிவித்தல்

இல.288, சிவபுரம், பரந்தன் என்ற முகவரி கொண்ட **யோகராசா ஜயந்தினி** ஆகிய நான் **10.09.1992** ஆகிய பிறந்த திகதி தொடக்கம் **ஜயந்தினி** என்னும் பெயரைப் பாவித்து வருகின்றேன் என்று தெரிவிக்கின்றேன். **ஜயந்தினி** என்னும் எனது பெயர் எனது பிறப்புச் சான்றுப்பத்திரத்தில் பதிவு செய்யப்படத் தவறிய காரணத்தால் இந்த அறிவிப்பைச் செய்கின்றேன்.

(51302) (4.6.3)

யோ.ஜயந்தினி.

உள்நாட்டு வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவையின் வடமாகாண DHL இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

திருமுருகன் கொம்நெற் இன் சிறப்பு அனுசரணையுடன்

"Vijay Super Singers Musical Show" சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி

இந் நிகழ்ச்சிக்கு பிரதான அனுசரணை: tilko jaffna city hotel இணை அனுசரணை : * சூரியா மோட்டர்ஸ், (யாழ். மண்ணில் முதல்முறையாக மாற்று வலுவுள்ளோருக்கும் ஏனையோருக்கும் முச்சக்கர வண்டி வழங்குவோர்.) * Shanu T.V.S , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் * ராசி கலக்ஷன், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தென்னிந்திய விஜய் தொலைக்காட்சியின் கலைஞர்களான திவாகர், சோனியா, அழகேசன், மற்றும் ஸ்ரீநிசா கலந்து சிறப்பிக்கும் மாபெரும் சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி

இடம் :இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கம், 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

காலம் 06.12.2014 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு

குறிப்பு: யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் இலங்கைவேந்தன் கலைக்கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்

ரிக்கட் கிடைக்கும் இடங்கள்: **திருமுருகன் கொம் நெற்**

- 271A, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
- 64, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
- பிரதான வீதி, சங்கானை.
- 50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
- கடற்கரை வீதி, குருநகர்.
- பிரதான வீதி, பருத்தித்துறை
- 18, பிரதான வீதி, நெல்லியடி.
- வேம்படி றோட், பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை.
- சூரியா மோட்டர்ஸ்,
- ராசி கலக்ஷன், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
- Shanu T.V.S , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- tilko jaffna city hotel

உலகச் செய்திகள்

இராணுவ அதிகாரிகள் பெயரில் போலியான பேஸ்புக் பக்கங்கள்

பாகிஸ்தான் இராணுவம் அதிர்ச்சி

இஸ்லாமபாத், டிசெ.5

பேஸ்புக் சமூகவலைத்தளத்தில், தங்களது தலைமை அதிகாரிகளின் பெயர்களில் போலியான பக்கங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் இராணுவமும், ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பும் அந்த நாட்டு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்திடம் முறைப்பாடு தெரிவித்துள்ளன.

இதுகுறித்து பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் 'டான்' பத்திரிகையில் வெளியானசெய்தியில் பாகிஸ்தானின் மிகசக்திவாய்ந்த அமைப்பான இராணுவமும், அதன் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ. அமைப்பும் அந்த நாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம், தொலைத் தொடர்பு ஆணையத்திடம் தனித்தனியாக முறைப்பாடு மனுக்களை அளித்துள்ளன. அவற்றில், இராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் ரஹீல் ஷெரீஃப், ஐ.எஸ்.ஐ. தலைவர் ரிஸ்வான் அக்தர், பிற உயர் அதிகாரிகளின் பெயர்களில் ஏராளமான ஃபேஸ்புக் வலைத் தளப் பக்கங்கள் உருவாக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில், ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பின் மக்கள் தொடர்பு அதிகாரி ஆசிம் பாஸ்வாவின் பேஸ்புக் பக்கத்தைத் தவிர மற்ற அனைத்தும் போலியானவை என்று அந்த முறைப்பாட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதுஎனக்குறிப்பிட்டுள்ளது (வ)

12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாளிகை லண்டனில் கண்டுபிடிப்பு



லண்டனில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கோட்டைக்குள் இதுவரை கண்டுபிடிக்கப்படாத அளவில் மிகப்பெரிய மாளிகையை தொல்லியல் துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

கோட்டையின் புல் தளத்துக்கு கீழே காணப்பட்ட இந்த மாளிகை 700 வருடங்களுக்கும் மேலாக மண்ணில் புதையுண்டு இருந்திருக்கலாம் என்றும், வலுவான இந்த மாளிகையின் உள் மற்றும் வெளித்தோற்றம் ரோமானிய அரசின் உலோகக் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்றும் தொல்லியல் துறையினர் கருத்துத் தெரிவித்தனர்.

பிரதேசவியல் மற்றும் புவி இயற்பியல் போன்ற தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அந்த மாளிகையின் உட்புற மற்றும் வெளிப்புற முற்றங்களை தொல்லியல் துறையினர் ஆராய்ந்தனர். தொல்பொருள் ஆய்வாளர்களும், வரலாற்றாய்வாளர்களும் அங்கு ஒரு தொன்மையான நகரம் இருந்ததை அறிந்திருந்தாலும், இதுவரை அந்தத் தளத்தின் முறையான வரைபடம் எதுவும் இல்லை. இந்தமுறை ஆய்வில் பூமிக்கடியில் நிறைய கட்டடங்கள் இருப்பது உறுதியாகியுள்ளது.

இந்த ஆய்வின் மூலம் அந்த நகர எல்லைக்குள் உள்ள கட்டடங்களின் விரிவான ஒளிப்படமும் கிடைத்துள்ளது என்று அங்கு புவி இயற்பியல் ஆய்வை மேற்கொள்ளும் சவுத்தாம்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிறிஸ்டியன் ஸ்ட்ரட் தெரிவித்துள்ளார். இந்த அளவு பெரிதான தொன் மமான கட்டடத்தை பிரிட்டன் தொல்பொருள் துறையினர்கண்டுபிடித்திருப்பது இதுவே முதல் தடவையாகும், 3 மீற்றர் கனமான சுவரால் சூழப்பட்ட 170 மீற்றர் நீளமும் 65 மீற்றர் அகலமும் கொண்ட ஒரு வளாகம், 60மீற்றர்நீளம்கொண்ட அரங்கம், மேல்தளம், மற்றும் பல்வேறு தடுப்புச் சுவர்கள் கொண்ட அதன் தோற்றம் அது 12 ஆம் நூற்றாண்டைச்சேர்ந்தமாளிகையாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதவைப்பதாகக் கூறப்படுகிறது. (வ)

மகளுக்கு தாய் கருப்பை தானம்

பிரிட்டனில் கருப்பை இன்றி தாயாகமுடியாததமதுமகளுக்கு அவரது தாய் தனது கருப்பையை தானமாகக் கொடுத்துள்ளார்.

அந்த நாட்டில் குழந்தை பெற முடியாத பெண் ஒருவர் தாயின் கருவைப் பெற்று அறுவை சிகிச்சைமூலம்அழகானகுழந்தை ஒன்றைப் பெற்றெடுத்து ஆரோக்கியமாக இருக்கிறார்.

அதேபோல் மற்றொரு பெண்ணும் தனது தாயிடம் இருந்து கருப்பையை தானமாகப் பெற்று தாயாகியுள்ளார்.

இதுகுறித்து மருத்துவர்கள் கூறுகையில்,பிரிட்டனில்சுமார்15000 பெண்கள் கருப்பை பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிறக்கும் போதே கருப்பை இன்றியோ, அல்லது நோய் பாதிப்பால் கருப்பையை அகற்றியோ விடுகின்றனர் என்றும் இந்தகருப்பைமாற்றுஅறுவைச் சிகிச்சையானது இது போன்ற பெண்களுக்குமிகப்பெரியவரப் பிரசாதமாக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளனர். (வ)

என்னுடைய பெயரை வைக்க வேண்டாம்

மக்களை எச்சரிக்கும் வடகொரிய ஜனாதிபதி

வட கொரியாவில், நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்னின் பெயரை வைத்துக் கொண்டுள்ளவர்கள் தங்களின் பெயர்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

2011ஆம் ஆண்டிலேயே, தற்போதைய தலைவரின் தந்தை கிம் ஜாங் இல் உயிருடன் இருந்தபோதே இதற்கான உத்தரவு விடுக்கப்பட்டிருந்தது என்று தென்கொரிய ஊடகங்களில் தெரிவிக்கின்றன.

புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு கிம் ஜாங் உன் என்று பெயரிடக்கூடாது என்றும், ஏற்கனவே அந்தப் பெயரைக் கொண்டுள்ளவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ் உட்பட அனைத்து ஆவணங்களிலும் அதை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப் பட்டுள்ளது என்றும் அந்த ஊடகச் செய்திகள் கூறுகின்றன. (வ)

உக்ரைன் அணு மின் நிலையத்தில் விபத்து

உக்ரைனிலுள்ள ஸாபொரோஜீ அணு மின் நிலையத்தில் கடந்த வாரம் விபத்தொன்று நேரிட்டதாகவும், இதனால் அணு உலைக்கு பாதிப்பில்லை என்றும் அந்த நாட்டின் எரிசக்தித்துறை அமைச்சர் விளாடிமிர் டெம்சிஷின் நேற்றுமுன்தினம் புதன் கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

"ஸாபொரோஜீ அணு மின் நிலையத்தில் தயாரிக்கப்படும் மின்சாரத்தை விநியோகம் செய்வதற்கான பிரிவில் விபத்தொன்று ஏற்பட்டது. இந்த விபத்துக்கும் அணு உலைக்கும் துளியும் தொடர்பில்லை.

மின் விநியோகப் பிரிவில், பாதிக்கப்பட்ட பகுதியை பழுதுபார்க்கும் பணிகள் இன்னமும் இரு நாள்களில் முடிவடைந்துவிடும். அதனைத் தொடர்ந்து, இன்று வெள்ளிக்கிழமை முதல் ஸாபொரோஜீ அணுமின் நிலையம் முழுவீச்சில் இயங்கத் தொடங்கும்" என்றார் அவர்.

உக்ரைனின் செர்னோபில் அணு மின் நிலையத்தில் 1986 ஆம் ஆண்டு ஏற்பட்ட விபத்தால், அப்போதைய சோவியத் யூனியனிலும், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பயங்கர கதிர் வீச்சு பாதிப்பு ஏற்பட்டது. அதுவே அணு மின் நிலைய வரலாற்றில் மிக மோசமான விபத்து ஆகும். (வ)

கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்னர் விமானங்களைத் தாக்கும் திட்டம்

ஐரோப்பாவின் முக்கிய மையங்கள் இலக்கு

கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்னர் ஐரோப்பாவின் முக்கிய மையங்களில் வைத்து விமானங்களின் மீது தாக்குதல்களை நடத்த ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதன் காரணமாகக் கைகளில் எடுத்துச் செல்லப்படும் பயணப் பொதிகளுக்கு அனைத்து விமானங்களிலும் தடை விதிக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பிரிட்டன் உள்துறைச் செயலாளர் தெரேசா மே கருத்துத் தெரிவிக்கையில்;

பிரிட்டன் என்றுமில்லாதவாறு பயங்கரவாதிகளிடமிருந்து பெரியதொரு அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ளது. இதற்கான பாது காப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன – என்றார்.

இதேவேளை – இந்த வருடம் இடம்பெறவிருந்த ஐந்து பெரியளவிலான தாக்குதல் சம்பவங்கள் முறியடிக்கப்பட்டதாகவும் அவை தொடர்பாக இதுவரை 270 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் அச்சுறுத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க விமானப் பயணிகள் கைகளில் கொண்டு செல்லும் பயணப் பொதிகளைத் தடைசெய்வது சிக்கலானதொரு விடயமெனவும், ஆனால் இத்தகைய பொதிகளே புதிய அச்சுறுத்தல்களின் முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் சாத்தியமிருப்பதாகவும் பிரிட்டிஷ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மின்னியல் சாதனங்களை இத்தகையபயணப்பொதிகளில்எடுத்துச் செல்வதற்குத்தடைவிதிக்கப்படலாம். ஆனால் அல்குவைதா உள்ளிட்ட ஏனைய பயங்கரவாதக் குழுக்கள் உலோகம் அல்லாத பொருள்களின் மூலமாக வெடி பொருள்களைத் தயாரிப்பதாகத் தெரியவந்துள்ளது. மேலும் திரவ நிலையிலும் சில வெடிபொருள்கள் தயாரிக்கப்படுவதால் விமான நிலையங்களில் இவற்றைக் கண்டு பிடிக்க முடியாததொரு நிலை உருவாகியுள்ளது.பிரிட்டிஷ்புலனாய்வுத் துறையினர் பயங்கரவாதிகள் மனித வெடிகுண்டுகளைப் பயன்படுத்தித் தாக்குதல்களை மேற்கொள்ளலாமென எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் பயங்கரவாதிகள் தாக்குதல்கள் தொடர்பான ஒத்திகையை மேற்கொண்டதாகவும் தெரியவந்துள்ளது. இதேவேளை – சகல மின்னியல் சாதனங்களுக்கும் தடை விதிப் பதால் வர்த்தக ரீதியில் பயணிக்கும் பயணிகள் தமது கணினிகளையும் எடுத்துச் செல்லமுடியாததொரு நிலை ஏற்பட்டுவிடும். அவர்கள் தமது பயணமார்க்கங்களை மாற்றிக்கொண்டால் விமான நிறுவனங்கள் வருவாய் இழப்பை எதிர்கொள்ள நேரிடுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

உலகச் செய்திகள்



நாசா நிறுவனம் செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதனை அனுப்ப சோதனைப் பயணத்துக்கான ஆயத்தப்பணி ஆரம்பித்துள்ளது. ஆளில்லா ஓரியன் மிஷனை விண்ணில் ஏவவுள்ளது. அது பூமியில் இருந்து 3,600 மைல்கள் வரை செல்லக்கூடியது. செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதனை அனுப்புவதற்காக எடுக்கப்படவுள்ள முதல் முயற்சி இதுவாகும். இந்த ஓரியன் மிஷன் ஏவுகணைக்கான ஆயத்தப்பணி நேற்று முன்தினம் தொடங்கியுள்ளது. 1986 ஆம் ஆண்டில் அப்பலோ 12 இற்கு ஆயத்தப்பணிக்காகப் பயன்படுத்தப்பட்ட கடிகாரம் தற்போது புதிய உயர் தொழில்நுட்பக் கடிகாரமாக மாற்றப்பட்டுள்ளது. ஈஸ்டர்ன் ஸ்டான்டர்ட் நேரப்படி வியாழக்கிழமை காலை 7.05 மணிக்கு இந்த ஓரியன் மிஷன் ஏவுகணை புறப்படவுள்ளது. இந்த ஏவுகணை ஆளில்லாமல் 4 1/2 மணி நேரம் சோதனைப் பயணம் மேற்கொள்ள உள்ளது.



மேலும் பொருளாதாரத் தடை ரஷ்யாவுக்கு கெர்ரி எச்சரிக்கை

வொஷிங்டன், டிசெ.5

உக்ரைன் கிளர்ச்சியாளர்களுக்கு உதவுவதை நிறுத்திக் கொள்ளாவிட்டால் ரஷ்யா மீது மேலும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார்.

நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனான ஆலோசனைக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த கெர்ரி, "ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள தடைகளால் ரஷ்யப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். உக்ரைன் பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் விருப்பம் என்றும் அவர் கூறினார். (வ)

அனகொண்டா வாயினுள் புகுந்து அசத்திய ஹீரோ

வொஷிங்டன், டிசெ.5

அமெரிக்காவைச் சேர்ந்த நபர் ஒருவர் அனகொண்டாவொன்றின் வாயினுள் புகுந்து சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தைச் சேர்ந்த பால் ரோசலி என்ற சாகசக்காரர், 25 அடிநீளமும் 400 பவுண்ட் எடையும் கொண்ட ஒரு பெண் அனகொண்டா பாம்பின் வாய்க்குள் நுழைந்து சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "நான் பாம்பை அதிகம் காயப்படுத்தி விடக்கூடாது என்பதற்காக நான் மிகவும் மென்மையாக இருக்கும் வகையில் 'ஸ்னேக் புரூப்' அணிந்து கொண்டேன். அந்த உடைபாம்பைப் பாதிக்காத வகையில் அமைக்கப்பட்டதொன்று. மேலும் நான் பயப்படவில்லை. ஏனெனில் இந்த உடையை முன்பே பரிசோதித்து விட்டோம் என்று கூறியுள்ளார். இந்த அதி பயங்கரமான நிகழ்ச்சியை நாள்ள மறுதினம் ஞாயிற்றுக்கிழமை டிஸ்கவரி தொலைக்காட்சி ஒளிபரப்பவுள்ளது.

தற்போது அனகொண்டா பாம்புகளின் வாழ்விடத்தை பலரும் ஆக்கிரமித்து வருவதால் அவை அழிய ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் இதற்கான விழிப்புணர்வுக்காகவே, இந்தப் பயங்கரமான செயலைத் தாம் செய்துள்ளதாக ரோசலி குறிப்பிட்டுள்ளார். (வ)

அழியுங்கள் அணு ஆயுதத்தை

ஐ.நா.பொதுச் சபை வலியுறுத்து

நியூயோர்க், டிசெ.5

இஸ்ரேல் தனது அணு ஆயுதங்களை அழிக்க வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் அதன் அணுசக்தி ஆலைகளை மேற்பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் சபை செவ்வாய்க்கிழமை வலியுறுத்தியுள்ளது.

அரபு நாடுகளின் மிகப்பெரும் பான்மையான ஆதரவுடன் ஐ.நா.பொதுச் சபையில் நேற்று முன்தினம் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீர்மானம் 161 இற்கு 5 என்ற பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் மத்தியகிழக்கில் சமாதான நோக்கத்துக்கான அணுசக்திப் பயன்பாடு என்ற உடன்படிக்கைக்குக் கட்டுப்படாத ஒரே யொரு நாடாக இஸ்ரேல் இருந்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் மூலம் இஸ்ரேல் மேலதிகமாக அணு ஆயுதங்களை விருத்தி செய்வது, உற்பத்தி செய்வது அல்லது பரிசோதிப்பது போன்ற நடவடிக்கைகளைக் காலத்தை வீணடிக்காது உடனே நிறுத்த வேண்டும் என்றும், தற்போது வைத்திருக்கும் அணு ஆயுதங்களைத் துறப்பதுடன், IAEA எனப்படும் சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் கண் காணிப்பின் கீழ் தனது அணுசக்தி நிலையங்களைக் கொண்டு வர வேண்டும் என்றும் இஸ்ரேலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.பொதுச்சபையில் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா, கனடா, பலாவு, மற்றும் மைக்ரோனேசியா ஆகியவை எதிர்த்திருந்ததுடன் 18 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. 2012 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மத்திய கிழக்கில் அணு ஆயுதப் பயன்பாட்டின் அச்சுறுத்தல் என்ற தலைப்பிலான இந்தத்தீர்மானத்தில் அமெரிக்காவின் முயற்சியால் இஸ்ரேல் மட்டும் தப்பித்திருந்தது. ஆனால் இதற்கு இது வரை 18 முக்கிய அரபு நாடுகள் கட்டுப்பட்டுள்ளன.

இதேவேளை மத்தியகிழக்கில் அணு ஆயுதங்களை அதிகளவில் உற்பத்தி செய்து வரும் ஒரேயொரு நாடாக இஸ்ரேல் விளங்குகின்றது. மேலும் இஸ்ரேல் தற்போது 200-400 அணு ஆயுதங்கள் மற்றும் தாங்கிகளை வைத்திருப்பதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. (வ)

அமெரிக்காவுக்கான அடுத்த பாதுகாப்புத்துறை அமைச்சர்?

அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் ஆஷ்டன் கார்டனை ஜனாதிபதி ஒபாமா அடுத்த பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமிக்க முடிவு செய்துள்ளதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய பாதுகாப்புத்துறை அமைச்சர் சக் ஹேகல் கடந்த வாரம் அந்தப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

ஐ.எஸ். தீவிரவாதிகளுடனான போர் விவகாரத்தில், சக் ஹேகல் மீது ஒபாமா அதிருப்தியடைந்த தாலேயே அவர் பதவி விலகியதாகக் கூறப்பட்டது.

இந்தநிலையில், சக் ஹேகலுக்குப் பதிலாக நியமிக்கப்படவிருப்பவர் யார் என்பதை இதுவரை ஒபாமா அறிவிக்கவில்லை. எனினும், தற்போதைய இணை அமைச்சர் ஆஷ்டன் கார்டன் தான் அடுத்த பாதுகாப்புத்துறை அமைச்சர் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

60 வயதாகும் ஆஷ்டன் கார்டன், உயர்ரக ஆயுதங்கள் தொடர்பான இராணுவச் செலவுகளைத் திட்டமிடுவதிலும் கைதேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

எனினும் போர்த்தந்திரங்களைக் கையாளும் அனுபவமோ முந்தைய பாதுகாப்புத்துறை அமைச்சர் சக் ஹேகலைப் போல ராணுவத்தில் பணியாற்றிய அனுபவமோ அவருக்கு இல்லை என்று துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வ)

பொலிஸார் கொலை வழக்கில் எகிப்தில் 188 பேருக்கு தூக்கு

எகிப்தில் 11 பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்ட வழக்கில் 188 பேருக்கு சாவுத் தண்டனை விதித்த நீதிமன்றம், நாட்டின் உயர்மட்ட மத அதிகாரத்திடம் அது குறித்துக் கருத்து கேட்டுக் கொண்டுள்ளது.

எகிப்தின் ஜனாதிபதியாக இருந்த முகமது முர்சி கடந்த ஆண்டு ஜூலை 3 ஆம் திகதி ராணுவத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களில் வன்முறை வெடித்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ராணுவத்தளபதி அப்டெல் பத்தாவுக்கு எதிராக கோஷங்களை முழங்கினர். முகமது முர்சி ஆதரவாளர்களின் நாடு தழுவிய போராட்டம் இடைக்கால ஆட்சியாளருக்குத் தலைவலியை ஏற்படுத்தியது. அதனை அடுத்து முர்சியின் ஆதரவு பெற்ற சகோதரத்துவ கட்சியை வன்முறை இயக்கம் என்று இடைக்கால அரசால் அறிவிக்கப்பட்டது.

சகோதரத்துவ கட்சியின் தலைவர்கள் உட்பட 22 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். முகமது முர்சியின் ஆதரவாளர்களின் இரண்டு முகாம்களை ராணுவம் கொடூரமான முறையில் அகற்றியது. அப்போது 100 இற்கும் மேற்பட்ட சகோதரத்துவ கட்சியினர் கொல்லப்பட்டனர்.

அன்றைய தினம் கெய்ரோவுக்கு மேற்கே உள்ள கேர்தா சாவில் 11 பொலிஸ்காரர்கள் கொலைசெய்யப்பட்டனர். இந்த வழக்கில் 188 பேர் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டது. கேர்தாசா பகுதி தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதியாகக் கருதப்படுகிறது. கொலைசெய்யப்பட்ட பொலிஸாரின் உடல்கள் சிதைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்பு படையினரின் மீதான இந்தத் தாக்குதல் நாட்டின் கோரமான தாக்குதலாகக் கருதப்படுகிறது. (வ)

பல்சுவை

ஞானச்சுடர்

பணிவிடை

இராமனுடன் சீதை கர்ட்டுக்குச் சென்றமை போன்று இலட்சுமணனுடன் அவன் மனைவி ஏன் காட்டுக்குச் செல்லவில்லை. இதற்குப் வாரியார் ஒரு கதை சொல்லி யிருக்கிறார். வாரியார் காசிக்குப் போகும்போது அவரி டம் வேலை பார்க்கும் ஒருவர் "சாமி எனக்கும் காசி யைப் பார்க்க ஆசையா இருக்கு" என்று சொன்னாராம். சரிசரி எனக்கும் உதவியாக இருக்கும் நீயும் என் கூடவா நானே டிக்கட் எடுத்துக்கிறேன்" என்று அனுமதி கொடுத்தார் வாரியார். புறப்பட்ட பஸ்ஸில் ஏறுகிற சமயத்தில் பார்த்தால் அந்த இளைஞரின் மனைவி யும் ஒரு டிக்கட் எடுத்துக் கொண்டு உட்கார்ந்திருந் தாள். பயணம் முழுக்க "மீனாட்சி நீ சாப்பிட்டியா?" "மீனாட்சி உனக்கு தலைவலிக்குதா?" "மீனாட்சி குடிக்க தண்ணீர் வேணுமா?" என்று அந்த இளைஞர் தனது மனைவியைத் தான் கவனிச்சுக் கொண்டிருந் தார். நான் ஒருத்தன் வாறதே அவருக்கு மறந்து போச்சு" என்றார் வாரியார். அதிலே பிறருக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்று போகிறவர் தன்னுடைய மனைவியைக் கூட்டிச் செல்லக் கூடாது. அது தெரிந்துதான் இலட்சுமணன் தன் மனைவி ஊர்மி ளாவை காட்டுக்குக் கூட்டிச் செல்லவில்லை.

சுடோக்கு

என் விளையாட்டு

6							5	
2				6		1	3	7
					2		8	6
8	7				6			5
4		1	2		9	6		8
3			5				1	2
9	6		8					
1	2	8		7				3
	4							9

CW K

நேற்றைய சுடோக்கின் விடை

8	5	3	7	9	4	6	2	1
9	6	7	8	2	1	4	3	5
1	4	2	5	6	3	8	9	7
3	1	8	6	5	7	9	4	2
4	2	9	3	1	8	7	5	6
5	7	6	9	4	2	1	8	3
7	8	1	4	3	5	2	6	9
6	3	4	2	7	9	5	1	8
2	9	5	1	8	6	3	7	4

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரை யிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

மனத்தின் உயர்ந்த நிலை

மனத்துக்கே ஓர் உயர்ந்த நிலை உண்டு அது பகுத்தறிவைக் கடந்த உணர்வுகடந்த நிலை. மனம் அந்த உயர்ந்த நிலையை அடையும்போது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட இந்த அறிவு, மனிதனை வந்தடைகிறது என்கிறான் யோகி. தத்துவ அறிவும், அனைத்தையும் கடந்த அறிவும் அவனை வந்தடையும். இவ்வாறு பகுத்தறிவைக் கடந்து செல்கின்ற நிலையும் , சாதாரண மனித இயற்கையைக் கடந்து செல்கின்ற நிலையும், சிலவேளைகளில் அதன் அடிப்படை உண்மையை அறியாத வனுக்கும் எதிர்பாராத விதமாகக் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. தடுக்கி விழுவதுபோல், திடீரென்று அந்த நிலை அவனுக்கு வாய்க்கிறது. அப்படி எதிர்பாராமல் கிடைக்கின்ற அந்த அறிவை அவன் எங்கேயோ வெளியிலிருந்து வந்தது என்று தான் சாதாரணமாகக் கூறுகிறான். அக விழிப்புணர்வு அல்லது அனைத்தையும் கடந்த அறிவு எல்லா நாடுகளிலும் ஒன்றா கவே இருந்தாலும் ஒருநாட்டில் அது தேவதைகள் மூலமாக வந்ததாகவும், மற்றொரு நாட்டில் ஒரு தேவனிடமிருந்து வந்ததாகவும், மூன்றாவது நாட்டில் அது கடவுளிடமிருந்து வந்ததாகவும் கருதப்படுவது ஏன் என்பதையே இது விளக்கு கிறது. இதன் பொருள் என்ன? மனம் இந்த அறிவைத் தன் இயற்கையிலிருந்தே கொண்டு வந்தது. ஆனால் யார் மூலமாக அது வெளிவந்ததோ அவர் தன்னுடைய நம்பிக்கை, கல்வி இவற்றுக்கு ஏற்ப அதற்கு விளக்கம் கொடுத்தார். உண்மை என்னவென்றால் இவர்கள் எல்லோருமே அந்த உணர்வுகடந்த நிலையின்மீது தடுக்கி விழுந்தனர். அதாவது எதிர்பாராமல் அடைந்தனர் என்பதுதான். மனித வாழ்வு என்று நாம் அழைக்கின்ற இந்தப் பொருந்தாதவற்றின் கூட்டத்தில் பகுத்தறிவு என்று ஏதாவது வேண்டுமானால் நமது தர்க்க அறிவைக் கடந்தேயாக வேண்டும். ஆனால் அதை விஞ்ஞான பூர்வமாகச் செய்ய வேண்டும். மெதுவாக, ஒழுங்கான பயிற்சியின் மூலம் செய்ய வேண்டும்.

நாளை

கார்த்திகை-20
சனிக்கிழமை
06.12.2014

திதி: பூரணை
மாலை 06.11 வரை
நட்சத்திரம்: ரோகிணி
பி.இ.12.16 வரை

சுபநேரம்:
3.17 - 4.47 வரை
இராகுகாலம்:
9.17- 10.47 வரை

விஷ்ணு வாலயதீபம்
(பூரணை விரதம்)

தவறாக வழிகாட்டப்படும் இளம் சமுதாயம்

இன்றைய காலப்பகுதியில் இளம் தலைமுறையினரும் மாணவ சமூகத்தினரும் தவ றாக வழிநடத்தப்படுகின் றனர் .போதைப்பழக்கம் , தற்கொலை, சினிமா மோகம் இவ்வாறான மாயைகளில் சிக்கித் தனது பொன்னான இளம் பருவத்தை வீணாக்கு கின்றார்கள். ஒவ்வொரு மனி தனுக்குள்ளும் ஒரு இலட்சி யம் உருவாவது மாணவ பருவத்திலேயே. அதைச் சரியா கப் பயன்படுத்தி கொள்ளும் ஒவ்வொருவனும் தனது இளமை பருவத்தை குறித்த அந்த இலட்சியத்துக்காகவே செல விடுகின்றான். ஒரு ச மூகத்தின் முன்னேற்றமும் அதன் வளர்ச் சியும் இளம் தலை முறையின ரின் கைகளிலேயே தங்கி உள் ளது .இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்று வாய்ப் பேச்சாகச் சொல்வதில் அர்த்தம் இல்லை. அதனை உருவாக்கி காட்ட வேண்டிய தலையாய பொறுப்பு ஒவ் வொரு சமூகத்திற்கும் அதன் மதத்துக்கும் அந்த நாட்டுக்கும் உண்டு என்பதை எவருமே மறுக்கமுடியாது.

இளைஞர்களின் கைகளில் எதிர்காலமென்றால்....

இறந்த காலம் என்பது முடிவடைந்து விட் டது, எதிர்காலம் என்பது கானல் நீர்போல விரட்ட விரட்ட நகர்ந்து போவது. என்றுமே கைகளுக்கு வராதது. நிஜம் என்பது நிகழ்காலம் ஒன்று மட்டும்தான். ஆகவே எதிர்காலம் ஒப்படைக்கப்பட முடியாதது என்பது பல மகான்களின் நூல்களில் காணப்படும் எளிமையான செய்தி யாகும். இப்படியோர் உண்மை தெரிந்த காரணத்தாலோ என்னவோ மேலும் சிலர் ஒருபடி மேலே சென்று எதிர்காலம் குறித்து பேசுவதை விட்டு விட்டு முதலில் இளைஞர்களை பாராட்டுவோம் என்று சட் டெனக் கூறுகிறார்கள். இளைஞர்களை அதிரடியாகப் பாராட்டி மகிழ்வதோ அல்லது அவர்கள் கையில் எதிர்காலமென முழங்கு வதோ சரியான வாதமல்ல. ஒரு பிள்ளை கற்றவருடைய அவையில் இருப்பதற் குரிய தகுதியை சிறுபராயத்தில் இருந்தே வளர்த்து வரும் செயல் மட்டும்தான், இளைஞர்களை பாராட்டுவதற்குரிய உயர்ந்த செயல். அந்தச் செயலைச் செய் தால் கோஷங்கள் இல்லாமலே இளை ஞன் பாராட்டுப் பெறும் இடத்திற்கு தானாக முன்னேறிவிடுவான். அப்படி அந்த இளைஞன் பாராட்டுப் பெறும் சிக ராங்களைத் தொடும்போது, அடடா இவனை இப்படியொரு சிகரத் துக்கு தூக்கிவிட்டவன் யாரென்று சமுதாயம் திரும்பிப் பார்க்கும். அப்போது அங்கே ஒரு முதியவர்; பாராட்டுக்களுக்கு உரியவராக நின்று கொண்டிருப்பார். எனவே பாராட்டு என்பது இளையோர்க்கு மட்டுமல்ல முதியோர்க்கும் இணைந்து வரவேண்டும்.

சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

02.11.2014 - 2017

27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

தனுசு

தனுசு ராசி நேயர்களே!

நல்ல உயரமும் கூர்மையான மூக்கும், கனிவான பார்வையும் கொண்டவர்கள், பெரும்பாலோர் நல்ல உயரமாகவே இருப்பார்கள்.நடக்கும்போதும், நிற்கும் போதும் ஒரு பக்கம் சாய்ந்திருப்பார்கள், உடல் நிறமும் எலுமிச்சம்பழம் போல கவர்ச்சியாகவே இருக்கும். பேசும் போது சத்தமாக பேசும் குணம் படைத்தவர்கள் என்பதால் பேசுவது மற்றவர் பார்வைக்கு கட்டளையிடுவது போல இருக்கும். சிறு வயதில் எதிர்பாராத கண்டங்கள் ஏற்பட்டாலும் பூரண ஆயுளுடன் வாழ்வார்கள். தனுசு ராசிக்காரர்கள் பல சாதனைகளைப் படைக்கும் வல்லமை படைத்தவர்கள் என்றாலும் தற்பெருமை அதிகம் உடையவர்கள். எதிர்காலத்தில் நடக்கப் போவதைக்கூட முன்கூட்டியே அறிந்து கொள்ளும் ஆற்றல் இருக்கும். சுயநலம் பாராமல் எதையும் துணிந்து செய்வார்கள். இவர்களுக்கு பொய் பேசுபவர்களையும் தீயபழக்கவழக்கமுள்ளவர்களையும் கண்டால் பிடிக்காது. இவர்களுக்கு கோபம் வந்தால் எதிரில் யாருமே நிற்க முடியாது. நல்ல சுறுசுறுப்புடன் எடுக்கும் காரியங்களை சிறப்புடன் செய்து முடிப்பார்கள். எல்லோருக்கும் மரியாதை கொடுப்பார்கள். கள்ளம் கபடமின்றி அனைவரிடமும் ஆத்மார்த்தமாக பழகும் இவர்களிடம் எந்த ரகசியமும் இருக்காது. யாருக்கும் கீழ்ப்படிந்து அடிமையாக நடப்பதென்பது இவர்களுக்கு இயலாத காரியமாகும். கெட்டவர்களையும் திருத்தி இவர்களால் நல்வழிப்படுத்த முடியும். இவர்களிடம் அன்பாகப் பழகினால் எதையும் சாதித்துக் கொள்ளலாம். மற்றவர்களுக்கு உதவி செய்யும் நற்பண்புடையவர்களாதலால் அடிக்கடி ஏதாவது பிரச்னையில் மாட்டிக் கொள்வார்கள். சிறு வயதிலிருந்தே தெய்வ பக்தியும், தர்ம சிந்தனையும் இருக்கும்.

கடந்த இரண்டரை வருட காலமாக சனி பகவான் உமது ராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரித்தார். 2.11.2014 இல் சனி பகவான் உமது ராசிக்கு 12 ஆம் இடமான விரயஸ்தானத்துக்கு வருகிறார். 11 இல் இருந்தபோது தொட்டது துலங்கியது. லாபம் பெருகியது. பதவி உயர்வு கிடைத்தது. மூத்த சகோதரி வழியில் முன்னேற்றம் காண முடிந்தது. திருமணத் தடை அகன்றது. 12 இல் உள்ள சனிக்கு குருபார்வை இருப்பதால்செலவுகள்சுபச்செலவாகவே இருக்கும் என்பதில் ஐயம் வேண்டாம். சனி பகவானின் 3,7,10 ஆகிய பார்வையினால் உமது ராசிக்கு 2,6,9 ஆகிய வீடுகளை பார்வை செய்வார்.

சனி பகவானின் பார்வை உமது ராசிக்கு 2 இல் பதிவதால் வாய் மொழிக் கடன் தீரும். வாக்கினால் ஜீவனம் புரிவோர் மேன்மையடைவர். சிலர் தனிக் குடித்தனம் செல்ல இடமுண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்று வீர்கள். எனினும் புதிதாக யாருக்கும் வாக்குறுதிகள் தரவேண்டாம். நடைபாதை வியாபாரிகள், தள்ளு வண்டி வியாபாரம் செய்வோர் ஏற்றம் பெறுவர்.

சனி பகவான் பார்வை உமது ராசிக்கு 6 ஆம் வீட்டில் பதிவதால் நீண்ட காலக் கடன் தீரும். நோய் அகலும். வழக்கில் வெற்றி கிட்டும். கணவன் மனைவி இடையில் நிலவிய கருத்து வேற்றுமை விலகி சந்தோஷம் மலரும். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?· மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடும். மாமன், மைத்துனர் உறவில் சந்தோஷம் கூடும். உமது மகன் (அல்லது) மகள்மூலம்வருவாய்பெருகும்.

சனி பகவானின் பார்வை உமது ராசிக்கு 9 ஆம் வீட்டில் பதிவதால்திருப்பணிசெய்யும்யோகம் உண்டாகும். தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. ஏற்றுமதி இறக்குமதி வாணிபம் சிறப்படையும். மனிதவலு மூலம் தொழில் செய்பவர் மேன்மை அடைவர். புத்திர பாக்கியத் தடை அகலும்,அரசுவழிஅல்லல்தீரும். எனினும் மறை முக வருமானம் பெறுவோர் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம்.

13.7.2015 வரை குரு பகவான் உமது ராசிக்கு 8இல் இருப்பதால் பணம் கையாளும் பொறுப்பினர்மிகவும்கவனமாகஇருக்கவும். மனைவியின் சொல்லை வேதமாக மதித்து நடப்பீர்கள். 14.7.2015 இல் குரு 9 இல் வருவதால் வெளிநாடு செல்ல யோகம் கிட்டும், தந்தை மூலம் அனுகூலம் கிட்டும். சிலருக்கு ஆண் குழந்தை பிறக்கும். சிலர் அரசு வழியில் உயர் பதவியில் அமரும் யோகம் பெறுவர்.

தற்போது ராகு 10 ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்வதால் நன்மை, தீமை கலந்த பலன்களே உண்டாகும், தொழில் வியாபாரத்தில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். கேது 2 ஆம் இடத்தில் இருப்பதால் தேவையற்ற அலைச்சல் பதற்றம் உண்டாகும். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். இதனால் மனச் சஞ்சலங்கள் உண்டாகும்.

உடல்நிலை:

உடல்நிலையில் சோர்வு, மந்தமான நிலைகள் உண்டாகும். கடந்த கால மருத்துவச் செலவுகள் குறைந்து ஓரளவுக்கு திருப்தி கொடுக்கும். புத்திர வழியில் சிறு சிறு மனக்கவலைகள் தோன்றும். தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பதால் அலைச்சல் குறையும்.

உத்தியோகத்தர்கள்:

உத்தியோக நிலையில் இருந்த வேலைப்பளு குறையும். அதிகாரிகள் மற்றும் உடன் பணியாற்றும் ஊழியர்களை அனுசரித்துப் போனால் ஓரளவு உதவியைப்பெறமுடியும்.பதவிஉயர்வுகள் தாமதித்தே அமையும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்பட்டாலும் அதன் மூலம் அனுகூலமான பலனும் உண்டாகும்.

மாணவர்கள்:

மாணவர்கள்கடினமுயற்சிகளை மேற்கொண்டாவது நல்ல மதிப் பெண்களைப் பெற்று விடுவார்கள். நண்பர்களால் ஓரளவுக்கு அனுகூலப்பலன்கள்உண்டாகும். பெற்றோர், ஆசிரியர்களுக்கு கீழ்படிந்து நடப்பதால் அவர்களின் ஆதரவையும் பெறமுடியும்.

அதிஷ்டக் குறிப்புகள்:

எண்– 7,51,58,67,79,87 கிழமை–வெள்ளி, திசை–தென்கிழக்கு, நிறம்–வெள்ளை, கல்–வைரம்,தெய்வம்–லட்சுமி.

பெண்களின் வாழ்க்கையை சிதைக்கும் ஆண் நட்பு...

பழகும்போதே மொத்தத்தில் ஆண் நண்பர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளுங்கள். தவறான நட்பை ஆரம்பத்திலேயே துண்டித்து விடுங்கள். சமூகத்தை புரிந்து கொண்டு பழகுங்கள். பருவ வயதில் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் நீங்கள் கல்லூரிக்கு சென்றதும் சுதந்திரமாக ஆண் நண்பர்களுடன் பழக வாய்ப்புக் கிடைக்கிறது. சிலருக்கு பெற்றோரை விட்டு தங்கி படிக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. நட்பு என்கிற ரீதியில் கல்லூரிக்குள் கூட்டமாக அமர்ந்து அரட்டையடிப்பதில் ஏற்படுகிறது புதுப்புது நண்பர்களின் பழக்கம். இது மட்டுமல்லாமல் கல்லூரியை விட்டு பெண்கள் வரும் வழியிலும், அவர்கள் அடிக்கடி செல்லும் இடங்களிலும் சந்திக்க நேரும், நட்பாய் பழக நேரும் ஆண்களுடனும் பழக்கம் ஏற்படுகிறது. கல்லூரி வட்டத்தைத் தாண்டி வெளியில் ஏற்படும் பழக்கம்தான் அதிகமானோரின் வாழ்க்கையைச் சிதைக்கிறது.

இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட ஆண் நண்பர்களுடன் பழகும் வாய்ப்பு கல்லூரிக்குள்ளும், கல்லூரிக்கு வெளியிலும் இயல்பாகவே பெண்களுக்கு கிடைக்கிறது.இந்த நட்பு எல்லை மீறி ஏமாறும்போதுதான் பெண்களுக்கு பிரச்சினை ஏற்படுகிறது. எவ்வித பிரச்சினையும் இல்லாமல் திருமணம் செய்து கொண்ட பெண்களுக்கு வேறு ரூபத்தில் பிரச்சினை ஏற்படுகிறது. இவர்களுக்கு சிக்கல் ஏற்படுவதே திருமணத்துக்குப் பின்னர் தான். இவர்களை மணந்து கொள்ளும் ஆண்கள், திருமணத்துக்கு முந்தைய தங்கள் மனைவியின் ஆண் நட்பு வட்டம் பற்றி இயல்பாக பேசி தெரிந்து கொள்கிறார்கள். பெண்களின் ஆண் நட்பை அப்படியே ஏற்றுக்கொள்ளும்கணவர்கள்எவருமில்லை.

சடங்கு என்கிற கிடங்கில்....

சடங்கு என்கிற கிடங்கில்
அவள் அடங்கி மனம் வெதும்பி
மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி
சற்று பதுங்கி இருப்பது
10 வயது பால்மனம் மாறா
சிறுமி...

வயதுக்கு வந்த அவளை
சடங்கு செய்கிறேன், சாம்பார் ரசம்
செய்கிறேன் என்று
அவளை அச்சுறுத்தும்
மூடர்களே..
காலத்திற்கேற்ப மாறுங்கள்!
கண் திறந்து பாருங்கள்
இன்னும் அட்டை கணினியில்
விளையாடிக் கொண்டிருக்கும்
அவளுக்கு
ஓலையைக் கட்டுகிறீர்களா
அல்லது அவளது மனவளர்ச்சிக்கும்
முன்னேற்றத்திற்கும்
பாடையைக்
கட்டுகிறீர்களா?

விளம்பரங்கள்

விண்ணக வாழ்வின்
9 ஆம் ஆண்டு நினைவாராதனையும்
28 ஆம் ஆண்டு பிறந்தநாள்
நினைவலைகளும்

அமரர் விஜேந்திரன் பிரதீபன்



(முன்னாள் பார். மத்திய கல்லூரி மாணவன்)

தாயின் மடியில்
1986.02.01

தண்ணீர் அடியில்
2005.12.05

பொன்னை இழந்தோம் போகட்டும்
என்றிருந்தோம்
கண்ணை இழந்திருந்தால்
விதியென்று விட்டிருப்போம்
உன்னை இழந்து விட்டோம் நடைப்பிணமாய் வாழ்கின்றோம்
உன்னை இழக்கக் காரணமானவர்கள் நன்றாக வாழட்டும்
உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வவுனியா (54058)(4.3.6) அன்பு

நெஞ்சங்களில் நிழலாடும்
3 ஆம் ஆண்டு நினைவுகளோடு

அமரர்
இராமலிங்கம் தளையசிங்கம்



மண்ணில்
20.04.1940

விண்ணில்
08.12.2011

அன்பு வழிநின்று அறம்பேணி
அணையாத விளக்காய் ஒளி வீசி
இன்பம் எய்திட எம் உறவுக்காய்
அல்லும் பகலும் அயராது உழைத்த
எம் இனிய அப்பாவே!
ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்பைப்போல் வருமா எமக்கு
கார்த்திகை விளக்கீடு என்றால்
கரையுதே எம் உள்ளம்
எங்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கிறீர்கள்
மறவாது உங்கள் நினைவுகள்!!!

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (54579)(4.3.6)

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

90 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
24 . 04 . 1990



இறைவன் அடியில்
08 . 09 . 2014

அமரர் நாகராசா சதீஸன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஸ்ரீலங்கா ரெலிகொம்-வவுனியா)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (06.12.2014) சனிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (54616)

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.) (4.3.6)

கனடா,
கட்டுடை, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

9 ஆம் ஆண்டு நினைவுச்சங்கமம்

அமரர்
செல்லையா தம்பித்துரை

(மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாகசபை உபதலைவர், ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், கொழும்பு துறைமுக அதிகாரசபை அத்தியட்சகர்)

புவித்துவம்
08.06.1931

அமரத்துவம்
14.12.2005

நீதி: சதுர்த்தசி (05.12.2014)

சீர்வளர் கொக்குவில் சிறப்புறு பதியில்
ஊர் புகழ் செல்லையா தம்பித்துரை தானும்
பார் மகிழ் குணமும் பரந்த அறிவும் கொண்டு
நேர் வழி நின்று நீடு பயணம் கண்டார்!
அவர் தம் வாழ்நாளில் அயரா முயற்சியுடன்
மக்கள் துயர் துடைக்கும் நீதிமன்ற முதலியாராகி
மக்கள் மனம் நிறைந்து மறைந்த எம் தந்தையே!
எக்காலமும் மனதிருத்தி எந்நாளும் போற்றிடுவோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

நெஞ்சத்தில் நீங்கா நினைவுகளுடன்
ஆண்டுகள் ஏழு

அமரர் வேலாயுதன் ஜெயகிரிதரன்

(கண்ணன்- சங்கானை)

அன்னை மடியில்
13 . 12 . 1980

அரக்கர் அழிப்பில்
05 . 12 . 2007

ஏழு ஆண்டுகள் என்ன
எழுபது ஆண்டுகள் ஆனாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டகலாது
கண்ணா பலர் நெஞ்சில் நீ வாழ்கின்றாய்
எம் குடும்பத்திற்கு முத்துப் போல் நீ கிடைத்தாய்
யார் கண்பட்டதோ பாதியில் காலன் உன்னைப் பறித்து விட்டான்
உன் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்தித்து
உன் நினைவுகளுடன் வாழும் நெஞ்சங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பட்டினசபை வீதி,
சங்கானை. (54618) (4.3.6)

குடும்பத்தினர்.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூகநிலைய ஸ்தாபகர்
அமரர் பொன் நாகமணி அவர்களின்
18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வளர்மதிக்காய்
துளிராக
16 × 07 × 1936

வான்மதிக்காய்
உதிர்வாக
05 × 12 × 1996

தொடரும் நினைவுகளில்....
காலவெள்ளத்தில் கரைந்து போனது - உனது முகம்
கரையவில்லை உனது நினைவுகள்
உன்னால் செதுக்கப்பட்ட - சமூகம்
மலர்ந்து கொண்டே இருக்கிறது
காலச்சுவடுகளில்- நீ
நடந்த பாதைகளில் - இன்று நாங்கள் நடக்கின்றோம்
உன் நினைவுகளை சுமந்து செல்லும் - தென்றல்
உன் உயிர் மூச்சுப் பட்டதால் தூய்மையாகிவிட்டது
தூயவனே - நீ காலமெல்லாம் எம்முடன் வாழ்வது
தொடராக... தொடராக..முடிவு பெறாத தொடராக சாந்தி பெறுக.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(54579)(4.6.3)

நிர்வாகம்
வளர்மதி சனசமூக நிலையம் மற்றும்
ஏனைய உப அமைப்புக்களும்

முழுநிலா இலவச கருத்தரங்கு

தென்மராட்சி, டிசெ.5

2015 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மீசாலை உயர்கலைக் கல்லூரி மாதாந்தம் போயா தினங்களில் நடத்திவரும் முழுநிலா இலவசக் கருத்தரங்கை இந்த மாதம் தொடக்கம் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி நாளை சனிக் கிழமை கிளிநொச்சி மருத்துவமனைக்கு அருகில் உள்ள அன்னை இல்ல மண்டபத்தில் நடத்தவுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற் றும் மாணவர்களுக்காக இந்தக் கருத்தரங்கில் நாளை தமிழ், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் நடத்தப்படவுள்ளன.இதேவேளை யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு மீசாலை உயர்கலைக் கல்லூரியில் நாளை அரசியல் விஞ்ஞான பாடக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக கல்லூரி நிர்வாகி எஸ்.வீரசுதாகரன் அறிவித்துள்ளார். (வ–9)

சாதனையாளர் கௌரவிப்பு

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதன் கலந்து கொள்வார். (வ–9)

கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.5

அகில இலங்கை ரீதியில் நுவரெலியா மாநகரசபை மைதானத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து பங்குபற்றி சாதனை படைத்த வீரர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் ம.சயந்தறூபன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மருத்துவர் செ.அறிவுச்செல்வனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் வே.கணபதிப்பிள்ளையும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ரி)

பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் விசேட பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இந்து சமயப் பேரவையின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும். (வ–7)

* * *

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும். இந்தக் கூட்டத்துக்கு வலி மேற்கு பிரதேச சபையின் தலைவரும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும் கலந்து கொள்ளவிருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிலையத் தலைவர் சி.சதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ரி–9)

செய்திகள்

மண்டைதீவு இளம் பெண்ணின் சாவு குறித்த வழக்கு தள்ளுபடி

கொழும்புத்துறை, டிசெ.5
மண்டைதீவு இளம்பெண் ஒருவரின் சாவு தொடர்பாக இருமத குருக்களுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு, தொடரப்பட்ட வழக்கு யாழ்.நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
யாழ்.மத்தியூஸ் வீதியில் உள்ள பொதுக்கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட மண்டைதீவைச் சேர்ந்த இளம்பெண்ணின் சாவுக்கு மதகுருக்களே காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.
கடந்த மாதம் நடைபெற்ற வழக்கு விசாரணையின் முடிவில் தகுந்த ஆதாரங்கள் இல்லாமையால் வழக்கு தள்ளுபடி செய்யப்படுவதாகவும் இந்த இரு குருக்களும் குற்றமற்றவர்கள் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (வ–135)

வெள்ளத்தில் மூழ்கியுள்ள கொழும்புத்துறை பகுதிகள்

கொழும்புத்துறை,டிசெ.5
கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கனமழையால் கொழும்புத்துறைப் பிரதேசத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளன.
கரையோரத்தின் தாழ்ந்த பகுதிகளான வசந்தபுரம், மணியம்தோட்டம், உதயபுரம், எழிலூர், மகேந்திரபுரம் , நெடுங்குளம் போன்ற கிராமங்களில் உள்ள குடியிருப்புக்களைச் சூழ மழை வெள்ளம் நிரம்பிக் காணப்படுகிறது.
இந்தப் பகுதிகளிலுள்ள குளங்கள் நிரம்பி வெள்ளக்காடாகக் காட்சியளிப்பதுடன் சூழலில் உள்ள குடிமனைகளிலும் வெள்ளம் புகுந்துள்ளது.
மணியம்தோட்டம், உதயபுரப் பகுதியில் உள்ள வீதிகள் தார் வீதியாக அமைக்கப்படாமையால் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் போக்குவரத்துச் செய்ய இயலாது மக்கள் சிரமப்படுகின்றனர்.
அதேவேளை, உதயபுரம் கடற்கரை வீதி வெள்ளத்தால் சூழப்பட்டு போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அரியாலை, நெடுங்குளம் பகுதியில் உள்ள நெல்வயல்களின் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதால் அழிவடையும் ஆபத்துகாணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (வ–135)

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

நன்றியுடன் நன்றி நவில்கின்றோம்

அமரர்
கந்தசாமி கிருஷ்ணசாமி
(பத்தர்)
மலர்வு 09.09.1946 உதிர்வு 04.11.2014

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து வந்தவர்களுக்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும், சகலவழிகளிலும் சகல உதவிகள் செய்தஅனைத்து நல் உள்ளங் களுக்கும் மனமார்ந்த நன்றியை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மானிப்பாய்
077 968 3079

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆன்மிக சொற்பொழிவு

தென்மராட்சி, டிசெ.5
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த அ.வாசுதேவா "குற்றம் குற்றமே" என்னும் தலைப்பிலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.தவசிரோஜன் 'ஆரோக்கிய வாழ்வு' என்னும் தலைப்பிலும் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ–9)

ஒளி விழா

ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் ஒளிவிழாவும் விசேட பரிசளிப்பு விழாவும் இன்று முற்பகல் 10 மணியளவில் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். (வ)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 07.11.2014 வெள்ளிக்கிழமை அதிகாலை 12.40 மணிக்கு இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் சகுந்தலாதேவி சந்திரசேகரம்
தோற்றம் 14.03.1945 மறைவு 07.11.2014

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (04.12.2014) வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (06.12.2014) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.59, சுதுமலை வீதி, தாவடி, கொக்குவில்.
(54451)(4.3.6)
குடும்பத்தினர்.

செயலமர்வு

தென்மராட்சி வலய பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கான விசேடகல்வி தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.
எதிர்வரும் ஆண்டு தரம் 1 வகுப்புக்களில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களை கலந்து கொள்ள ஏற்பாடு செய்யுமாறு அதிபர்களுக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ரி–9)

கண்ணீர் அஞ்சலி

கைதடி மத்தி, குமரநகரைச் சேர்ந்தவரும் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் நீண்டகால தொண்டரும் சேவையாளருமான

இராமன் கணபதி

அவர்கள் பல வருடங்கள் இரவுபகல் காவலாளியாகவும் இருந்து அவர் ஆற்றிய அரும்பெரும் சேவையினை இவ்வேளையில் நினைவு கூருவதோடு, இன்று (05.12.2014) வெள்ளிக்கிழமை இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரை வேண்டி நிற்பதோடு, அவரது குடும்பத்தினருக்கு சபை ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செயலாளர்,
நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலனசபை,
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில், கைதடி.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராசா சிவயோகராசா (சிவா)

(யா/யூனியன் கல்லூரி, பழைய மாணவனும், காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன களஞ்சியக்காப்பாளரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை இந்து இளைஞர் சங்கப்பிரதிநிதியும், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க உப தலைவரும்)

தோற்றம் 09.11.1962 மறைவு 16.12.2013

ஆண்டு ஒன்று உருண்டோடி விட்டது எல்லோரிடமும் அன்பாகவும், பண்பாகவும் பழகிய சிவா என்னும் புனித ஆத்மா எங்களை விட்டுப் பிரிந்தார் என நினைக்கும் பொழுது அது கனவுபோல் உள்ளது. வாழ்ந்த காலத்தில் சொல்லும் செயலும் ஒன்றாகவே செய்து காட்டியவர். மனித வாழ்வில் பிறப்பு ஒன்று உண்டெனில் இறப்பும் நிச்சயம் அது இயற்கையின் நியதி. தங்களது ஆத்மா எல்லாம் வல்ல துர்க்கா தேவியின் பாதக்கமலங்களில் உறைய வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம்.

நிரந்தர முகவரி:
வீமன்காமம்,
தெல்லிப்பழை.

[54626](4.3.6)
குடும்பத்தினர்.

மூன்றாம் வருட நீங்கா நினைவலைகள்

அமரர் பண்டிதர் முருகேசு ஆனந்தசிவம்
(முன்னாள் குளோபல் தொலைத்தொடர்பக உரிமையாளர்- கொடிகாமம் எருவன் வரணி)

அமரர் உமையம்மை சிவபாதம்
(ஓய்வுநிலை மருந்தாளர்-எருவன் வரணி குரும்பசிட்டி)

நிதி: அபரபக்க சதுர்த்தசி

மலர்வு 1949.03.28 உதிர்வு 2011.12.08
மலர்வு 1944.04.08 உதிர்வு 2011.08.26

பார்போற்ற வாழ்ந்து பாச உறவில் சிக்கி
அக்கா சென்ற வழி தம்பியும்
குமராலய தீப நன்னாளில் ஏகினாரே.

இத்தியடி பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (47339)(4.6.3)

பராசக்தி ஆனந்தசிவம்
குடும்ப உறவுகள்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

செய்திகள்

இளைஞர்களின் வாழ்வில் விளையாடுகின்றது 'ஓயில்'

வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கவலை

யாழ்ப்பாணம், டிசெ. 5

சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளதால், அந்தப் பிரதேசத்திலுள்ள இளைஞர்கள் திருமணம் செய்வதற்குப் பயப்படுகின்றார்கள் என்று கவலை தெரிவித்த மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், கழிவு ஒயில் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"இரண்டு மாதங்களுக்கு முன்னரும் இதே விடயம் தொடர்பில் இந்தச் சபையில் கதைத்தோம். நாம் பிரேரணைகள் நிறைவேற்றுவதைப் போன்றே அதனையும் சிறப்பாக கதைத்தோம். ஆனால் எதனையும் செய்யவில்லை. இதுவரையில் கழிவு ஒயிலால் 683 கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதில் எனது வீட்டுக் கிணறும் உள்ளடங்குகின்றது.

நானும் திருமணம் செய்யாத இளைஞன். எங்கள் பகுதிகளில் திருமணம் செய்து கொள்வதற்கு இளைஞர்கள் பயப்படுகின்றார்கள். ஏனெனில் கழிவு ஒயில் கலந்த நீரைப் பருகினால் மலட்டுத் தன்மை வரும். அத்துடன் அது தோலில் பட்டால் நோய்கள் ஏற்படும். இவற்றையெல்லாம் தாண்டி பிள்ளை பிறக்குமாக இருந்தால் அவர்கள் அங்கவீனர்களாக, புத்திசாலித்தனம் குறைந்தவர்களாக இருப்பார்கள் என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. தற்போது சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து, 9 கிலோமீற்றர் வரையில் கழிவு ஒயில் நீருடன் கலந்துள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். ஜப்பான் தூதுவருடன் பேசியோ அல்லது இந்திய அதிகாரிகளுடன் பேசியோ இதனைத் தீர்க்க வேண்டும்"– என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

(ற–5)

எதிர்வரும் ஆண்டுக்கான நிதிக்கூற்றை சபை ஏற்றது

வடக்கு மாகாணசபையின் அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்று முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மீதான விவாதம் இந்த மாதம் நடுப்பகுதியில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய 20 ஆவது அமர்வில், வடக்கு மாகாண முதலமைச்சரும் நிதியமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் நிதிக் கூற்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

"2015 ஆம் ஆண்டு நிதியாண்டுக்குரிய, மாகாணசபை செலவீனங்களுக்காக நிதி ஆணைக்குழுவினால் தேசிய வரவு–செலவுத் திட்டத்தில் திணைக்களங்களுக்குச் சிபார்சு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளை சமர்பிக்கின்றேன்.

மீண்டு வரும் செலவினங்களுக்காக 15 ஆயிரத்து 122.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசால் தொகுதிக் கொடையாக 12 ஆயிரத்து 800மில்லியனும், மத்திய அரசுவருமானமாக ஆயிரத்து 975 மில்லியனும், மாகாணசபை வருமானமாக 347.4 மில்லியனும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றுவதற்கான முத்திரைத் தீர்வைக்கட்டணமாக 0.6 மில்லியன் ரூபாவும், மூலதன செலவினங்களுக்காக 2 ஆயிரத்து 735.69 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் பிரமாண அடிப்படையிலான கொடையாக 400 மில்லியன் ரூபாவும், மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடையாக ஆயிரத்து 440 மில்லியன் ரூபாவும், பாடசாலைக் கல்வியை ஓர் அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்திட்டத்துக்கு 364.66 மில்லியன் ரூபாவும், சுகாதாரத்துறை அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு 355 மில்லியன் ரூபாவும், யுனிசெப்பின் கருத்திட்டத்துக்கு 26.03 மில்லியன் ரூபாவும், மாகாணசபைக் கட்டிடத்துக்கு 150 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய திட்டங்களுக்காக 2 ஆயிரத்து 702.11 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது."– என்று தெரிவித்தார்.

இந்த நிதிக் கூற்று முதலமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. விரைவில் நிதிக்கூற்று மீதான விவாதம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை நடப்பாண்டுக்குரிய நிதிக் கூற்றில், குறைநிரப்பு நியதிச் சட்டமும் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

(ற–5)



பல் வைத்தியர் தேவை

Chiresty Medical

இல :– 311, ஜெம்பட்டா வீதி.
கொட்டாஞ்சேனை கொழும்பு – 13,
தொ. பேசி – 011 2421882

வேலை வாய்ப்பு

மோட்டார் சைக்கிள் திருத்துதல். சேர்விஸ் செய்தல் ஆகியவற்றில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. 2 தொடக்கம் 5 வருடங்கள் அனுபவமுள்ளவர்களுக்கு கவர்ச்சகரமான சம்பளம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு :பிரபா மெக்கானிக் சேவிஸ் சென்ரர்
தட்டாதெரு சந்தி
கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
T.P : 077 3944403
(54643)

H.A.C
சித்தன்கேணி

தரம் 6 முதல் O/L வரை
விஞ்ஞானம்- R.இராஜமுகுந்தன்
கணிதம்- S.R.பிரதீப்
G.கிரி
தமிழ்- R.இராஜகோபால்
ஆங்கிலம்- S.நாதன்
சைவசமயம்-N.மணி
கிறிஸ்தவம்-S.பிலிக்ஸ்
வரலாறு குடியியல்-S.S.தாஸ்
S.குணபரன்
புவியியல்-S.றமேஸ்
தகவல் தொடர்பாடல்-T.ராம்
வர்த்தகமும் கணக்கீடும்-
உங்கள் ஆசிரியர்
ஆரம்பம் 06.12.2014
(அ/18064)(4.12.6) சனி காலை 8.30

சாவகச்சேரி பிரதேசசபை – கொடிகாமம்
வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் – 2015

சபையானது 2015 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு பதிவுசெய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் 1000.00 ரூபாவை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 31.01.2015 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. பொருள்கள் வழங்குதல் (பொது)

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள்
02. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு)
03. கணினிகள் கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்
04. யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள்
05. நீர்க்குழாய் பைப்புகள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருள்கள்
06. கட்டட இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்கள்
07. மின்சாரப் பொருள்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள் மின்சார பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள்
08. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம் மொப்பர் மற்றும் ஏனையவை
09. அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹார்பிக் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை
10. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் ரயர், ரியூப் மற்றும் ஏனையவை
11. தோல் உற்பத்திப் பொருள்கள், சப்பாத்துக்கள்
12. இறப்பர் முத்திரை வகைகள்
13. நூலகங்களுக்கான நூல்கள்

02 பொருள்கள் வழங்குதல் (மருத்துவம்)

01. சித்த மருத்துவ மருந்துகள்
02. மருத்துவ உபகரணங்கள்

03 சேவை விவரம்

01. உருக்கு மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல்.
02. மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (தொலைநகல், நிழற்படப்பிரதி இயந்திரம்)
03. மின்மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள் ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீள முறுக்குதலும்
04. பதிப்பக வேலை - சகல வித படிவங்கள், ஏனையவை
05. கட்டட திருத்தவேலை, உள்ளகத் தொலைபேசி பராமரித்தல்
06. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள்
07. கணினிகள் பழுதுபார்த்தலும், சேவிஸ் செய்தலும்

04. வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

01. சகல விதமான வாகனத்திருத்தம், வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை
02. சகல விதமான வாகனங்களும் சுத்திகரிப்பு செய்தல்

05. ஒப்பந்தகாரர் பதிவு செய்தல்

01. இக்ராட் பதிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்
02. பதிவின் போது இக்ராட் பதிவுப் புத்தகம் சமர்ப்பிக்கவேண்டும்
03. பதிவின்போது இக்ராட் பதிவுத்திகதி காலாவதியற்றதாக இருத்தல் வேண்டும்
04. செய்யப்பட்ட வேலைகளின் சான்றிதழ் இணைப்பட வேண்டும்

நிபந்தனைகள்

01. வழங்கல்கள்/ சேவைகள் 2015 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்
02. திருப்பதிகரமற்ற வழங்கல்கள்/ சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு
03. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
04. பதிவு செய்யப்படாதவர்களிடமிருந்தும் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளவும்ஒப்பந்தங்களை வழங்கவும் தவிசாளருக்கு அதிகாரம் உண்டு.

சிற்றம்பலம் நாராஜா
தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.

(அ.18068) (15.8.3)

செய்திகள்

மரக்கறி விலை திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் திடீர் விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் கொட்டித் தீர்த்த மாரி மழையினால் மரக்கறி உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாய தோட்டங்களில் பயிரிடப்பட்ட மரக்கறி பயிர்கள் கடும் மழையின் தாக்கத்தினால் அழிந்துள்ளன.

இந்த நிலையில் மரக்கறி வகைகளுக்கு குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை, சாவகச்சேரி போன்ற குடாநாட்டின் பிரதான சந்தைகளுக்குப் போதிய மரக்கறிகள் வந்து சேராமையால் அவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் சந்தைக்கு குறைவாக வரும் மரக்கறி வகைகளும் உடனேயே விற்றுத் தீர்ந்து விடுகின்றன.

திருநெல்வேலி சந்தையின் நேற்றைய மரக்கறி வகைகளின் விலை விவரம் வருமாறு:-

கத்தரிக்காய்-கிலோ 160 ரூபா, பாகற்காய்- கிலோ 200 ரூபா, பயிற்றங்காய்- கிலோ 200 ரூபா, வெண்டிக்காய்-கிலோ 90 ரூபா, கோவா-கிலோ 120 ரூபா, பூசணிக்காய்-கிலோ 60 ரூபா, கரட்- கிலோ 200 ரூபா, லீக்ஸ் கிலோ 160 ரூபா, உருளைக்கிழங்கு- கிலோ 120ரூபா, போஞ்சி கிலோ 160 ரூபா, வெங்காயம்- கிலோ 100 ரூபா, பச்சை மிளகாய்- கிலோ 240 ரூபா, கீரை- 1 பிடி 40 ரூபா, தேசிக்காய் ஒன்று 10ரூபா

(த-17)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வதிரி திரு இருதயக் கல்லூரி

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமைசேர்த்த மாணவர்களையும் வகுப்பு ஆசிரியராக இருந்து வெற்றிக்கு வித்திட்டவரும் "பிரதீபா பிரபா" விருது பெற்றவருமான திருமதி சுசிகலா கமலதாஸ் அவர்களையும் வழிகாட்டிய அதிபர் பகுதித்தலைவர் மற்றும் சக ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

க.அருட்சயா 168 புள்ளிகள்

திருமதி க.சுசிகலா

ஞா.அஸ்வின் 166 புள்ளிகள்

த.டிஸ்தியா 156 புள்ளிகள்

ஈ.விந்துஜா 153 புள்ளிகள்

பாராட்டி வாழ்த்துவோர்
பெற்றோர்கள்

யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2014 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த

ஜே.டக்சன்- 162

ச.மேருஜன் 155

ந. கணேஸ்வரன்- 150

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

01.செ.சலோரி- 141
02.ம.தனுஸ்ராஜ்- 139
03.அ.நிலானி- 130
04.யோ.டிலானி- 129
05.பா.சதுர்சியன்-119
06.சு.கிருசிகா- 117
07.ந.டிலக்சிகா- 115
08.க.துசாலன்- 114

ஆகிய மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர் திருமதி றெஜினா ஜெகதீஸ்வரன் மற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் ஒத்துழைத்த பழைய மாணவர்சங்கத்தினரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர்சங்கம்.

(54841)(4.3.8)

மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை வெற்றியாளர்களின்

பாராட்டு விழா - 2014

கெ.ஆதித்யா 193

மு/ விசுவநாதர் ஆரம்பப் பாடசாலையில் 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 35 மாணவர்களையும் அதிபர், கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்

- இடமிருந்து வலமாக உள்ள ஆசிரியர்கள் -

1 செல்வி.தி.வினோதா
2 திருமதி.மு.கர்சினி
3 திருமதி.சி.ஜெயப்பிரபா
4 திருமதி.சு.குருபரன்
5 திரு.க.கவாஸ்கர் (கற்பித்த ஆசிரியர்)
6 திரு.பொ.முரளிதரன்
7 திரு.ப.சுதர்சன் (தரம் 5 கற்பித்த பொறுப்பாசிரியர்)
8 திரு.பொ.பாலகிருஸ்ணன் (அதிபர்)
9 திருமதி.வீ.தெய்வநாயகி (பிரதிஅதிபர்)
10 திருமதி.இ.கதிர்காமநாவலர்
11 திருமதி.பி.கோபிராஜ்
12 திருமதி.த.பார்த்தீபன்
13 செல்வி.ஐ.அற்புதமலர்
14 திருமதி.நி.சுதானன்
15 திருமதி.சு.இராதிகா

முதல்வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் :-

ச.அபிவர்ணன் – 180 (மா.நி 16) ச.சுபாகரன் –172 (மா.நி 48) க.கௌதமன் –184 (மா.நி 08)
கோ. சரண்யன் – 187 (மா.நி 06) ப.சதுரங்கா –161 (மா.நி 132) செ.நிலக்சி –173 (மா.நி 43)
ஜீ. கபிள்சன் – 170 (மா.நி 66) வி.சஜிதா – 167 (மா.நி 87) பா.அபிஷிகா –188 (மா.நி 04)
ஜ.கீர்த்திகன் – 183 (மா.நி 09) க.சரணிகன் –181 (மா.நி 13) ம.அபிதரன்– 186 (மா.நி 07)
க. விபுசாயினி – 167 (மா.நி 87) சி.திலக்சிகா – 175 (மா.நி 34) கே.ஆதித்தியா –193 (மா.நி 00)
யோ. சங்கீத் – 188 (மா.நி04) ச.சங்கீர்த்தன் –183 (மா.நி 09) க.தனுஸ்வரன் –150

இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் :-

க.புகழேந்திரன் –180 (மா.நி 16) ச.மலர்விழி –173 (மா.நி 43) மோ.அபிநயன்–162 (மா.நி 125)
கோ.பிரணவன் –171 (மா.நி 53) ம.நிருசன் –169 (மா.நி 71) ப.தனோயன் –172 (மா.நி 48)
வி.புங்கவி –164 (மா.நி 113) உ.பகலோன் –165 (மா.நி 105) ஜெ. அபிசன் –171 (மா.நி 53)
கு.துவாரா –178 (மா.நி 22) செ.கயல்விழி –171 (மா.நி 53) ல.பிரசாந் – 171 (மா.நி 53)
வி.கெஸ்லி –168 (மா.நி 82) ச.ஜெகசீவன் –171 (மா.நி 53) ம.தமிழ்மாறன்–167 (மா.நி 87)
ரா. லோஜிகா –164 (மா.நி 113) ச.சாகித்தியன் –175 (மா.நி 34)

மூன்றாம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலம் :- (70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்)

த.டிலக்சனா –129 சு.சாவித்திரி –126 க.நித்தியா –90 வி.இதயரூபினி –137 அ.லக்சிகா– 83
ச.சயானா – 146 கோ.லோஜிகா– 117 சு.டிலானி –118 ச.மதியரசன் –137 சு.பிறையழகன் –142
ற.பிருந்தா– 113 ம.கம்சிகா – 93 த.பவித்திரா –119 செ.றஜிகரன் –135 து.அபிசாந் –98

விளம்பர அனுசரணை :
செ. முருந்தன்
பழைய மாணவன்
விஸ்வமடு மகா வித்தியாலயம்,

(சி/18067)

பாடசாலை சமூகம்
மு/ விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை

செய்திகள்

றோலர் படகுகளை தடுக்கக் கோரி மனு

மீன்பிடி மற்றும் நீரியல் வள பிரதியமைச்சரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.5

றோலர் படகுகளின் செயற் பாட்டை யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் தடைசெய்யக் கோரும் மனுவொன்று மீன்பிடி மற்றும் நீரியல் வளப் பிரதி யமைச்சர் சரத்குமார குணரட் ணவிடம் கையளிக்கப்பட்டுள் ளது.

யாழ்ப்பாணம் மண்டைதீவு, கிளிநொச்சி இரணைமாதா நகர் மீனவர் கூட்டுறவுச் சங் கங்களும், மன்னார் மற் றும் கிளிநொச்சி பூநகரி மாவட்ட மீனவர் சமாசங்களும் இணைந்து கொடுத்த கடிதங்களின் அடிப் படையில் கடலுணவு ஏற்றுமதி யாளர் அமைப்புக்களின் பிரதி நிதியும் தப்ரபேன் கடற்றொழில் நிறுவனத்தின் பணிப்பாளரு மான டிலான் பெர்ணான்டோ வினால் கடந்த செவ்வாய்க் கிழமை மேற்படி மனு கைய ளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில்,

வடபகுதிக் கடலில் றோலர் படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதாக மீனவர் கூட்டு றவுச் சங்கங்கள் தெரிவிக்கின் றன. இலங்கையில் றோலர் படகு மூலமாக மீன்பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

இதேவேளை, இந்திய மீனவர் களுக்கும் இலங்கை மீனவர்க ளுக்கும்கூடந்த ஆறுமாதகாலங் களாக ஒரே சமயத்தில் நடைமு றையில் இருக்கும்படி றோலர் படகுகள் பயன்படுத்தலுக்கு தடைவிதிக்கப்பட்டது. இதனால் நீல நண்டுகளின் ஏற்றுமதி 40 சத வீதமாக அதிகரித்துள்ளதுடன் முன்னர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 500 பேருடன் மேலும் 300 பேரைத் தொழிலில் இணைத்துக் கொள்ள முடிந்தது. கடந்த 6 மாதங்களில் வருமானம் 10 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித் துள்ளது.

இந்தப் பகுதியில் சுமார் 200 றோலர் படகுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. இவை தொழி லுக்கு அனுமதிக்கப்படுமாயின் 2ஆயிரத்து 500 மீன்பிடிப் படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுடியாத நிலை ஏற்படும். றோலர்கள் வலைகளை சேதப் படுத்துவதே இதற்குக் காரணம். மீன்பிடித் தொழிலில் வீழ்ச்சி ஏற்படுமாயின் நாங்கள் வேறு தொழிலை நாடவேண்டிய தேவை ஏற்படும். ஆழ்கடல் மீன்பிடித் திட்டம் ஏற்கனவே மீன்பிடி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் இரு அமெரிக்க ஆலோசகர்கள் இலங்கைக்கு வந்து மீன்பிடிச் சங்கங்கள், ஏற்றுமதியாளர்கள் சங்கங்கள், மீன்பிடி அமைச்சின் பொதுப் பணிப்பாளர், யாழ்ப் பாணம், கிளிநொச்சி மீனவர் சங்கங்கள், மீனவர் சமாசங் களைச் சந்தித்தனர். அவர்க ளின் கருத்துப்படி இலங்கை யின் மீன்பிடி மற்றும் மீன்பிடி ஊக்குவிப்புச் செயற்பாடுகளில் உலகளவில் முதல் தரத்தில் உள் ளது எனக் குறிப்பிட்டிருந்தனர். இப்படி இத் துறை நற்பெயர் வரும் வேளையில் றோலர் படகுகளின் செயற்பாடுகளால் நல்ல வாய்புக்களை இழக்க நேரிடும் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. (த–10)

மஹிந்தவுடன் அடுத்த கலந்துரையாடலுக்காக காத்திருக்கின்றது மு.கா

கொழும்பு, டிசெ. 5

ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுடன் அடுத்த கட்டக் கலந்து ரையாடலுக்காக காத்திருக்கின் றது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக் ஷவுக்கா அல்லது பொது எதி ரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்காக ஆதரவு வழங் குவது என்பது தொடர்பில் தீர்மா னம் எடுப்பதை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கலந்துரை யாடல் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி புதன்கிழமை காலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சந் தித்துக் கலந்துரையாட அழைப்பு விடுத்ததாகவும், ஆனால் அதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸினர் மறுத்துவிட்டதாகவும் தகவல்கள் வெளிவந்தன.

இதனை உறுதி செய்யும் நோக் கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் கட்சியின் செயலாளர் நாய கம் ஹசன் அலியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

'ஜனாதிபதி எங்கள் கட்சியைக் கலந்துரையாடலுக்கு அழைத்து நாம் அதை மறுத்ததாக வெளி வந்த செய்திகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை. தேர்தல் காலத்தில் இவ்வாறான வதந்திகள் வெளிவருவது வழமை தான். ஜனாதிபதியுடன் புதன் கிழமை காலை கலந்துரை யாடல் ஒன்று திட்டமிடப்பட்டி ருந்தது. இருப்பினும் அதற்கான நேரம் குறிக்கப்படவில்லை. பல அமைச்சர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டு வருவதால் எமக்கான நேரம் இதுவரை கொடுக்கப்பட வில்லை. விரைவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதி பதியைச் சந்திக்கும்.

நாங்கள் சிறுபான்மையினர் என்ற நிலையில் இருந்து யோசித்து நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு கொடுப்பது என்று முடி வெடுப் போம்' எனத் தெரிவித்தார்.

(த–10)

நாடாளுமன்றத்தையும் மீறி செயற்படுகின்றது ஒரு குழு

குமுறுகிறார் சம்பிக்க

கொழும்பு,டிசெ.5

கடந்த நான்கு ஆண்டுகளாக ஜனாதிபதியானவர் பொறுப் பற்ற முறையில் செயற்பட்டுக் கொண்டு வந்திருப்பதை பார்த் திருக்கிறோம். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையால் இது நடைபெறுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. நாட்டி லுள்ள ஒரு சிறு பிரிவினர் நாடா ளுமன்றத்தை மீறியும் மேலாக வும் அமைச்சரவையை மீறியும் நடந்துகொள்ள அதிகாரம்பெற்றுள் ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சரான பாட் டலி சம்பிக்க ரணவக்க. ஆங் கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித் துள்ள பேட்டியில் ராஜ பக்ஷ அரசில் காணப்படும் பல குறைபாடுகளைக் குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் சுட்டிக்காட்டி யுள்ளதாவது:–

உதாரணம் ஒன்று சொல்ல வேண்டுமானால் கசினோ விவகாரத்தைக் குறிப்பிடலாம். 2011ஆம் ஆண்டு கொழும்பி லுள்ள ஐந்து கசினோ நிறு வனங்களைக் கொழும்புக்கு வெளியில் ஓர் இடத்துக்கு மாற்றுவதென நாடாளுமன்றத் தில் ஒரு தீர்மானம் நிறை வேற் றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை 2012 ஜனவரி முதலாம் திகதிக்குள் செயற்படுத்தி இருக்க வேண் டும். ஆனால் ஜனாதிபதி நிதி யமைச்சராக இருப்பதால் அதை நிறைவேற்றவில்லை. நாடாளுமன்றத்தினால் அங்கீக ரிக்கப்பட்டதை அவர் நிறை வேற்றவில்லை. இதிலிருந்து நாட்டிலுள்ள கசினோ ராஜாக் களுக்கு நாடாளுமன்றத்தின் தீர்மானத்தையும் மீறிச் செயற் ப டும் அதிகாரம் இருப்பதைத் தெரிந்து கொள்ள லாம்.

அவ்வாறான இன்னொரு விட யம் சிகரெட் பைக்கெட்டுகளில் எச்சரிக்கைப் படங்களை அச்ச டிப்பது சம்பந்தமானது. இதற் கான சட்ட வரைவு ஒன்றை நாடாளுமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியிருந்தது. ஆனால் அது செயற்படுத்தப்படுவது நீதித்துறையின் மூலம் தடுக்கப் பட்டது.

இந்தச் சட்ட வரைவு செயற் படுத்தப்படுவதைத் தடுக்க அரசி யல் தலையீடு ஒன்று இருந்துள் ளது என்பதில் பலத்த சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஜனாதி பதியால் நியமிக்கப்பட்டவர்கள் நாடாளுமன்றம் மக்களின் இறைமையைக் காப்பாற்றும் உயர்ந்த பீடமாக கூறப்பட்டா லும் ஜனாதிபதியும் வியா பாரப் பெரும்புள்ளிகளும் நாடாளு மன்றத்தின் அதி காரத்தை கீழ் நிலைக்குக் கொண்டுவந்துவிட் டார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை சீர்திருத்தப் பட்டவேண்டும். கட்டுப்பாடற்ற எதேச்சதிகாரமுள்ள ஜனாதிபதி முறை மாற்றப்படவேண்டும். –என்றார்.

(ப)

20 வருடங்களின் பின்னர் மீண்டும் கந்தளாய் சீனித் தொழிற்சாலை

திருமலை, டிசெ.5

20 வருடங்களாக மூடப்பட்டிருந்த கந்தளாய் சீனித் தொழிற்சா லையை மீண்டும் ஆரம்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் பணிப்புரைக்கு அமைய இன்று வியாழக்கிழமை முதல் குறித்ததொழிற்சாலையின்புனர மைப்புப் பணிகள் மேற்கொள் ளப்படவுள்ளன.

இந்தத் தொழிற்சாலை மீளத் திறக்கப்படுவதால் கிழக்கு மாகாணத்தில் சுமார் 25 ஆயி ரம் விவசாயக் குடும்பங்கள் நன்மையடைய வாய்ப்புக் கிட்டும் எனத் தெரிவிக்கப்படு கின்றது. (த–10)

பாப்பரசர் வருகையை முன்னிட்டு முத்திரை

கொழும்புத்துறை, டிசெ.4

பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்ஸிஸின் இலங்கைப் பய ணத்தை முன்னிட்டு அரசு ஞாப கார்த்த முத்திரையொன்றை வெளியிடத் தீர்மானித்துள் ளதாக தெரிய வருகின்றது.

திருத்தந்தை பிரான்ஸிஸ் எதிர் வரும் ஜன வரி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதைக் கௌரவிக் கும் வகையில் முத் திரைப் பணியகத்தின் வடிவ மைப்பில் இந்த ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்படவுள் ளது.

10 ரூபா பெறுமதியான இந்த முத்திரையில் திருத்தந்தையின் படம், இலங்கை பயணத் தின் திகதி என்பனவற்றைக் குறிப்

பிட்டும், பாப்பரசரின் இலங்கை பயணம் என்ற வாசகத்தைப் பொறித்தும் வடி வமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளதாக முத்திரைப் பணியக வட்டாரங்கள் தெரிவித்தன.

(த–135)

சிதைக்கப்படுகிறது தேசியத்தின் ஆத்மா

ஆனந்தசங்கரி தலைமையிலான கட்சியின் தலைமையை சாடுகின்றார் பூநகரி பிரதேச சபை தவிசாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 5

தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவை சிதைப்பவர்களோடு இனியும் இணைந்திருக்க முடியாது என்று தெரிவித்துள்ள பூநகரிப் பிர தேச சபையின் தவிசாளர் பொ.சிறிஸ் கந்தராசா, தமிழர் விடுதலைக் கூட்டணியின்தலைவர்வீ.ஆனந்த சங்கரியின் தலைமையிலான கட்சியின் தலைமையையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

பூநகரிப் பிரதேச சபையின் தவி சாளர் உள்ளிட்ட ஆளுங் கட்சி உறுப்பினர்கள், தமிழர் விடு தலைப் கூட்டணியின் செயலா ளரால் பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். இது தொடர்பில், பதவி நீக்கப்பட்ட தவிசாளர் பொ.சிறிஸ்கந்தராசா வெளியிட் டுள்ள அறிக்கையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவத்தின் கையாலா காத்தனங்களும், கொள்கைப் பிடிப்பற்ற சுயநல அரசியற் போக் கும் எனக்கு மரத்துப் போய் விட் டது. வடக்கு சமூகமே, கட்சி யின் தலைமை மீது அவநம் பிக்கையையும், நகைப்பையும் கொண்டுள்ளது. கட்சியிலிருந்து தமிழ் இனமொழிப்பற்றாளர்கள் வெளியேறியமைக்கான பொறுப் பைக் கட்சியின் தலைமையே ஏற்க வேண்டும்.

வடக்கு மாகாணசபைத் தேர்த லில், தான் உருவாக்கிய மாவட் டத்தில்தான் படுதோல்வி அடைந் தமைக்கு, தன்னுடைய முடிவே இறுதியானது என்ற அவரது சுயநல இலாப அரசியல்முடிவே காரண மாகும். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வீட்டுச் சின்னத் தில் போட்டியிட்டவர், தமிழ் மக் களின் இரத்த நாளத்தில் ஊறி யுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை விமர்சிப்பது முறையா னதா? இதன் மூலம் அவர் தமிழ் இனத்தின் மீது எந்த அளவுக்குப் பற்று வைத்திருக்கின்றார் என் பது வெளிப்படுகின்றது.

பூநகரி பிரதேச சபையை நான் சிறப்பாக நடத்திவந்தேன். பொறுப் பைச் சரியாகச் செய்திருக்கின் றேன். இதனைக் கட்சியின் தலைமை உணர்ந்திருக்கவேண் டும். சிலரின் சுயநலப் பொய் களை நம்பி அரசியல் செய்பவ ரோடு எப்படி இணைந்து செயற் பட முடியும்?

மாகாணசபைத் தேர்தலில் வீட் டுச் சின்னத்தில் கிளிநொச்சியில் போட்டியிடுபவர்கள் யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்று அன்னம் போல் செயற்பட்டவர் கள் தமிழ் வாக்காளர்கள். எமது ஆட்சிக் காலத்தில் தமிழரசுக் கட்சியினர் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கேட்டபோது மண்ட பம் ஒழுங்கு செய்தமையைக் கண்டித்து மரத்துக்குள் கீழ் வைத்திருக்க விட்டிருக்கலாமே என்று என்னைக்கண்டித்துப்பேசி யமையையும் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். இது பலகோணங் களில் சிந்திக்க வேண்டியது.

நான் பதவியிலிருந்து மத்தள மாக இருபக்கமும் அடி வாங்கி யதை இந்தப் பிரதேச மக்கள் நன்கு அறிவர். எனக்கு பதவி தந்த கட்சியின் முடிவை ஏற்று, தனி மனிதனாக நின்று தமிழ்த் தேசியத்துக்கும் பூநகரி பிர தேசத்தின் வளர்ச்சிக்கும் எனது பணி தொடரும் – என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித் துள்ளார். (ற-5)

மைத்திரிக்கே அமோக வெற்றி

வவுனியா, டிசெ.5

வடக்கு மாகாணத்தில் 92 சத வீதமான மக்கள் வாக்களித்தால் 82 சதவீதமான வாக்குகளை பெற்றுஜனாதிபதிவேட்பாளர்மைத் திரிபால சிறிசேன வடமாகாணத் தில் முன்னிலை வகிப்பார் – இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட இணைப்பாளர் றோகண கமகே.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் தம்பா விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் வடமாண சபைக்கு வழங்கப்பட வேண்டும். இரா ணுவப் பாதுகாப்பு வடபகுதிக்கு தேவையற்ற ஒன்று.

கடந்தகாலங்களில் அரசு பக்கம் இருந்த ஹெல உறுமயவும் தற் போது எமது பக்கம் திரும்பி உள்ளது. அரசு இம்முறை படு தோல்வியடையும்."– என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித் தார். இந்தக் கலந்துரையாட லில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள் எனப்பல ரும்கலந்துகொண்டனர்.(ற-402)

ஐ.தே.கவின் பிரதேச சபை உறுப்பினர் ஆளும் கட்சிக்கு

பண்டாரவளை பிரதேச சபை எதிர்க்கட் சித் தலைவர் சச்சிதானந்தன் சுரேன் கண்ணா ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திரக்கட்சியுடன் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த சச்சி தானந்தன் சுரேன் கண்ணா அமைச்சர் பஸில் ராஜபக்ஸவுடன் மேற்கொண்ட பேச்சின்பின்னரே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியுடன் இணைய இணங்கியுள்ளார். இவர் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற பண்டாரவளை பிரதேசசபை தேர்தலில் ஐ.தே.க. சார்பில்போட்டியிட்டுவெற்றி பெற்றார். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க இளை ஞர் அமைப்பில் முக்கிய பதவியை யும் இவர் வகித்துவருகின்றார். (ற)

பிரதமர் பதவிக்காகவே மைத்திரி களமிறக்கம்

ஐ.தே.கவைச் சாடுகின்றார் கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் உதுமாலெவ்வை

பொது எதிரணி வேட்பாளர் மைத் திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்றால் 100 நாள்களுக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அதிகாரமுள்ள பிரதமராக நியமிப்பதாக பகிரங்க மாக அறிவித்துள்ளார். இந்தப்பிரதமர் பதவிக்காகத்தான் பொது வேட்பாளர் மைத்திரியை ஐக்கிய தேசியக் கட்சி பாவித்துள்ளது – இவ்வாறு தெரிவித் துள்ளார் கிழக்கு மாகாண வீதி அபி விருத்திஅமைச்சரும்கிழக்குமாகாண அமைச்சரவையின்பேச்சாளருமான எம். எஸ். உதுமாலெவ்வை.

ஏறாவூரில் நடைபெற்ற நிகழ்வொன் றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்,

"ஜனாதிபதித்தேர்தலில்முஸ்லிம்மக்கள் நன்கு சிந்தித்து சரியான முடிவை மேற்கொள்ளவேண்டும். நாட்டில்ஜனா திபதிப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பலபேர் போர் நிறுத்தம் செய்து சமா தான உடன்படிக்கைகளை காலத் துக்கு காலம் மேற்கொண்டுவந்தனர். 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனா திபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டபோது நாங்கள் எமது நாட்டில் போரை இல்லாமல் செய்து நிம்மதியாகவாழக்கூடியசூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என வேண்டு கோள் விடுத்தோம். தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி 30 வருட கால உள் நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டு வந்தார். அதன்மூலம் கிழக்கு மாகாணத் துக்கான நிதிகள் அதிகளவில் வழங்கப் பட்டு கிழக்கு மாகாணம் அபிவிருத்தி நோக்கில் கட்டியெழுப்பப்பட்டது.

போரை இல்லாதொழித்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொதுவேட் பாளராக எதிரணிகள் ஒன்று சேர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரியை களமிறக்கியுள்ளன. இது மஹிந்தவுக்கு எதிரானவெளிநாட்டுஉள்நாட்டுசக்திகள் ஒன்றிணைந்து செய்த சதித்திட்டமா கவே கொள்ள வேண்டும்"– என்று தெரி வித்துள்ளார். (ற-10)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

புதிய 10 நாணயத் தொடர்கள்

சேகரிப்புப் பொருள்கள் .....

அதிகரித்த கேள்வியின் காரணமாக இலங்கை மத்திய வங்கி, இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களினைப் பிரதிபலிக்கும் ரூ.10 நாணயக் குற்றிகளின் சேகரிக்கப்படக் கூடிய பொருள்களின் மேலதிக இருப்பினைத் தருவித்துக் கொள்வதற்கு தீர்மானித்திருக்கிறது. இவை 2015 ஜனவரியில் பொருளாதார வரலாற்று அரும்பொருள்காட்சிச்சாலை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களினூடாகவும் கிடைக்கச் செய்யப்படும். சேகரிப்பாளர்களுக்கு ஏற்பட்ட வசதியீனங்களுக்காக மத்திய வங்கி வருந்துகிறது.

நாணயக் கண்காணிப்பாளர்
☎ 011-2477587 ✉ currency@cbsl.lk

செய்திகள்

மலையகத்தின் காலநிலையால் சாரதிகள் சிரமம்

கொழும்பு, டிசெ.5

மலையகத்தில் சில பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக போக்குவரத்தின்போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை பெய்த கடும் மழை காரணமாக பொகவந்தலாவ நகரம் உட்பட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன் ஹட்டன் – பொகவந்தலாவ பிரதான வீதியில்அதிக பனிமூட்டம் காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்தின்போது பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

அதேவேளை, மின்னல் தாக்கத்தால்அதிர்ச்சியடைந்த பெண் ஒருவர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார். போடைஸ் பகுதியைச் சேர்ந்த சரஸ்வதி என்ற பெண்ணே இவ்வாறுஅதிர்ச்சியடைந்துவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

பாப்பரசரின் வருகையை அரசியல் மயமாக்காதீர்

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.5

புனித பாப்பரசரின் இலங்கைப் பயணத்தை அரசியல்மயப் படுத்த வேண்டாம் என்றும், பாப் பரசர் அரசியலுக்கு அப்பாற் பட்ட மதத் தலைவர் என்பதை சகல அரசியல் கட்சிகளும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டு மென்றும் அதி. வணக் கத்துக்குரிய கர்தினால் மல் கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டு கோள் விடுத்துள்ளார்.

2014ஆம் ஆண்டுக்கான நத் தார் பண்டிகை தொடர்பில் தபால் உறை வெளியிடப்பட்ட வைபவத்திலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

"புனித பாப்பரசர் இலங்கைக்கு வருவதற்குத் தீர்மானித்தமை பற்றி இலங்கையர்களான நாம்

ஒவ்வொருவரும் பெருமை கொள்ள வேண்டும். புனித பாப் பரசர் அரசியலுக்கு அப்பாற் பட்ட, உலகெங்குமுள்ள 80 கோடி மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் ஒரு மதத் தலை வர். அவர் இலங்கைக்கு மேற் கொள்ளவுள்ள பயணம் எவ் விதத்திலும் அரசியல் தொடர்பு கொண்டதல்ல.

இன்று உலகில் அபிவிருத்தி அடைந்துள்ள செல்வந்த நாடு களின் பிரதான வருமானம் ஆயுதங்களை விற்பதாலேயே கிடைக்கிறது. அந்த நாடுகள் சமாதானத்தை விரும்புவ தில்லை. சமாதானம் நிலவும் நாட்டுக்கு அவர்களால் ஆயுதங் களை விற்க முடியாது. இலங் கையிலும் அவ்வாறான அமைதி யின்மையை உருவாக்குவதில் பல செல்வந்த நாடுகள் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. 30 வருட போர் முடிந்து இப் போது நாம் அமைதியாக வாழ் கிறோம். அரசியல் குரோதங் களால் இந்த அமைதியை சீர்குலைக்க இடளிக்கக்கூடாது. பாப்பரசரின் பயணத்தை எந்த விதத்திலும் அரசியல்மயப் படுத்தக் கூடாது."– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

இரத்தினக் கற்கள் கடத்தல் முறியடிப்பு

கொழும்பு, டிசெ.5

54 லட்சத்து 69 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள 218 இரத்தினக் கற்களை சீனாவுக்குக் கடத்திச் செல்ல முயன்ற இரு இலங் கையர்கள்கட்டுநாயக்காவிமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப் பட்டுள்ளனர்.. கடந்த 2ஆம் திகதியன்று அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, பம்பலபிட்டியைச் சேர்ந்த 22 மற்றும் 24வயது டைய குறிப்பிட்ட இரு இளை ஞர்களும் பிரபல இரத்தினக்கல் வியாபாரிகள் எனவும், அவர்கள் அடிக்கடி சீனாவுக்குச் சென்று வருபவர்கள் எனவும் சுங்க அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

547 கரட் நிறையுள்ள குறித்த இரத்தினக் கற்கள் பல தரப்பட்ட வகைகளைச் சேர்ந்தவை என வும், அவற்றை ஷாம்பூ நிறைந்த போத்தல்களில் மறைத்து எடுத் துச் செல்ல அவர்கள் முன்றதாக வும் சுங்க அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசார ணைகளை அடுத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக் கப்பட்டதுடன், அவர்கள் வச மிருந்துகைப்பற்றப்பட்டஇரத்தி னக் கற்களும் அரசுடைமை ஆக் கப்பட்டுள்ளன என்றும் க சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஞ)

ஆகக் கூடிய வாக்காளர்கள் கம்பஹாவில்

ஜனாதிபதித் தேர்தல் எதிர் வரும் ஜனவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், 2014ஆம் ஆண்டுக்கானதேர் தல் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் இம்முறை கம் பஹா மாவட்டத்திலிருந்தே ஆகக்கூடுதலான வாக்கா ளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேர்தல்கள் திணைக் களம் அறிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 16 லட்சத்து 37 ஆயிரத்து 537 வாக்காளர்கள் வாக்களிப்ப தற்குத் தகுதிபெற்றுள்ளனர் என்றும், இது ஏனைய வரு டங்களைவிட நாடளாவிய ரீதியில் ஆகக் கூடுதலான தொகையாகும் என்றும் தேர் தல் திணைக்கள அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் வாக்காளர் (2014) இடாப்பின் பிரகாரம் நாடளா வியரீதியில்சகலமாவட்டங்களி லும் மொத்தமாக 15,044,490 வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் பதியப் பட்டுள்ள தாகவும் ஆகக் குறைந்தள விலானவாக்காளர்கள்253,058 பேர்வன்னிமாவட்டத்திலிருந்து பதியப்பட் டுள்ளனர் என்றும் தேர்தல்கள் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (ற)

முன்னாள் போராளிகளில் பலருக்கு தொழில்வாய்ப்பு

பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது

கொழும்பு, டிசெ.5

போர் முடிவடைந்த பின்னர் புனர்வாழ்வுத் திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த முன்னாள் போராளிகள் 12 ஆயிரத்து 30 பேரில் குறிப்பிட்ட தொரு தொகையினர் அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற் றுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரி வித்துள்ளது.

இவர்களுள் 255 பேர் அரச துறையிலும், 61 பேர் சிவில் பாதுகாப்புப் படையிலும், 61 பேர் ஆசிரியத் தொழிலிலும், 502 பேர் தொழிலாளர்களா கவும் பணிபுரிகிறார்கள். ஏராள மானோர் வெளிநாடுகளில் தொழில் புரிபவர்களாகவும் உள் ளனர்எனவும்பாதுகாப்புஅமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் பணிபுரிபவர் களில் விவசாயிகள், மின்சார தொழில் நுட்பவியலாளர்கள், மோட்டார் வாகன தொழில்நுட் பவியலாளர்கள், மீனவர்கள், மேசன்மார், தச்சர்மார் எனப் பல் வேறு தரப்பினர் உள்ளனர் என வும் பலர் நிலக்கண்ணிகளை அகற்றும் தனியார் நிறுவனங் களிலும், தகவல் தொழில்நுட் பத் துறையிலும் ஈடுபட்டுள்ள னர் எனவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ற)

முத்திரைக் கண்காட்சி ஆரம்பம்

இலங்கை தபால் திணைக்களத் தின் முத்திரைப் பணியகம், இலங்கை முத்திரை சேகரிப்பா ளர்களின் சங்கம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'தேசிய முத்திரைக் கண்காட்சி – 2014' நேற்றுமுதல் தினமும் காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை கொழும்பு – 10 இல் அமைந் துள்ள தபால் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்று வரு கிறது.

இது எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலவசமாகக் காண்பிக்கப்படும் இந்த முத்திரைக் கண்காட்சியில் பழைய – புதிய உள்நாட்டு – வெளிநாட்டுமுத்திரைகள், முதல் நாள் தபால்உறைகள் உள்ளிட் இலங்கைமுத்திரைகளின்பெயர்ப் பட்டியல் அடங்கிய புத்தகமும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன என்று இலங்கைமுத்திரைப்பணி யகம் தெரிவித்துள்ளது. (ற)

தேரரின் கொலையால் கிராமத்தில் வன்முறை

கொழும்பு, டிசெ.4

வர்த்தகரொருவரின் தலைமை யிலான குழுவொன்றின் தாக் குதலுக்கு உள்ளான தெஹியோ விற்ற, ஹனன்கம விகாரையின் பௌத்த மதகுரு உயிரிழந்ததை யடுத்து கிராம வாசிகள் வன் முறையில் ஈடுபட்டனர் என்று தெரியவந்துள்ளது.

குறித்த மதகுருவான ஹேன் கடுவே நந்தசிறி தேரர், குழு வொன்றின் தாக்குதலுக்கு உள் ளாகி கொழும்பு தேசிய வைத் தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் சிகிச்சை பய னின்றி கடந்த முதலாம் திகதி உயிரிழந்தார்.

தேரரின் உயிரிழப்பு குறித்த செய்தி அறிந்ததும் கிராம வாசி கள் ஒன்று திரண்டு, குறித்த தாக்குதலின் முக்கிய சந்தேக நபரான வர்த்தகருக்குச் சொந்த மான வீடு, வர்த்தக நிலையம், பஸ், லொறி, மோட்டார் சைக் கிள், முச்சக்கரவண்டி ஆகிய அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்தியதுடன் மற்றொரு சந்தேக நபரது வீட்டையும் தீயிட் டுக் கொளுத்தியுள்ளனர்.

குறிப்பிட்ட மதகுருவுக்கும் வர்த் தகருக்கும் இடையில் நிலவி வந்த தனிப்பட்ட தகராறு காரண மாகவே தேரர் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட் டதாகத் பொலிஸார் தெரிவித் தனர்.

அந்தப் பகுதியில் நிலவிய பதற்ற நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ருவான்வெல்ல பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்துநீதிமன்றில்முன்னி லைப்படுத்தியதோடு பின்னர் அவர்கள்நீதிமன்றத்தால்பிணை யில் விடுவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிராம வாசிகளது எதிர்ப்புக்கு அஞ்சி சந்தேகநபர்கள் அனை வரும் தலைமறைவாகியுள்ள னர் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஞ)

தொடர்ச்சி

ஏ.ரி.எம்.

சோதனையை இறுக்கியதாகவும் தெரி வித்தனர்.

இரவு 8 மணியளவில் ஓட்டோ ஒன்றை மடக்கிச் சோதனையிட்டபோது, அதி லிருந்து 69க்கும் மேற்பட்ட 'ஏ.ரி.எம்' அட்டைகள் பொலிஸாரிடம் சிக்கின. உடனடியாக ஓட்டோவில் இருந்த மூவ ரும் கைது செய்யப்பட்டனர்.

நேற்று மூவரும் பருத்தித்துறை நீதி மன் றில் முற் றுப்பட்டனர். சந்தேகநபர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தக் கும்பலின் வலைப் பின்னல் தொடர்பில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர். (ற-109)

நிமாலின்

"வன இலாகா பிரிவினர் தமக்கு உரியது என காணிகளை எல்லையிடும் போது அந்தந்தப் பகுதி கிராம அலுவலர், பிரதேச செயலாளர் ஊடாக கிராம மக்களுடன் கலந்துரையாடி மக்களின் காணிகளை இனங்கண்டு உறுதிப்படுத்தப்பட்ட பின் னரே, வன இலாகாவுக்குரிய காணிகளுக்கு எல்லையிடுதல் வேண்டும் என மாகாண காணி ஆணையாளர் ஊடாக காணி ஆணையாளரைக் கோருகின்றோம்" என்ற பிரேரணையை முன்மொழிந்தார்.

இதன் போது உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர், கொழும்பு அரசின் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் சகோதரிக்கு வெலிஓயாவில் காணி வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். 6 ஆயிரம் ஏக்கம் அபகரிக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதன்பின்னர் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக, "வடக்கு மாகா ணத்தைச் சாராத எவருக்கும் வடக்கு மாகாணத்தில் காணி வழங்க முடியாது. அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் சகோதரிக்கு காணி வழங்கப்பட்டுள்ளது. அது தவறானது" என்று குறிப்பிட்டார். இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர் கட்சி உறுப்பினருக்கு உண்மையைக் கூறி யமைக்காக நன்றி தெரிவித்தனர். (ற-5)

அனல் மின்

கான குழாீர் விநியோகத்தை மேற்கொள் வதற்கும், நிலத்தடி நீரில் கலந்துள்ள எண் ணெய் தொடர்பான பகுப்பாய்வுகளுக் கும், சுத்திகரிப்புக்கும், குடாநாட்டின் நீர் வள மேம்பாட்டுக்கும் செலவிடுவதற்கு வடக்குமாகாண சபையிடம் போதிய நிதி இல்லை. எனவே, வணிக நிறுவனங்க ளுக்குரிய சமூகக் கடப்பாடு என்ற ரீதி யில் நொதேர்ண் பவர் பிளான்ற் நிறுவனம் மேற்குறிப்பிட்ட தேவைகளுக்கு அது இயங்கும் காலம் வரை நிதிப்பங்களிப்பை வழங்க வேண்டும்.

நொதேர்ண் பவர் ஏற்கனவே பாவிக் கப்பட்ட பழையரக மின் பிறப்பாக்கி யையே வருவித்துப் பயன்படுத்துகிறது என்பதும் தெரியவந்துள்ளது. இந்நிலை யில் இவற்றின் செயற்பாடுகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபை தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும் எனவும், நொதேர்ண் பவர் நிறுவனத்துக்கு வழங் கப்பட்ட அனுமதி காலாவதியாகும்போது மேலும் நீடிக்க வேண்டாம் எனவும், இந் நிறுவனத்தால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் எண்ணெய்க் கழிவு கள் தற்போதும் வெளியேற்றப்படுகிறது என்பது உறுதிசெய்யப்படின் அதற்கு வழங் கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்து தடை விதிக்கவேண்டும் எனவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையை இந்தச்சபை கோருகிறது.

வடக்குமாகாணம் சூழல் நட்புமிக்க காற்று மின்னைப் பெறுவதற்கான வாய்ப்பான சூழலை அதிகளவில் கொண்டிருப்பதாலும், காற்று மின் ஆலைகள் நிர்மாணிக்கப் பட்டுக் கொண்டிருப்பதாலும், எமது மண்ணின் சுற்றுச்சூழலை மோசமாகச் சீரழித்து மக்களின் இருப்பையே கேள் விக் குறியாக்கும் சுன்னாகம் அனல் மின் நிலையத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கோ அல்லது வடக்கில் புதிதாக வேறு அனல் மின் நிலையங்களைத் தாபிப்பதற்கோ அனுமதி வழங்க வேண்டாம் எனவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையை இச் சபை கோருகிறது – என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ற-5)

தமிழர் முடிவுக்கு

என்றும் தெரியவருகின்றது. தமிழ் மக்களை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு ஏமாற்றாது. அந்த ஒப்பந்தம் தொடர்பிலும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் அவர்களின் நிலைப்பாட்டை வெளிப் படையாகத் தெரிவிக்கவேண்டும்"– என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். இந்த ஊடகச் சந்திப்பில் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன்துக பெர் னாண்டோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ற-சி)

மரண அறிவித்தல்கள்

தம்பிநாதர் சண்முகலிங்கம்

(ஓய்வுபெற்ற பரிசாரகர் போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்)



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தம்பிநாதர் சண்முகலிங்கம் 02.12.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிநாதர்-பறு வதம் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ் சென்ற இராசா-மாணிக்கம் தம்பதியரின் மருமக னும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ் வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), ஜெயரூபி (பிரான்ஸ்) ஜெயரூபன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும், வசந்தகோகில தேவி, காலஞ்சென்ற அம்பிகைபாகன், பாலசிங்கம், இராசலிங்கம், வரதராசன் காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சினிதேவி, வனஜாதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும், கி. கதிரமலை, இ.செல்வநாயகம், இ.மகா லிங்கம், இ.மகேந்திரன், அ.அருந்ததி, பா.திலகவதி, இ.வதனி, வ.நளினி, ப.ச்சிதானந்தம், கி. இரகுநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், செ.லோகேஸ்வரி, ம.பூமணி, ம. மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சக லனும், ஜெ.சசிகலா, கிருபானந்தசோதி, கமல்ராஜ், ராஜினி ஆகியோ ரின் அன்பு மாமனும், தர்சன் லக்சிகா கிசோபன் பதுசியா, சேரன் சரண் விதுசன் திலக்சன் ஐங்கரன் சங்கரன் ஜெனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2014) வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் குப்பிளான் கேணியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குப்பிழான் கடாகரம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(54609)
(10.6)

திருமதி கண்மணி கந்தையா

பிறப்பு 12.10.1917 இறப்பு 04.02.2014

இணுவில், மஞ்சத்தடியைப் பிறப் பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி கந்தையா நேற்று (04.12.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தை யாவின் அன்பு மனைவியும், புவ னேஸ்வரி, ரத்தினேஸ்வரி, காலஞ் சென்றவர்களான பராசக்தி, சரஸ் வதி மற்றும் விவேகானந்தம், சச்சி தானந்தம், மகேந்திரராஜா, தவேந்தி ரராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2014) வெள்ளிக் கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரி யைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(54651)(4.3.6) தகவல்: குடும்பத்தினர்.

சின்னப்பொடியன் கந்தையா

(ஓய்வுபெற்ற நில அளவை உத்தியோகத்தர்)

கைதடி மத்தி குமரநகரைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப் பொடியன் கந்தையா (ஓய்வுபெற்ற நில அளவை உத்தியோகத்தர்) நேற்று (04.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின னப்பொடியன்-வள்ளி தம்பதியரின் மூத்த மக னும், காலஞ்சென்றவர்களான கந்தையா (செட்டி யார்), மாரிமுத்து மற்றும் விசாலாட்சி தம்பதி யரின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லட்சுமி மற்றும் வெள்ளைப்பிள்ளை, சின்னையா, பூபாலசிங் கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிஸ்கந்தராஜா (சுவிஸ்), திருச் செல்வராஜா (நில அளவைக் கந்தோர்), அற்புதராணி, சிவனேசராசா (நோர்வே), விவேகானந்தராசா (லண்டன்), பிரான்ஸில் வசிக்கும் கிருப ராணி, செல்வராணி, சிவகணேசவேல், நவநீதராசா, யோகராணி ஆகி யோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரநகர், கைதடி மத்தி. (54652) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

திருமதி நாகேஸ்வரி கந்தசாமி

62/6, முதலாம் ஒழுங்கை, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி கந்தசாமி நேற்று (04.12.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து கந்தசாமி அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

62/6, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 077 785 7567

(54635)(4.3.6)

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

திருமதி ஆனந்தீஸ்வரி தனபாலசிங்கம்

தம்பிராய் பூநகரியைப் பிறப்பிடமாக வும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தீஸ்வரி தனபாலசிங்கம் நேற்று (04.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நட ராஜா-பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பசுபதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், துஷ்யந்தன் (இலங்கை வங்கி, அச்சு வேலி), காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் நிரோசன் (கிளிநொச்சி), லக்சன் (யாழ். பல்கலைக்கழகம், சட்டத்துறை முதலாம் ஆண்டு மாணவன்), காலஞ்சென்ற கௌதமன் ஆகியோரின் அன்புத் தாயும், ஜெரீனா, கிருஷ்ணவாணி ஆகியோரின் அன்பு மாமியும், அக்ஷயன், அர்ஜூன், கிரிஷ்னி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.12.2014) வெள்ளிக்கிழமை பெரியதம்பிராய் பூநகரியில் நடைபெற்று, நாலாம் கட்டை சேமக்காலையில் பி.ப 2.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியதம்பிராய், பூநகரி. (54660) (10.6)

தகவல்: பிள்ளைகள்.

திருமதி சொர்ணலட்சுமி சிவப்பிரகாசம்

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும், அரசடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணலட்சுமி சிவப்பிரகாசம் நேற்று (04.12.2014) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தையா-சிவக்கொழுந்து தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவப்பிர காசத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான கனகம்மா, துரைசிங்கம், தில்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செந்தினி (ஜேர்மனி), திருலோகசங்கர் (பிரான்ஸ்), கௌரி மனோகரி (ஆசிரியை-கரம்பொன் சண்முகநாத ம.வி) ஆகியோரின் தாயும், ஹரிராமஜெயம் (ஜேர்மனி), சந்திரமணி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமி யும், ஜெகதீஸ்வரன், ஏணஸ்ற்,எமிலி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

91/2, அரசடி வீதி, தஞ்சிலேன், யாழ்ப்பாணம். 021 222 9131

(54657) (10.6)

தகவல்: S. கௌரிமனோகரி (மகள்)

வேலுப்பிள்ளை சிவபாலன்

(மயூரன் மரஅரிவு ஆலை உரிமையாளர்)

காளிகோயிலடி, கரவெட்டி கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவபாலன் நேற்று (04.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ரஜனியின் அன்புக் கணவரும், மல்லிகாதேவி, மஞ்சுளா தேவி, மாலதி, மகிந்தன், மதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2014) வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (C/18073) (10.6)

தகவல்: குடும்பத்தினர். 077 673 8253

செய்திகள்

துயருடன் இறுதிச் சடங்கில் பங்கேற்றார் சீன் அப்போட்

பிலிப் ஹியூக்ஸின் இறுதிச் சடங்குக்கு பவுன்சர் வீசிய பந்து வீச்சாளர் சீன் அப்போட் தனது அணியினர் மற்றும் குடும்பத் தினருடன் வந்திருந்தார்.
கமராக்கள் தன்னையே மொய்க்கும் என்பதை உணர்ந்த அப்போட், இறுகிய முகத்துடன், துயரத்துடன் தனது அணி வீரர் களுடன் அவசரம் அவசரமாக இணைந்து கொண்டார்.
சாதாரணமாக தெருவில் நடந்தால் அவர் ஒரு கிரிக்கெட் வீரர் என்று யாரும் கருத மாட்டார்கள். ஆனால் பிலிப் ஹியூக்ஸ் சாவுக்குப் பிறகு அவர் தற்போது ஆஸ்திரேலியா முழு தும் அனைவராலும் அறியப்பட்ட மற்றும் அனுதாபத்திற்குரிய வீரராகி யுள்ளார்.
பிலிப் ஹியூக்ஸிற்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்த பலரும் சீன் அப்போட்டைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் தெரிவித்தனர்.
முன்னாள் ஆஸ்திரேலிய வீரர் டீன் ஜோன்ஸ் நேராக அவரிடம் சென்று கையைப் பிடித்துக்கொண்டார்.
ஆனால், அவர் தனது அணியின ருடன் இணை வதில் முனைப்பு காட்டினார்.
ஹியூக்ஸின் இறப்பால் உடைந்து போய் இருந்த அப்போட், இறுதிச் சடங் குக்கு வந்ததே அவரது தைரியத்தைக் காட்டுவதாக ஆஸ்திரேலிய ஊடகங் கள் தெரிவிக்கின்றன.
இருப்பினும், ஆஸ்திரேலிய அணிக்கு விளையாடும் பெரும் கனவுடன் விளை யாடி வரும் 22 வயதான அப்போட் டுக்கு இந்த நிகழ்வு பெரும் துயரமே. ஆனால், அவர் ஓரளவுக்கு இதிலிருந்து மீண்டுள்ளார் என்று அவரது நண்பர் கள் கூறியதாக ஆஸ்திரேலிய ஊடகங் கள் தெரிவித்துள்ளன. (த)

கைத் துப்பாக்கியுடன் கைதான ஈ.பி.டி.பி உறுப்பினர் பிணையில்

யாழ்ப்பாணம், டிசெ. 5
வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி, மகசின் மற்றும் ரவைகளுடன் யாழ்.நகர உண வகத்தில் மதுபோதையில் தள்ளாடியபோது கைதாகி ஒரு வருடமாக விளக்கமறியலில் இருந்த ஈ.பி.டி.பி அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத் தரான பற்றிக் தோழர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
கடந்த வருடம் ஒக்ரோபர் 14 ஆம் திகதி கரம் பொன் ஊர்காவற் றுறையைச் சேர்ந்த ஜோசப் பற் றிக் விமல்ராஜ் என்பவரே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் யாழ்.நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
அவர் யாழ்.ஸ்ரான்லி வீதியில்.உள்ள உணவகம் ஒன்றில் கைத் துப்பாக்கியுடன் மதுபோதையில் தள்ளாடி அட்டகாசம் செய்த போது பொலிஸா ருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே பொலிஸார் அங்கு சென்று அவரைக் கைது செய்தனர்.
அவரையே பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிமன்று பிணை அனுமதி வழங்கியது. அதன் படி 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் திணைக்கள யாழ்.அலுவல கத்தில் கையெழுத்திடவேண்டும் என்றும் வெளி நாடு செல்ல முடியாது என்றும் நிபந்தனை விதித்தது. (த-4)

தொடர்ச்சிகள்

மைத்திரி

என்று கூறப்படுகின்றது. அங்கு பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கிகளின் வயர்களைப் பொலிஸார் துண்டித்தனர் என் றும், கை ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியே கூட்டம் நடை பெற்றது என்றும் தெரிவிக்கப் படுகின் றது.
கூட்டத்தில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த அனுமதி பெறப்பட் டிருந்த போதும், பொலிஸார் இவ்வாறு இடையூறு ஏற்படுத்தி யிருந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.
(ற-5)

வரவு - செலவுத்

வரவு – செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்போம் என்று எச்சரிக்கை விடுத்தனர்.
அமைச்சரவைத் தீர்மானங் கள், பேரவைச் செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்ப வேண்டும் என்று பலமுறை முதலமைச்சரிடம் கடிதம் மூலம் கோரியிருந்தேன். இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனைச் சமர் பிக்க வேண்டும். சட்ட ஏற்பாடு களின் அடிப்படையில் கட்டா யம் அமைச்சரவைத் தீர்மா னங்கள் சபைக்குத் தெரியப் படுத்தப்பட வேண்டும். அது இன்னமும் நடைமுறைக்கு வர வில்லை என்று அவைத் தலை வர் சி.வி.கே.சிவஞானம் தெரி வித்தார்.
இதன் போது பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், ஆளுங்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகியோர், அமைச் சரவைத்தீர்மானத்தை அறிவிப் பத்தில் ஏன் தயக்கம் காட்டுகின் றீர்கள். அதில் என்ன இரகசி யத்தை அப்படி வைத்திருக்கின் றீர்கள். அதனைச் சபைக்கு அறி வியுங்கள். இதனை அறிவிக்கா விட்டால், வரவு – செலவுத் திட்டத்தின் போது வாக்கெடுப்பு கோரி எதிர்த்து வாக்களிப் போம் என்று குறிப்பிட்டனர்.
இதன் போது கருத்துத் தெரி வித்த முதலமைச்சர், அவை நீண்ட விரிவாக உள்ளன. பிர தம செயலாளர் அலுவலகத்தில் உள்ளது. உறுப்பினர்கள் அத னைச் சென்று பார்வையிட முடியும். அதனைச் சுருக்கி வழங்குவதில் எங்களுக்கு தாமதங்கள் உள்ளது – என்று குறிப்பிட்டார்.
இதன் போது ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான விந் தன் கனகரட்ணம், வரவு – செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு திட்டங்களுக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு என்ன நடந்தது? எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டது என்ற முழு மையான விவரம் வேண்டும். இதனை வழங்காவிடின், வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டி வரும் என்று குறிப்பிட்டார்.
இதற்குப் பதிலளித்த முதல மைச்சர், நிதியாண்டு இன்ன மும் முடியவில்லை. முடிவு டைந்ததும் அது வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.
(ற-5)

உதவி ஆசிரியர்கள் நேற்று போராட்டம்

சம்பள அதிகரிப்பு, நிரந்தர நியமனம் கோரி

யாழ்ப்பாணம், டிசெ. 5
யாழ். மாவட்டம் மற்றும் வன்னி யில் உள்ள ஆசிரிய உதவியா ளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறும், அடிப்படைச் சம்பளத்தை 15 ஆயிரம் ரூபா வாக அதிகரிக்குமாறும், பரீட்சைப் பெறுபேறுகளை உடனடியாக வெளியிடுமாறு கோரியும் கைத டியிலுள்ள வடக்கு மாகாண சபை முன்பாக நேற்று முற்பகல் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். சுமார் 150 பேர் வரை இந்தப் போராட் டத்தில் கலந்து கொண்டனர்.
ஆசிரிய உதவியாளர்களாக நிய மிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் கோப்பாயிலுள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலை யில் பயிற்சி பெற்று அண்மை யில் பரீட்சை எழுதி வெளியேறி னர். அவர்கள், தமது பெறுபேறு களை உடனடியாக வெளியிட வேண்டும். வன்னியில் கற்பித் கும் ஆசிரியர்கள் போக்குவரத் துக்காக அதிக பணத்தைச் செல விடுகின்றனர். எனவே சம்பளத்தை அதிகரியுங்கள் என்றும் கோரினர். அவர்களிடம் சென்று வட மாகாண கல்வி அமைச்சர் தகுருகுலராஜா கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், சந்தித்துக் கலந்துரையாடினர்.
3 ஆயிரம் ரூபா தொடர்பில் வாரி யப் பத்திரம் தயாரிக்கப்பட்டு ஆளுநரிடம் அனுப்பப்பட்டுள்ளது. பிரதம செயலாளருக்கு அனுப் பப்பட்டுள்ளது. நீங்கள் மாத்திர மல்லாது ஆசிரிய உதவியாளர் கள் ஆயிரத்து 49 பேர், ஒப்பந்த ஆசிரியர்கள் 176 பேர், பகுதிநேர ஆசிரியர்கள் 87 பேராக ஆயி ரத்து 312 பேருக்கு கடந்த 29 ஆம் திகதி வாரியப் பத்திரம் தயாரிக் கப்பட்டு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. அதனை வடமாகாண ஆளுநர் அங்கீகரித்தால் அதற்குக் குறை நிரப்புத் தொகையைக் கூறி 3 ஆயிரம் ரூபாவைப் பெற் றுத் தர முடியும்.
உங்களை நிரந்தரமாக்குமாறு நாம் கோரிக்கை விடுத்து அதற் கான வாரியப் பத்திரத்தைச் சுமார் 4 மாதங்களுக்கு முன்னரே மத் திய கல்வி அமைச்சுக்கு அனுப்பி விட்டோம். அதற்கு மத்திய கல்வி அமைச்சு பதில் அனுப்பவில்லை. நீங்கள் பயிற்சி கூட பெறாத நிலையில் உங்களுக்கு ஆசிரி யர் கலாசாலையில் பயிற்சி வழங் கலாம் என்று வடமாகாண சபை தீர்மானம் எடுத்ததனாலேயே நீங்கள் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலையில் உள்ளீர்கள்.
நீங்கள் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறு வந்தவுடன் உங்களை ஆசிரியர் சேவையில் தரம் 3–11 க்கு உள்ளீர்ப்புச் செய்து அவற் றுக்குரிய அடிப்படைச் சம்பளத் தையும் வழங்குவோம் – என்ற

னர்.
ஆனால், கச்சேரியில் கடந்த 5 ஆம் மாதம் இடம்பெற்ற ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தில் அதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தெரிவித்தி ருந்தனர். 3 மாதத்தில் பரீட்சைப் பெறு பேறு வந்துவிடும். வந்தவு டன் தரமுயர்த்துவதாக வும் அதுவரை வன்னியில் பணி யாற்றுமாறும் கூறியதன் அடிப் படையிலேயே நாம் வன்னிக் குச் சென்றோம் என்று உதவி ஆசிரியர்கள் கூறி னர்.
ஆனால் பெறுபேற்றை வட மாகாண அமைச்சு வெளியிட முடியாது. மத்திய கல்வி அமைச்சே வெளியிட முடியும். என்று வட மாகாண கல்வி அமைச்சர் தெரி வித்தார்.
அங்கு திடீரென வந்த வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, தரம் 3 – 11 க்கு உள்வாங்கு வதற்கு அறிக்கை தயாரித்து மத் திய அமைச்சருக்கு கொடுங் கள். அதனை மத்திய அமைச்சர் மத்திய அமைச்சுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுப்பார் என்று கூறினார்.
உதவி ஆசிரியர்களில் குறிப் பிட்ட சிலரை வடமாகாண சபைக் குள் அழைத்துச் சென்ற தவராசா, அவர்களை அங்கு நிறுத்திவிட்டு அமர்வுக்குச் சென்றுவிட்டார். அதனால் பிற்பகல் வரை ஆசிரி யர்கள் காக்க வைக்கப்பட்டனர். அதன் பின்னர் அவர்கள் வட மாகாணக் கல்வி அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடிவிட் டுச் சென்றனர். (த-4)

விளையாட்டு

ஆஸியில் மனதை உலுக்கிய ஹியூக்ஸின் இறுதிச் சடங்கு

இந்திய பிரதமர் மோடி இந்தியகிரிக்கெட்அணியின் முன்னாள் ஜாம்ப வான் சச்சின் ஆகியோர் டுவிட்டர் பக்கத்தில் ஆஸ்திரேலிய வீரர் ஹியூக் ஸுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி சமூகவலைத் தளமான டுவிட்டர் பக்கத்தில், ஆஸ்திரேலியா வில் மனதை உலுக்கிய இறுதி ஊர்வலம். பிலிப் ஹியூக்ஸ்நாங்கள்உன்னைத்தவறவிடுகிறோம். உன்னுடைய சிறந்த ஆட்டமும், உற்சாகமும் உலகம் முழுவதும் உனக்கு ரசிகர்களைப் பெற்று தந்தது. உன்னுடைய ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்' என்று குறிப்பிட்டுள் ளார்.

இதேபோல் சச்சின் டெண்டுல்கர் தனது டுவிட்டர் பக்கத்தில், 2013ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியில் பிலிப் ஹியூக்ஸ் இடம் பெற்று இருந்தபோது அவருடன் இணைந்து எடுத்த புகைப்படத்தை வெளியிட்டு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

அதில், பிலிப்பின் இழப்பு மனதுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. நீங்கள் கிரிக் கெட்டில் கற்றுக்கொள்ளவும், அதில் மிகுந்த ஏற்றம் பெறவும் காட்டிய முனைப்பு என் றும் நமக்கு பெரிய பாடமாகும்' என்று கூறி யுள்ளார். (த)

ரசிகர்களை மிரட்டுகின்றது இலங்கை கிரிக்கெட் சபை

போட்டியைக் காண வரும் ரசிகர்கள் ஹோர்ன்களை மைதானத்துக்குள் கொண்டு வர இலங்கை கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

இவற்றால் போட்டியை ரசிக்கும் பலருக்கு இடையூறு ஏற்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மைதானத்துக்குள் இவை காணப்பட்டால் பறிமுதல் செய்யப்படும் எனவும் ரசிகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(த)

இரட்டைச் சாதனை படைத்த சங்கக்கார

இங்கிலாந்து அணிக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை வீரர் சங்கக்கார இரண்டு சாதனைகளை படைத் துள்ளார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 242 ஓட்டங்கள் எடுத் தது. இதில் சங்கக்கார 63 ஓட்டங்கள் எடுத்தார். முன்னதாக இவர் 13 ஓட்டங்கள் எடுத் திருந்தபோது ஒருநாள் போட்டியில் 13 ஆயி ரம் ஓட்டங்களைக் கடந்த 4ஆவது வீரர் என்ற சிறப்பைப் பெற்றார். 37 வயதான சங்கக்கர இதுவரை 386 போட்டிகளில் விளையாடி 19 சதத்துடன் 13,050 ஓட்டங்கள் குவித் துள்ளார்.

இந்த வகையில் முதல் 3 இடங்களில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் (18,426 ஓட்டங்கள்), ஆஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் (13,704), இலங்கையின் சனத் ஜெயசூரிய (13,430) உள்ளனர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 21 ஓவர் முடிந்திருந்தபோது 2 விக்கெட்டுக்கு 136 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இதில் குக்கை (34 ஓட்டங்கள்) விக்கெட் காப்பா ளர் சங்கக்கார பிடி எடுத்தார். இதன் மூலம் ஒருநாள் போட்டியில் அதிகம் பேரை ஆட்டம் இழக்க செய்த விக்கெட் காப்பாளர் என்ற உலக சாதனையைப் படைத்தார். இவர் இதுவரை 473 பேரை (386 ஆட்டம்) வெளி யேற்றி இருக்கிறார். ஆஸ்திரேலிய இலக்கு காப்பாளர் கில்கிறிஸ்ட் 472 பேரை (287 ஆட்டம்) ஆட்டமிழக்கச் செய்ததே இதற்கு முன்பு இலக்கு காப்பாளரின் சாதனையாக இருந்தது. (த)

உலகக் கிண்ண இந்திய அணியில் இளம் சிங்கங்கள்

கழற்றி விடப்பட்ட ஷேவாக், யுவராஜ்

அடுத்த ஆண்டு நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் நடக்கவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான உத்தேச இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2015) நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் மார்ச் 29 ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்த போட்டிக் கான 30 பேர் கொண்ட இந்திய உத்தேச அணியை தெரிவு செய்வதற் காகதெரிவுக்குழுக் கூட்டம் மும்பை யில் நேற்று நடை பெற்றது.

சந்திப் பட்டில் தலை மையிலான இந் தக் கூட்டத்தில் தெரி வாளர்கள் 5 பேரும் ஆலோசித்து அணியைத் தெரிவு செய்தனர்.

இதில் கடந்த (2011) உலகக் கிண்ண போட்டியில் தொடர் நாயகன் விருது பெற்ற யுவராஜ் சிங், அதிரடி தொடக்க ஆட்டக்காரர் ஷேவாக், கவுதம் கம்பீர், யூசுப் பதான் ஆகியோர் கழற்றி விடப்பட்டுள்ளனர்.

அதேபோல் வேகப்பந்து வீச்சாளர் ஆசிஷ் நெஹ்ரா, இர்பான் பதான் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் ஆகியோருக்கும் உத்தேச அணியில் இடம் கிடைக் கவில்லை.

30 பேர் கொண்ட உத்தேச அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் விவரம்:-

டோனி, தவான், ரோஹித் சர்மா, அஜின்கியா ரஹானே, ராபின் உத்தப்பா, விராட் கோஹ்லி, ரெய்னா, அம்பத்தி ராயுடு, கேதர் ஜாதவ், தினேஷ் கார்த்திக், மனிஷ் பாண்டே, ரித்திமான் சகா, சாஹா, சாம்சன், ஆர்.அஸ்வின், பர்வீஸ் ரசூல், கரண் சர்மா, அமித் மிஸ்ரா, ரவிந்தர் ஜடேஜா, அக்சர் படேல், இஷாந் சர்மா, புவனேஷ்வர் குமார், முகம்மது சமி, உமேஷ் யாதவ், வருண் ஆரோன், தவால் குல்கர்னி, ஸ்டுவர்ட் பின்னி, மோகித் சர்மா, அசோக் திண்டா, குல்தீப் யாதவ் மற்றும் முரளி விஜய். (த)

செய்திகள்

பதவி வெற்றிடம்

வரவேற்பாளர் : பெண்

★ ஆங்கில மொழித்தேர்ச்சி
★ 30 வயதுக்கு கீழ்

தொடர்பு:
021 499 3500

வங்கித்துறை கற்கைகள்

CBF IABF DAF DABF

அனைத்துப்பாடங்களும் ஆரம்பம் - 06-12-2014 சனி-பி.ப03.00

CBM
T.P : 0777 110756
33, Temple road
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com
021567111

புதிய நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்நகர்.

கல்வியாண்டு 2015 தரம் 1 முதல் O/L வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05-12-2014 இன்று 3 மணி

- யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில் புதிய கல்வியாண்டு ஆரம்பமாகின்றன.
- தரம் 1 தொடக்கம் O/L வரையான மாணவர்களுக்கு மாதந்தோறும் பயிற்சிப் பரீட்சை
- "ஞானோதயம்" புகழ் ஆசிரியர் S.திலக் அவர்களின் வழிகாட்டலில் விசேட புலமைப்பரிசில் வகுப்புக்கள்

25 வருடகால கல்விச்சேவையில் தனித்துவமான ஆசிரியர்களின் தரமான சேவையுடன்

விக்னேஸ்வரா கல்வி நிலையம்

இல 109, பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

கல்வியாண்டு - 2015

ஆரம்பம் - 06.12.2014
சனிக்கிழமை மாலை 3.30 மணி

NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

A/L 2015, A/L 2016

கலை வர்த்தகம் தொழில்நுட்பம்

புதிய பிரிவு ஆரம்பம் 06-12-2014 சனி 8.00 மணி

அகரம் கல்வி நிலையம்

புதிய கல்வியாண்டு 2015

தரம் 06 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள் அனைத்தும்

மல்லாகத்தில் மாலை 5.15 மணிக்கும் (தமிழ்மொழிமூல வகுப்புக்கள்)

கொக்குவிலில் மாலை 4.45 மணிக்கும் (தமிழ், ஆங்கிலமொழிமூல வகுப்புக்கள்)

கார்த்திகை தீப நன்னாளில் (05.12.2014) ஆரம்பமாகின்றன.

2013 O/L பெறுபேறுகளின் அடிப்படையில்

9A, 8A } 07மாணவர்கள் மாவட்டநிலையிலும் மாணவி ஒருவர் முதலிடத்தினைப் பெற்றுள்ளார்.

"அகரம் எம்தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

சுவிற்ஸர்லாந்தில் படிக்க உழைக்க அரிய வாய்ப்பு

Business and Hotel Management School
Lucerne city, Switzerland

3 வருட விசா
100% விசா உத்தரவாதம் (நிபந்தனைகளுடன்)
O/L மட்டும் இருப்பின் 23 வயதுக்கு உட்பட்டவர்களும் பட்டதாரிகள் எனின் வயதெல்லை கிடையாது.
கிடைக்கும் விசா செங்கன் விசா?
புதிய தலைமையின் பிறப்புப் பார்வையில் முற்பணங்களும் இல்லை நுழைவுக் கட்டணங்களும் இல்லை
- முடிவுத்திகதி : 08.12.2014 -

திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

விசேட வகுப்பு

NIE இன் கல்விமாணி (MEd)
தெரிவுபரீட்சைக்கு ஞாயிறு (07/12) காலை 8.30-11.30 ஒவ்வொரு ஞாயிறும் நடைபெறும்.
SLAS பரீட்சை பிரிவு பெற்றவர்களால் இவ்வார வகுப்புக்கள் நடைபெறாது.
தொ.பே - 0704164064
யாழ்ப்பாணக்கல்லூரி மட்டப்பழப்புகள் பிரிவு(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)

பொருளியல்

NB.கஜீதரன்
B.A,HNDA,PGDE,M.A(Econ)

A/L 2015 வரவு செலவத்திட்டம்

A/L 2016 நெகிழ்ச்சி கோட்பாடு

Paper Class NEC யாழ் நகர்

A/L தமிழ் 2014 மீட்டல், பேப்பர்

பிரிவு 1 ச.ஞா-3.00
பிரிவு 2 தி.செ-8.00

நாக.தமிழிந்திரன்

முதல் இருவகுப்பும் வினாவிடை Book ம் Free (360/-)
0775478159

Science Hall
கன்னாதிட்டி-யாழ்

"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமதே ஸ்ரீ பகவதே நமஹ"

தரம் 6 முதல் O/L ற்கு | யாழ் நகரின் NO : 1

எடிசன் அக்கடமி

INTENT + EFFORT + GRACE = SUCCESS

யாழ்ப்பாணம் | கலட்டி | நல்லூர் | கொக்குவில் | சுன்னாகம்

புதிய கல்வி ஆண்டு 2015

தரம் 6 மற்றும்

தரம் 6 முதல் O/L வரையான
English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்

நாளை ஆரம்பம்

யாழ் எடிசன் காலை 8.00 மணி | கலட்டி எடிசன் மு.ப. 11.00 மணி
நல்லூர் எடிசன் பி.ப. 12.30 மணி | கொக்குவில் எடிசன் பி.ப. 2.30 மணி
சுன்னாகம் எடிசன் பி.ப. 4.30 மணி

எங்களின் சாதனைகள்
- 1999 முதல் 15 வருடங்களாக அதிகூடிய 9A
- இன்றுவரை 140 பேர் 9A
- 3 தடவை தேசிய ரீதியில் முன்னிலை
- 7 தடவை மாவட்டத்தில் முதலிடம்
- 6 தடவை International Olympiad சாதனை (2 Bronze & 1 Silver)

Contact 077 77 37 926 075 04 14 979

2013 - 16 பேர் 9A / 2012 - 12 பேர் 9A / 2011 - 19 பேர் 9A / 2010 - 11 பேர் 9A

பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் !
அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள் !!

மரண அறிவித்தல்கள்

கந்தையா சண்முகம் (நாகேந்திரம்)

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி, பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாவும் கொண்ட கந்தையா சண்முகம் (நாகேந்திரம்) நேற்று (04.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தவஞானசெல்வம் கலைவாணி, கலைரூபி, தவரூபன், தவறஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தினி, பாலகுமாரன், தில்லையம்பலம், அழகேஸ்வரி ஆகியோரின் மாமனும், கம்சிகா, சயந்திகா, சபரிசிரிசன், பானசிகா, சாருஜா, சாருகேசன், அங்கஜன், நஸ்ரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2014) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பி.ப 2 மணியளவில் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(54658) (10.6) தகவல்: குடும்பத்தினர்.

ஓம் விராட் விஷ்வபிரமனே நமஹ

திருமதி பேபி குமாரசாமி

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும், தும்பளையை வசிப்பிடமாகவும், தற்போது கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேபி குமாரசாமி நேற்று (04.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பியசேனா, ஜெயசேகரா மற்றும் பிறேமாவதி, சூரியகலா, தவஜோதி (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தவஜோதி கண்ணன் (மகன்)
021 205 2128

ஸ்ரீரங்கம், கேணியடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(54594) (10.6)

40 வது வருட நிறைவையொட்டி மாபெரும் புலமைப் பரிசு

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 2015

இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற முதல் 30 மாணவர்களுக்கு தரம் 6ற்கான கட்டணம் இலவசம்.

ஆரம்பம்- 07.12.2014 (12 மணி)

தரம் 09 இல் மாகாண மட்ட பரீட்சை எழுதிய 50 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 20 மாணவர்களுக்கு கட்டணம் இலவசம்.

இன்று தொடக்கம் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

40 வருட நிறைவை நோக்கி

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 2015

கல்வியுலகில் அன்றும் இன்றும் என்றுமே முதல் தர முன்னணி நிறுவனம்

தரம் - 06 - O/L வரை

ஆரம்பம்- 07.12.2014 (9.30மணி)

* கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.
* மாதாந்தம் பரீட்சை நடைபெறும்.

இன்று தொடக்கம் புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

Wi-Fi Hotspot ஊடாக இணைய பாவனை தொடர்பான கருத்தரங்கு

Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனமானது பொது இடங்களில் "Wi-Fi Hotspot" இனை நிறுவ ஆரம்பித்துள்ளது.
எனவே அதன் பாவனை தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை பாவனையாளர் நலன் கருதி நடத்த உள்ளது.

இடம் : யாழ். பொது நூலக கேட்போர் கூடம் காலம் : இன்று (05.12.2014) வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணி

ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொண்டு பயனுள்ள தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு: 021 222 2015

ஸ்ரீலங்கா ரெலிகொம் (பொ.வ.க)
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.